தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு
மார்ச் 2011 விலை ரூ.10/-

தமிழ்நாடு சட்டப் பேரவைத் தொகுதிகள் 2011

[ ] சட்டப் பேரவை தொகுதி எண்.

1. திருவள்ளூர் மாவட்டம்

1. கும்மிடிப்பூண்டி [1]
2. பொன்னேரி (தனி) [2]
3. திருத்தணி [3]
4. திருவள்ளூர் [4]
5. பூந்தமல்லி (தனி) [5]
6. ஆவடி [6]
7. மதுரவாயல் [7]
8. அம்பத்தூர் [8]
9. மாதவரம் [9]
10. திருவொற்றியூர் [10]

2. சென்னை மாவட்டம்

11. டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் [11]
12. பெரம்பூர் [12]
13. கொளத்தூர் [13]
14. வில்லிவாக்கம் [14]
15. திரு.வி.க.நகர் (தனி) [15]
16. எழும்பூர் (தனி) [16]
17. ராயபுரம் [17]
18. துறைமுகம் [18]
19. சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி [19]
20. ஆயிரம் விளக்கு [20]
21. அண்ணாநகர் [21]
22. விருகம்பாக்கம் [22]
23. சைதாப்பேட்டை [23]
24. தியாகராயநகர் [24]
25. மயிலாப்பூர் [25]
26. வேளச்சேரி [26]

3. காஞ்சிபுரம் மாவட்டம்

27. சோழிங்கநல்லூர் [27]
28. ஆலந்தூர் [28]
29. ஸ்ரீபெரும்புதூர் (தனி) [29]
30. பல்லாவரம் [30]
31. தாம்பரம் [31]
32. செங்கல்பட்டு [32]
33. திருப்போரூர் [33]
34. செய்யூர் (தனி) [34]
35. மதுராந்தகம் (தனி) [35]
36. உத்திரமேரூர் [36]
37. காஞ்சிபுரம் [37]

4. வேலூர் மாவட்டம்

38. அரக்கோணம் (தனி) [38]
39. சோளிங்கர் [39]
40. காட்பாடி [40]
41. ராணிப்பேட்டை [41]
42. ஆற்காடு [42]
43. வேலூர் [43]
44. அணைக்கட்டு [44]
45. கீழ்வைத்தியணான் குப்பம் (தனி) [45]
46. குடியாத்தம் (தனி) [46]
47. வாணியம்பாடி [47]
48. ஆம்பூர் [48]
49. ஜோலார்பேட்டை [49]
50. திருப்பத்தூர் [50]

5. கிருஷ்ணகிரி மாவட்டம்

51. ஊத்தங்கரை (தனி) [51]
52. பர்கூர் [52]
53. கிருஷ்ணகிரி [53]
54. வேப்பனஹள்ளி [54]
55. ஓசூர் [55]
56. தளி [56]

6. தருமபுரி மாவட்டம்

57. பாலக்கோடு [57]
58. பெண்ணாகரம் [58]
59. தருமபுரி [59]
60. பாப்பிரெட்டிபட்டி [60]
61. அரூர் (தனி) [61]

7. திருவண்ணாமலை மாவட்டம்

62. செங்கம் (தனி) [62]
63. திருவண்ணாமலை [63]
64. கீழ்பென்னாத்தூர் [64]
65. கலசப்பாக்கம் [65]
66. போளூர் [66]
67. ஆரணி [67]
68. செய்யார் [68]
69. வந்தவாசி (தனி) [69]

8. விழுப்புரம் மாவட்டம்

70. செஞ்சி [70]
71. மைலம் [71]
72. திண்டிவனம் (தனி) [72]
73. வானூர் (தனி) [73]
74. விழுப்புரம் [74]
75. விக்கிரவாண்டி [75]
76. திருக்கோயிலூர் [76]
77. உளுந்தூர்பேட்டை [77]
78. ரிஷிவந்தியம் [78]
79. சங்கராபுரம் [79]
80. கள்ளக்குறிச்சி (தனி) [80]

9. சேலம் மாவட்டம்

81. கங்கவல்லி (தனி) [81]
82. ஆத்தூர் (தனி) [82]
83. ஏற்காடு (பழங்குடி) [83]
84. ஓமலூர் [84]
85. மேட்டூர் [85]
86. எடப்பாடி [86]
87. சங்கரி [87]
88. சேலம் (மேற்கு) [88]
89. சேலம் (வடக்கு) [89]
90. சேலம் (தெற்கு) [90]
91. வீரபாண்டி [91]

10. நாமக்கல் மாவட்டம்

92. ராசிபுரம் (தனி) [92]
93. சேந்தமங்கலம் (தனி) [93]
94. நாமக்கல் [94]
95. பரமத்தி–வேலூர் [95]
96. திருச்செங்கோடு [96]
97. குமாரபாளையம் [97]

11. ஈரோடு மாவட்டம்

98. ஈரோடு (கிழக்கு) [98]
99. ஈரோடு (மேற்கு) [99]
100. மொடக்குறிச்சி [100]
101. பெருந்துறை [103]
102. பவானி [104]
103. அந்தியூர் [105]
104. கோபிசெட்டி பாளையம் [106]
105. பவானிசாகர் (தனி) [107]

12. நீலகிரி மாவட்டம்

106. உதகமண்டலம் [108]
107. கூடலூர் (தனி) [109]
108. குன்னூர் [110]

13. கோயம்புத்தூர் மாவட்டம்

109. மேட்டுப்பாளையம் [111]
110. சூலூர் [116]
111. கவுண்டம்பாளையம் [117]
112. கோயம்புத்தூர்(வடக்கு) [118]
113. தொண்டாமுத்தூர் [119]
114. கோயம்புத்தூர்(தெற்கு) [120]
115. சிங்காநல்லூர் [121]
116. கிணத்துக்கடவு [122]
117. பொள்ளாச்சி [123]
118. வால்பாறை (தனி) [124]

14. திண்டுக்கல் மாவட்டம்

119. பழனி [127]
120. ஒட்டன்சத்திரம் [128]
121. ஆத்தூர் [129]
122. நிலக்கோட்டை (தனி) [130]
123. நத்தம் [131]
124. திண்டுக்கல் [132]
125. வேடசந்தூர் [133]

15. கரூர் மாவட்டம்

126. அரவக்குறிச்சி [134]
127. கரூர் [135]
128. கிருஷ்ணராயபுரம்(தனி) [136]
129. குளித்தலை [137]

16. திருச்சிராப்பள்ளி மாவட்டம்

130. மணப்பாறை [138]
131. ஸ்ரீரங்கம் [139]
132. திருச்சிராப்பள்ளி (மேற்கு) [140]
133. திருச்சிராப்பள்ளி (கிழக்கு) [141]
134. திருவெறும்பூர் [142]
135. இலால்குடி [143]
136. மணச்சநல்லூர் [144]
137. முசிறி [145]
138. துறையூர் (தனி) [146]

17. பெரம்பலூர் மாவட்டம்

139. பெரம்பலூர் (தனி) [147]
140. குன்னம் [148]

18. கடலூர் மாவட்டம்

141. திட்டக்குடி (தனி) [151]
142. விருத்தாசலம் [152]
143. நெய்வேலி [153]
144. பண்ருட்டி [154]
145. கடலூர் [155]
146. குறிஞ்சிப்பாடி [156]
147. புவனகிரி [157]
148. சிதம்பரம் [158]
149. காட்டு மன்னார் கோயில் (தனி) [159]

19. நாகப்பட்டினம் மாவட்டம்

150. சீர்காழி (தனி) [160]
151. மயிலாடுதுறை [161]
152. பூம்புகார் [162]
153. நாகப்பட்டினம் [163]
154. கீழ்வேளூர் (தனி) [164]
155. வேதாரண்யம் [165]

20. திருவாரூர் மாவட்டம்

156. திருத்துறைப் பூண்டி (தனி) [166]
157. மன்னார்குடி [167]
158. திருவாரூர் [168]
159. நன்னிலம் [169]

21. தஞ்சாவூர் மாவட்டம்

160. திருவிடை மருதூர் (தனி) [170]
161. கும்பகோணம் [171]
162. பாபநாசம் [172]
163. திருவையாறு [173]
164. தஞ்சாவூர் [174]
165. ஒரத்தநாடு [175]
166. பட்டுக்கோட்டை [176]
167. பேராவூரணி [177]

22. புதுக்கோட்டை மாவட்டம்

168. கந்தர்வக் கோட்டை (தனி) [178]
169. விராலிமலை [179]
170. புதுக்கோட்டை [180]
171. திருமயம் [181]
172. ஆலங்குடி [182]
173. அறந்தாங்கி [183]

23. சிவகங்கை மாவட்டம்

174. காரைக்குடி [184]
175. திருப்புத்தூர் [185]
176. சிவகங்கை [186]
177. மானாமதுரை (தனி) [187]

24. மதுரை மாவட்டம்

178. மேலூர் [188]
179. மதுரை (கிழக்கு) [189]
180. சோழவந்தான் (தனி) [190]
181. மதுரை (வடக்கு) [191]
182. மதுரை (தெற்கு) [192]
183. மதுரை (மையம்) [193]
184. மதுரை (மேற்கு) [194]
185. திருப்பரங்குன்றம் [195]
186. திருமங்கலம் [196]
187. உசிலம்பட்டி [197]

25. தேனி மாவட்டம்

188. ஆண்டிப்பட்டி [198]
189. பெரியகுளம் (தனி) [199]
190. போடிநாயக்கனூர் [200]
191. கம்பம் [201]

26. விருதுநகர் மாவட்டம்

192. ராஜபாளையம் [202]
193. ஸ்ரீவில்லிபுத்தூர்(தனி) [203]
194. சாத்தூர் [204]
195. சிவகாசி [205]
196. விருதுநகர் [206]
197. அருப்புக்கோட்டை [207]
198. திருச்சுழி [208]

27. இராமநாதபுரம் மாவட்டம்

199. பரமக்குடி (தனி) [209]
200. திருவாடானை [210]
201. இராமநாதபுரம் [211]
202. முதுகுளத்தூர் [212]

28. தூத்துக்குடி மாவட்டம்

203. விளாத்திகுளம் [213]
204. தூத்துக்குடி [214]
205. திருச்செந்தூர் [215]
206. ஸ்ரீவைகுண்டம் [216]
207. ஒட்டப்பிடாரம் (தனி) [217]
208. கோவில்பட்டி [218]

29. திருநெல்வேலி மாவட்டம்

209. சங்கரன்கோவில்(தனி) [219]
210. வாசுதேவநல்லூர்(தனி) [220]
211. கடையநல்லூர் [221]
212. தென்காசி [222]
213. ஆலங்குளம் [223]
214. திருநெல்வேலி [224]
215. அம்பாசமுத்திரம் [225]
216. பாளையங்கோட்டை [226]
217. நாங்குநேரி [227]
218. ராதாபுரம் [228]

30. கன்னியாகுமரி மாவட்டம்

219. கன்னியாகுமரி [229]
220. நாகர்கோயில் [230]
221. குளச்சல் [231]
222. பத்மநாபபுரம் [232]
223. விளவன்கோடு [233]
224. கிள்ளியூர் [234]

31. அரியலூர் மாவட்டம்

225. அரியலூர் [149]
226. ஜெயங்கொண்டம் [150]

32. திருப்பூர் மாவட்டம்

227. தாராபுரம் (தனி) [101]
228. காங்கேயம் [102]
229. அவிநாசி (தனி) [112]
230. திருப்பூர் (வடக்கு) [113]
231. திருப்பூர் (தெற்கு) [114]
232. பல்லடம் [115]
233. உடுமலைப்பேட்டை [125]
234. மடத்துக்குளம் [126]

தமிழரசு

தமிழ்நாடு அரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2042

மாசி – பங்குனி

மார்ச் 2011

மலர் : 42 இதழ் : 9

ஆசிரியர் குழு

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

டாக்டர். **கே.எஸ்.பழனிசாமி,** இ.ஆ.ப.,
இயக்குநர். செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்

சே.ப.எழிலமுகன்
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்

க.குமாரவேலு

உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

ச.ஜெயலலிதா
பா.பாலசுப்பிரமணியன்
வா.பிரபுகுமார்

உதவி ஆசிரியர்கள்

த.கலைச்செல்வன்
வ.பாலசுப்பிரமணியன்
கோ.சண்முகம்
மாய குமரேசன்

நிருபர்கள்

தி.பெரியார் சாக்ரடீசு
ஜெ.ஜெயசிம்ஹன்

இதழ் உதவியாளர் / கணினி வடிவமைப்பு

அ.மதன்

கணினி வடிவமைப்பு

இரா.பாலாஜி

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்.
110,அண்ணாசாலை.
சென்னை-600 002.

தொலைபேசி : 28520407/
28520408
நிகரி : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in

**தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு.**

"மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும்; அதுபோல், மக்களுக்குக் கற்ற கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும்".

இந்த இதழில்...

- புற்றுநோயை வெல்ல கைகோர்ப்போம் 2
- அறிமுகம் – சில சுற்றுலாத் தலங்கள் 6
- ஓவியக்கலை – அகமரபும், புறமரபும் 12
- தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் 2011 17
- கணினித் தமிழ் வளர்ச்சி 19
- பழங்களின் மருத்துவ குணங்கள் 23
- நுகர்வோர் விழிப்புணர்வு – தகவல் தொகுப்பு 29
- சங்க காலப் பெண் புலவர்கள் 33
- கங்கைகொண்ட சோழபுரம் 36
- காத்திருத்தல் – சிறுகதை 41
- உலகச் செம்மொழிகள் 49
- வெறிநோய் தடுப்போம், மனிதரைக் காப்போம் 59

புற்றுநோயை வெல்ல கைகோர்ப்போம்!

பேராசிரியர் மருத்துவர். **சே.மு.சந்திரமோகன்**
துறைத்தலைவர்: இரைப்பை குடல் அறுவை சிகிச்சை துறை
சென்னை மருத்துவக் கல்லூரி, இராஜீவ்காந்தி அரசு பொதுமருத்துவமனை, சென்னை.
மரு.உ.பெ.சீனிவாசன், முதுநிலை மாணவர்


பேராசிரியர் மருத்துவர். சே.மு.சந்திரமோகன்

உலகில் ஆண்டுக்கு 127 இலட்சம் மக்கள் தங்களுக்கு புற்றுநோய் இருப்பதை கண்டறிகிறார்கள். இவர்களில் 76 இலட்சம் பேர் உயிரிழக்கிறார்கள். மனதை வேதனை அடையச் செய்யும் இந்த உயிரிழப்புகள் இரண்டில் மூன்று பங்கு வளரும் நாடுகளில் நிகழ்கிறது.

புற்றுநோயினால் ஏற்படும் உயிரிழப்பு 2030இல் இதைவிட 80 சதவிகிதம் அதிகமாகும் என்றும், இதில் பெரும்பான்மையானவை வளரும் நாடுகளில் நிகழும் என்றும் உலக சுகாதார நிறுவனம் கணிப்பு வெளியிட்டுள்ளது. அதாவது வருடத்திற்கு 260 இலட்சம் புது புற்றுநோயாளிகள். அதில் 170 இலட்சம் உயிரிழப்புகள்! எய்ட்ஸ், மலேரியா, டி.பி. ஆகிய நோய்கள் கூடி ஏற்படும் உயிரிழப்புகளை காட்டிலும் அதிகமான இறப்புகள் புற்றுநோயினால் ஏற்படக்கூடும் என்பதே அதன் சாராம்சம்.

புற்றுநோய் இறப்புகளில் மூன்றில் ஒரு பங்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாலும் தொடக்க நிலையில் கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப் பட்டாலும் தவிர்க்கப்படக்கூடியவை என்று ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

சர்வதேச புற்றுநோய் தடுப்பு ஒருங்கிணைப்பின் தலைமை அலுவலகம் சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனிவாவில் இயங்கி வருகிறது. உலகில் புற்றுநோய்ச்சுமை அதிகரித்து வருவதாகவும், நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் நிலைமையை சமாளிக்க வசதி வாய்ப்புகள் இல்லாத ஏழை மற்றும் வளரும் நாடுகளில் 2015ஆம் ஆண்டு வாக்கில் இறப்பு விகிதம் மிகவும் அதிக அளவில் காணப்படும் என்பது இந்த இயக்கத்தின் கணிப்பு.

புற்றுநோய் ஏற்படுத்தும் காரணங்களாக எண்ணிடலங்கா நேரடி மற்றும் மறைமுக காரணங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றில் பல 'வாழ்க்கை முறை' சம்பந்தப்பட்டவை. இவற்றை தவிர்ப்பதன் மூலம் புற்றுநோயை ஆரம்பத்திலேயே தவிர்க்க முடியும்.

புற்றுநோய் வராமல் தவிர்ப்பதற்கான சில வழிமுறைகள் :

புகையிலை தவிர்த்தல், நல்ல உணவுப் பழக்கங்களை கடைப்பிடித்தல், உடற்பயிற்சி, ஆராக்கியமான உணவு அருந்துதல், சுற்றுச்சூழல் சுகாதாரம், புற்றுநோய் உண்டாக்கும் கிருமிகளிலிருந்து பாதுகாத்தல், மது அருந்துவதை தவிர்த்தல்.

புகையிலை

புகையிலை உபயோகித்தால் நுரையீரல் மற்றும் இருதய பாதிப்பு மட்டும் வரும் என பலரும் எண்ணியிருக்கின்றார்கள். ஆனால் அதற்கும் மேலாக, புகையிலை புற்றுநோய்க்கான மிகப்பெரிய காரணகர்த்தா என்பதை பலரும் உணர்வதில்லை. புற்றுநோயினால் இறப்பவர்களில் 25 சதவிகிதத்திற்கும் அதிகமானவர்கள் புகைப்பிடிப்பவர்கள். உலகில் புகையிலை 6 வினாடிகளுக்கு ஒருவரின் உயிரைக்குடிக்கிறது.



வருடத்திற்கு 10இல் ஒரு நபரின் இறப்புக்கு காரணமாகவும், 50 இலட்சத்திற்கும் அதிகமான மக்களின் உயிருக்கு எமனாகவும் புகை திகழ்கிறது.

புகைபிடிப்பவரை மட்டுமன்றி, அருகாமையில் இருப்பவர்களையும் பாதிக்கிறது. புகைப்பழக்கம் உள்ள பெண்களுக்கு பிறக்கும் குழந்தைகளையும் பாதிக்கிறது.

வாய்புற்றுநோய் ஆண்களுக்கு 27 மடங்கும், பெண்களுக்கு 6 மடங்கும் அதிகரிக்கச் செய்கிறது புகையிலை.

மூச்சுக்குழாய் புற்றுநோய், ஆண்களுக்கு 10 மடங்கும், பெண்களுக்கு 8 மடங்கும் அதிகரிக்கக் காரணமாகிறது.

உணவுக்குழாய் புற்றுநோய் பத்து மடங்கும், இரைப்பை புற்றுநோய் ஐம்பது சதவிகிதம் அதிகமாகவும் புகைப்பவர்களை பாதிக்கின்றது.

புகைபிடிப்பவர்களுக்கு கணையப் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு 2 மடங்கு அதிகரிக்கப்பட்டு விடுகிறது. 40 சிகரெட்டுகளுக்கு மேல் பிடிப்பவர்களுக்கு இந்த ஆபத்தானது 5 மடங்கு அதிகரித்து விடுகிறது.

இந்த ஆபத்தானது குடிப்பழக்கமும் இணைந்திருந்தால் மேலும் பன்மடங்கு அதிகரித்து விடுகிறது.

புற்றுநோயாளிகளில் பலருக்கு புகைப்பழக்கம் மற்றும் குடிப்பழக்கமும் இருப்பது முக்கியமான காரணகர்த்தாவாக இருப்பது வருத்தமளிப்பதாக உள்ளது.

உணவு

சீரண மண்டலம் மட்டுமல்லாது பல புற்றுநோய்கள் வராமல் தடுப்பதில் உணவு முக்கிய பங்கு வகிக்கிறது.

“ஆரோக்கியமான உணவுப் பழக்கம்” பல புற்றுநோய்கள் வராமல் தடுக்க வல்லது. முக்கியமாக உடற்பயிற்சியும் உடனிருந்தால் மிகவும் பலனளிக்க வல்லது.

புற்றுநோயை எதிர்த்து போராடும் பல மருத்துவக் கழகங்கள் பின்வரும் ஆலோசனைகளை பரிந்துரைக்கின்றன.

- பருமனாக இல்லாமல் நோயின்றி ஒல்லியாக இருப்பது நல்லது.
- குறைந்தபட்சம் 10 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்யவும்.
- மிகவும் இனிப்பான பானங்கள் தவிர்க்கவும்.
- அதிகமான அளவு காய்கறிகள், பழங்கள், முழு தானியங்கள் மற்றும் பருப்பு வகைகளை உட்கொள்ளவும்.
- பதனிடப்பட்ட மற்றும் சிவப்பு புலால் உண்பதை குறைக்கவும்.
- மது தவிர்க்கவும்.
- உணவில் உப்பு குறைக்கவும்.
- சமைத்த எண்ணெயை மறுபடி மறுபடி உபயோகிப்பதை தவிர்க்கவும்.

புற்றுநோய் உண்டாக்கும் கிருமிகள்

வளர்ந்த நாடுகளில் 22 சதவிகிதமும், தொழில் வளர்ச்சி கண்ட நாடுகளில் 6 சதவிகிதமும், புற்றுநோய் இறப்புகள் புற்றுநோய் உண்டாக்கும் கிருமிகளால் நிகழ்வதாக கண்டறியப்பட்டுள்ளது.

இவற்றில் முக்கியமானவை கருப்பைவாய் புற்றுநோய் வைரஸ் (Human Papilloma Virus) கிருமியும், கல்லீரல் புற்றுநோய் உண்டாக்கும் Hepatitis B & C ஆகும்.

சுற்றுச்சூழல் புற்றுநோய் காரணிகள்

சில புற்றுநோய் உண்டாவதற்கு சுற்றுச்சூழல் சம்பந்தப்பட்ட காரணிகளும் உள்ளன. அசுத்தமான காற்று மற்றும் சில வேதிப்பொருட்கள் நுரையீரல் புற்றுநோய்க்கு காரணமாக உள்ளன. அதுபோல, உணவில் சேரும் சில வேதிப்பொருட்கள் சீரண மண்டல புற்றுநோய் உண்டாக்குகிறது.

இரைப்பை அறுவை சிகிச்சைத்துறை, ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை எத்திராஜ் கல்லூரி (பெண்கள்) Clinical Nutrition துறையுடன் சேர்ந்து நடத்திய ஆராய்ச்சியின்

முடிவுகள் சில பளிச்சிடும் உண்மைகளை தெளிவுப்படுத்தியுள்ளது.

100 நோயாளிகளில், 98 பேர் பதப்படுத்தப்பட்ட உணவு, மீந்த அரிசி சாதம், கருவாடு, ஊறுகாய் முக்கியமாக பழையசாதம் மற்றும் ஊறுகாய் அதிகமாக உட்கொண்டிருப்பதாக தெரியவருகிறது.

மேலும் 97 பேர் ஏற்கெனவே பொரிப்பதற்கு உபயோகிக்கப்பட்ட சமையல் எண்ணெயை மறுபடியும் பலமுறை உபயோகித்திருப்பதாக தெரிகிறது. 77 பேர் மூன்று முறைக்கும் மேலாக அவ்வாறு உபயோகித்துள்ளனர். 88 பேர் புலால் உண்பவர்கள்.

78 பேர் 25–30 கிராம் உப்பு தினத்திற்கும் சாப்பாட்டில் சேர்த்து கொண்டிருக்கிறார்கள்.

74 பேர் நாளொன்றுக்கு 20 கிராம் மிளகாய் தூள் உணவில் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இத்துடன் மட்டுமல்லாது 73 பேர் புகைப்பழக்கம் உள்ளவர்கள். 37 பேர் புகையிலை மென்பவர்கள். 33 பேர் தினமும் மது அருந்துபவர்கள்.

21 பேர் மட்டுமே உடற்பயிற்சி செய்யும் பழக்கம் உள்ளவர்கள். நூற்றில் 2 பேர் மட்டுமே காய்கறிகள் மற்றும் பழங்கள் சீராக உட்கொள்ளும் பழக்கத்துடன் இருந்திருக்கிறார்கள்.

Indian Scenario : நமது நிலை

புற்றுநோய் பதிவேட்டில் வெளியிடப்பட்டுள்ளபடி ஆண்களில் நுரையீரல் புற்றுநோய் முதலிடம், இரைப்பை புற்றுநோய், வாய்ப் புற்றுநோய், உணவுக்குழாய் புற்றுநோய், தொண்டைப் புற்றுநோய் ஆகியவை முறையே அடுத்தடுத்த இடங்களையும் வகிக்கின்றன.

பெண்களில் மார்பகப் புற்றுநோய் முதலிடமும், கருப்பைவாய், சினைப்பை, இரைப்பை ஆகியவற்றில் ஏற்படும் புற்றுநோய் முறையே அடுத்தடுத்த இடங்களையும் வகிக்கின்றன.



புகை பிடித்தலால் ஏற்படும் நுரையீரல் புற்றுநோய்

மகப்பேறு உறுப்புகள் நீங்கலாக எடுத்துக் கொண்டால் தமிழகத்தில் இரைப்பை புற்றுநோய் இரண்டாம் இடம் வகிக்கிறது.

உணவுக்குழாய் புற்றுநோய் ஆண், பெண் இருவரிடத்தும் நான்காம் இடம் வகிக்கிறது. (மகப்பேறு உறுப்புகள் நீங்கலாக பெண்களில் மூன்றாவது இடம்)

புற்றுநோய் பதிவேடு 2010 வெளியீட்டின்படி வாயிலிருந்து இரைப்பை வரையிலான புற்றுநோய் 25.4 சதவிகிதம் ஆண்களிலும், 14.4 சதவிகிதம் பெண்களிலும் ஏற்படுவதாக தெரியவந்துள்ளது.

இவற்றில், ‘புகையிலை சம்பந்தப்பட்டவை–வாய்ப் புற்றுநோய், தொண்டைப் புற்றுநோய், மூச்சுக்குழாய், நுரையீரல், உணவுக்குழாய், கணையம் மற்றும் சிறுநீர்ப்பை ஆகியன 44 சதவிகிதம் ஆண்கள் மற்றும் 16 சதவீதம் பெண்களை பாதித்துள்ளது.



உறுதிமொழி

சர்வதேச புற்றுநோய் தடுப்பு ஒருங்கிணைப்பானது, 'உலக புற்றுநோய் உறுதிமொழி' ஏற்படுத்த முனைந்துள்ளது. அதன் இலக்கை 2020க்குள் அடைந்து விட வேண்டும் என்பதே இவர்களின் நோக்கம்.

குறிக்கோள்கள்

- புகையிலை உபயோகத்தையும், மதுப் பழக்கத்தையும், உடல் பருமனையும் முக்கியமான அளவு குறையச் செய்வது.
- நோய்த்தடுப்பு மருந்துகள் மூலம் Hepatitis B&C மற்றும் HPV கிருமி ஆகியவற்றை கட்டுப்படுத்தி கல்லீரல் மற்றும் கருப்பைவாய், புற்றுநோய் ஏற்படுவதை தடுத்தல்.
- புற்றுநோயாளிகள் அனைவருக்கும் வலி நிவாரணி கிடைக்கச் செய்தல்.
- புற்றுநோய் சம்பந்தப்பட்ட மூடநம்பிக்கை மற்றும் பழக்கவழக்கங்களை களைதல்.

நம் கடமை

பெரும்பாலான புற்றுநோயாளிகள் நோய் முற்றிய நிலையில் கண்டறியப்படுவது நமது சமுதாயத்தில் அதிகமாக காணப்படும் நிலை வருத்தத்திற்குரியது. நம்நாட்டில் நடத்தப்பட்ட பல்வேறு கணக்கெடுப்புகளில் 60–70 சதவிகிதம் பேர் நோய் முற்றிய, சிகிச்சை எதுவும் செய்ய இயலாத நிலையிலேயே வருகிறார்கள்.

இதற்கான மிக முக்கியமான காரணம் புற்றுநோய் குறித்த மூடநம்பிக்கை, விழிப்புணர்வு இல்லாமை, உதாசீனம், ஆரோக்கியமில்லாத உணவுப் பழக்கம் (பதப்படுத்தப்பட்ட உணவு உட்கொள்ளுதல்) புகைப்பழக்கம் மற்றும் குடிப்பழக்கமேயாகும்.

சுகாதாரத்துறையில் உள்ளவர்களுக்கான முக்கியமான கடமையானது பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல், மூடநம்பிக்கைகளை களைதல், ஆரோக்கியமான உணவு பழக்கவழக்கம் குறித்த தகுந்த ஆலோசனை வழங்குதல் மற்றும் உடற்பயிற்சியின் அருமையை புரியவைப்பதே ஆகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக பொதுமக்கள், தங்களுக்கு ஏற்படும் நோய் அறிகுறிகளை உதாசீனப்படுத்தக் கூடாது. உடனடியாக மருத்துவரை அணுகி தகுந்த சிகிச்சையினை, காலம் கடத்தாது மேற்கொள்ள வேண்டும்.

புற்றுநோய் இல்லாத உலகத்தை உருவாக்க ஒவ்வொருவரும் பாடுபடவேண்டும். இந்த செய்தியினை பரப்ப நீங்கள் ஒரு மருத்துவராக இருக்க வேண்டிய அவசியமில்லை.

கைகோர்ப்போம் : புற்றுநோயை வெல்வோம் !!

புற்றுநோய் எதிர்ப்பு போராட்டத்தில்
நாம் அனைவரும் கைகோர்ப்போம்!
வெற்றி கொள்வோம்!!

★ ★ ★



அறிமுகம் - சில சுற்றுலாத் தலங்கள்

பழவேற்காடு ஏரி (புலிகாட் லேக்)



பழவேற்காடு ஏரி, இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய உப்புநீர் ஏரியாகும். இது சென்னைக்கு வடக்கே 40 கி.மீ. தூரத்தில் உள்ளது. பழவேற்காடு ஏரி அரிய பறவைகள் இனப்பெருக்கம் செய்யும் இடமாக உள்ளது. இந்த ஏரிக்கு அருகில் 16 தீவுக் கிராமங்கள் உள்ளன. இந்த ஏரி, தமிழக சுற்றுச்சூழல் சுற்றுலாவிற்கு ஏற்ற ஒரு முக்கிய இடமாகவும் உள்ளது. பல்வேறு கடல்வாழ் உயிரினங்கள் வளர இந்த ஏரி மிகச்சிறந்த இடமாக உள்ளது. இங்கு வந்து செல்லும் பறவைகளில் முக்கியமானது "ஃபிளமிங்கோ" பறவையாகும். ஆண்டு தோறும், ஏறத்தாழ 15,000 ஃபிளமிங்கோ பறவைகள் இந்த ஏரிக்கு வருகிறது.

ஏலகிரி மலை



ஏலகிரி மலை, ஜோலார்பேட்டை பஞ்சாயத்தில், வேலூர் மாவட்டத்தில் உள்ள மலை வாசஸ்தலமாகும்.

கிழக்கு மலைத் தொடர்ச்சியில், கடல் மட்டத்தில் இருந்து 1,000 மீட்டர் உயரத்தில் இருக்கும் ஏலகிரியை ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கிறார்கள். ரம்மியமான காலநிலை, சுற்றுப்புறத்தில் இயற்கை காட்சிகள் என இனிமையான சுற்றுலாத்தலமாக உள்ளது. மேலும், மலைப்பாதை நடைப்பயிற்சிக்கு உகந்த இடமாக உள்ளது.

திருக்கடையூர்



திருக்கடையூர், மயிலாடுதுறைக்கும் தரங்கம்பாடிக்கும் இடையில் அமைந்துள்ளது. இத்தலம் சிவன் வீரச்செயல் புரிந்த (அஷ்ட வீரத்தலம்) எட்டுத் தலங்களில் ஒன்றாக விளங்குகிறது. இத்தலத்தின் தலபுராணத்தின் படி சிவபெருமான் எமனை சம்காரம் செய்து மார்கண்டேயரின் உயிரை காத்தார். மேலும் இது ஒரு சக்தித் தலமாகும். 60 வயது பூர்த்தியடைந்து 61ஆவது வயது தொடங்குகிறவர்கள் சஷ்டியப்தபூர்த்தி பூஜை செய்கிறார்கள்.

இத்தலத்திற்கு சுற்றுலாப் பயணிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், இந்திய வம்சாவழியினர் உலகின் பல இடங்களிலிருந்தும் வருகின்றனர்.

பெரியபாளையம்

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பெரியபாளையம் அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயில் தமிழ்நாட்டில் உள்ள முக்கியமான வழிபாட்டுத் தலங்களில் ஒன்றாகும். ஏராளமான பக்தர்கள் தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநிலத்தின் பல பகுதிகளில் இருந்து இத்தலத்திற்கு வருகை தருகின்றனர்.

வேதாரண்யம்



வேதாரண்யம், நாகப்பட்டினத்தில் இருந்து 45 கி.மீ. தொலைவில் இருக்கிறது. ஜூலை–ஆகஸ்ட் மற்றும் ஜனவரி–பிப்ரவரி மாதங்களில் வரும் பௌர்ணமி நாளில் நடைபெறும் திருவிழா மிக பிரசித்தம்.

தரங்கம்பாடி

தரங்கம்பாடி, நாகப்பட்டினத்திலிருந்து 35 கி.மீ. வடக்கே, வங்காள விரிகுடா கடற்கரையில் அமைந்துள்ளது. தரங்கம்பாடி கடற்கரையோரம் அமைந்துள்ள மாசிலாமணிநாதர் கோயில் கடல் நீர் அரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளது. டேனிஷ் கோட்டை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. டேனிஷார் இக்கோட்டையை 1845இல் ஆங்கிலேயேரிடம் ஒப்படைக்கும் வரை, தங்களது வியாபார மையமாக வைத்திருந்தனர். இக்கோட்டை பாதுகாக்கப்பட்ட தொல்லியல் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திருமணஞ்சேரி

திருமணஞ்சேரியில் 11ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட அருள்மிகு உத்வாகநாத சுவாமி திருக்கோயில், நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள மயிலாடுதுறையிலிருந்து 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்குள்ள கல்வெட்டுகளிலிருந்து இத்திருக்கோயில் (ராஜகோபுரம்) திருப்பணி நல்லப்ப நாயக்கரால் செய்யப்பட்டது. 11ஆம் நூற்றாண்டில் செம்பியன் மாதேவியார் இங்கு வழிபட்டார் எனத் தெரியவருகிறது. இத்திருத்தலம் நவகிரகத் தலங்களுக்கு நடுவில் அமைந்திருப்பதால், திருமணம் ஆகாமல் தடைபட்டு நிற்பவர்கள் திருமணஞ்சேரி

கோயிலில் வழிபட்டால் வெகு விரைவில் திருமணம் ஆகும் என நம்பப்படுகிறது. மேலும், குழந்தைப்பேறு இல்லாத தம்பதியினர் இத்தலத்தில் வழிபடுவதன் மூலம் குழந்தைபேறு உண்டாகும் எனவும் நம்பப்படுகிறது.

சித்தன்னவாசல்

சித்தன்னவாசல், புதுக்கோட்டையில் அமைந்துள்ள சிறந்த தொல்லியல் இடமாகும். இந்திய வரலாற்றில் குகை ஓவியங்களில் அஜந்தா ஓவியங்களுக்கு அடுத்தபடியாக சிறப்பாகக் கருதப்படுவது சித்தன்னவாசல் குகை ஓவியங்கள்தான். கி.மு.3ஆம் நூற்றாண்டுக்கும், கி.பி.13ஆவது நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலக் கல்வெட்டுகள் இங்கு மட்டும்தான் உள்ளன. மேலும் பெருங்கற்காலம் நினைவுச்சின்னங்கள், பாறை வட்டுகள், முதுமக்கள் தாழிகள் போன்றவை அங்குள்ள நிலப்பரப்பில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

புளியன்சோலை

புளியன்சோலை என்ற இயற்கை அழகுள்ள இடம் திருச்சியில் இருந்து 72 கி.மீ. தூரத்தில் உள்ளது. பசுமையான, குளுமையான வனப்பகுதியில் அமைந்துள்ள இந்த இடத்திற்கு கூடுதல் அழகூட்டும் வகையில் சிறிய அருவியும், ஓடையும் அமைந்து உள்ளது. ஒருநாள் சிற்றுலா செல்ல மிகச் சிறந்த இடமாக புளியன் சோலை திகழ்கிறது.

தாரமங்கலம்



சேலம் மாவட்டத்தில், சேலத்திலிருந்து 33 கி.மீ. தூரத்தில் உள்ள தாரமங்கலத்தில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ கைலாசநாதர் கோயில் அமைந்து உள்ளது. இக் கோயிலில் அமைந்துள்ள ஆமை, மீன், குரங்கு, முதலை போன்ற வடிவங்கள் சுவற்றிலும், கருங்கல் மேற்கூரையிலும் செதுக்கப் பட்டுள்ளது. இங்குள்ள கோபுரம் சுதை சிற்பங்களை கொண்ட அடுக்குகளாக நிர்மாணிக்கப் பட்டுள்ளது. ரதி–மன்மதன், இராமாயண பாத்திரங்களான வாலி–சுக்ரீவன், வாயினுள் சுழலும் கல் இருக்கும் யாளி, மேற் கூரையில் சுழலும் தாமரை போன்ற சிற்பங்கள் சிறப்பானவையாக உள்ளது.

கொல்லிமலை

நாமக்கல் மாவட்டத்தில், சேலத்திலிருந்து 78 கி.மீ. தூரத்திலும், நாமக்கல்லிலிருந்து 40 கி.மீ. தூரத்திலும் கிழக்குத் தொடர்ச்சி மலையில் கொல்லி மலை அமைந்து உள்ளது. இது ஒரு பிரசித்திப் பெறாத சுற்றுலா மையமாக உள்ளது. இங்குள்ள அரபளீஸ்வரர் கோயில், எட்டுக்கை அம்மன் கோயில், ஆகாயகங்கை அருவி, இயற்கைக் காட்சிகள், மூலிகையிலான பொருள்கள் விற்பனை போன்ற பல சிறப்புகள் கொல்லிமலையை சிறந்த சுற்றுலாத்தலமாக்கி உள்ளது. தியானம் செய்வதற்கும், சுற்றுச்சூழல் சுற்றுலா என்ற வகையிலும் கொல்லிமலை மிகச் சிறப்பாக திகழ்கிறது.



ஒகேனக்கல்

காவிரி ஆற்றில் மிகவும் ரம்மியமான சூழலிலும், இயற்கை காட்சிகளோடும் ஒகேனக்கல் அருவி அமைந்துள்ளது. தமிழ்நாடு மற்றும் கருநாடகம் ஆகிய மாநிலங்களின் எல்லையில் ஒகேனக்கல், ஒசூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய அழகான இடங்கள் இங்கு உள்ளது. தமிழகத்தில் உள்ள மிக அழகான ஒரு சுற்றுலாத்தலம் ஒகேனக்கல் என்றால் அது மிகையாகாது. தண்ணீர் விழும்போது ஏற்படும் புகை போன்ற சாரல் பாறைகளில் இருந்து தோன்றுவது போல் இருப்பதால் இதற்கு ஒகேனக்கல் என்ற பெயர் ஏற்பட்டது. ஹொகேனேகல் என்ற கன்னட சொல்லுக்கு “புகையும் கல்பாறை” என்று பொருள். பலவகையான மூலிகைகள் உள்ள வனப்பகுதியை காவிரி கடந்து, பின் அருவியாக வருவதால் உடல்நலத்திற்கு மிகவும் நல்லதாகும். நடந்து சென்றும், மலையேற்றம் செய்தும் அருவியைச் சுற்றி உள்ள மிக உயர்ந்த, கரடுமுரடான மலைகள் அமைந்த இயற்கைக் காட்சியை ரசிக்கலாம்.

பவானி கூடுதுறை

பவானி, காவிரி மற்றும் அமுதா ஆகிய நதிகள் சங்கமிக்கும் இடம் பவானி கூடுதுறை என பெயர் பெற்றுள்ளது. இங்குள்ள இயற்கையெழில் பல சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது. அருள்மிகு சங்கமீஸ்வரர் திருக்கோயில் இங்குள்ளது.



வால்பாறை

கோயம்புத்தூர் மாவட்டத்தில் அமைந்துள்ள வால்பாறை மலையின் மேல் தேயிலைத் தோட்டங்களுக்கு நடுவில் அமைந்த ஒரு நகராட்சி ஆகும். தேயிலை, காப்பி, ஏலக்காய் போன்றவை இங்கு பயிரிடப்படுகிறது. வால்பாறை மலையடிவாரத்தில் உள்ள குரங்கு அருவிக்கு நூற்றுக்கணக்கான மக்கள் வருகின்றனர். இங்கிருந்து வனத்தில் உள்ள அருவியினை பார்க்கலாம். ஆசியாவிலேயே



இரண்டாவது பெரிய அணையான சோலையார் அணை இங்கிருந்து 15 கி.மீ. தூரத்தில் உள்ளது.

மேகமலை

தேனி மாவட்டத்தில் இயற்கை அழகோடு அமைந்துள்ள இடம் மேகமலை. இங்கு தேயிலை, காபி தோட்டங்களுடன், ஏலக்காய் பயிரிடப்படுகிறது. கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 1,500 மீட்டர் உயரத்தில் உள்ள மேகமலை தாவரங்களும், விலங்குகளும் நிறையப் பெற்ற ஒரு மலைவாசஸ்தலமாகும்.

சிறுமலை

திண்டுக்கல் மாவட்டத்தில், திண்டுக்கல்லில் இருந்து 40 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள மலை வாசஸ்தலம் சிறுமலை. இங்குள்ள தட்பவெப்பநிலை ஆரோக்கியமானதாகவும், சீராகவும் அமைந்துள்ளது. 800 அடி முதல் 1,200 அடி உயரமே உள்ளதால் சிறுவர் முதல் முதியவர் வரை அனைவரும் சென்று வர சிறந்த இடமாக அமைந்துள்ளது. அடர்ந்த தாவரங்களும், காபி, பலாப்பழம், வாழைப்பழம், எலுமிச்சை பழம் ஆகியவை சுற்றுலாப் பயணிகளுக்கு மேலும் ஆர்வத்தைச் சேர்க்கிறது. அகஸ்தியர்புரம் மற்றும் தென்மலை ஆகியவை சிறுமலையில் பிரசித்திப் பெற்ற சுற்றுலா இடங்களாகும். மழைக்கால விடுமுறையில் செல்ல உகந்த இடமாக சிறுமலை உள்ளது.

திருப்புடைமருதூர்

திருநெல்வேலியிலிருந்து 40 கி.மீ. தூரத்தில் உள்ள திருப்புடைமருதூரில் அதளநாதர் கோயில், நரும்பூநாதர் கோயில் தாமிரபரணி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. இயற்கையெழிலுக்காகவே இவ்விடம் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது. பாண்டிய, சேர, சோழ மற்றும் விஜயநகர கோயில் கட்டடக்கலை இங்குள்ள கோயில்களில் வெளிப்படுகிறது.

திற்பரப்பு

திற்பரப்பு என்றால், ''அழகும், புனிதமும் உள்ள இடம்'' என்பதாகும். கன்னியாகுமரியிலிருந்து 70 கி.மீ.

தொலைவில் அமைந்துள்ள திற்பரப்பில் உள்ள திற்பரப்பு அருவி பார்த்து மகிழவும், குளித்து புத்துணர்ச்சி பெறவும் சிறந்த இடமாகும். பசுமையான மலைகளின்

பின்னணியில் கோயிலின் பரந்த அமைப்பும், கோயிலுக்கு முன்னால் வற்றாமல் ஓடிக்கொண்டிருக்கும் கொடயூர் ஆறும் பார்த்து பரவசப்பட வேண்டிய ஒன்றாக விளங்குகிறது.

கல்வராயன் மலை

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலை சுமார் 600 ச.கி.மீ. பரப்பளவில் 1,190 மீ. உயரம் உள்ளது. இம்மலையில் மிதமான தட்பவெப்பநிலையும், அமைதியான சூழலும் நிலவுகிறது. மலையின் மேல் உள்ள இரண்டு அருவிகளுடன் ஒரு தாவரவியல் பூங்காவும் உள்ளது. மலைப்பாதை நடைப்பயிற்சிக்கு உகந்ததாக இம்மலை அமைந்துள்ளது.

பொள்ளாச்சி

கோவை மாவட்டத்தில் கோவைக்கு தெற்கே 40 கி.மீ. தூரத்தில் நகராட்சி தரத்தில் உள்ள இடம் பொள்ளாச்சி. விவசாயப் பொருட்களுக்கான பெரிய சந்தையாகவும், முக்கிய வணிகப் பகுதியாகவும் இது திகழ்கிறது. இந்திராகாந்தி தேசிய பூங்காவிற்கு அருகில் அமைந்துள்ள பொள்ளாச்சி, மேற்குமலைத் தொடர்ச்சிக்கு அருகாமையில் இருப்பதால் ஆண்டு முழுவதும் ரம்யமான தட்பவெப்பநிலை கொண்டுள்ளது.

கூத்தனூர்

கூத்தனூர் திருவாரூரில் இருந்து 22 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கூத்தனூர் என்ற பெயர்



புலவர் ஒட்டக்கூத்தர் என்ற பெயரிலிருந்து வந்ததாகும். கல்விக் கடவுளான சரஸ்வதி அம்மனுக்கு உள்ள ஒரே கோயிலாக இங்குள்ள ஸ்ரீ சரஸ்வதி கோயில் திகழ்கிறது.

குரங்கணி

தேனி மாவட்டத்தில் உள்ள குரங்கணி கிராமத்தில் அதிக அளவில் ஏலக்காய், பஞ்சு, மிளகாய் போன்றவை வியாபாரம் செய்யப்படுவதால் பிரபலமடைந்துள்ளது. கிராமப்புரச் சுற்றுலாவை மேம்படுத்த இந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீவில்லிபுத்தூர்



விருதுநகர் மாவட்டத்தில் உள்ள நகராட்சி நகரம் ஸ்ரீவில்லிபுத்தூர். விருதுநகர்–தென்காசி இரயில்வே பாதையில், மதுரையிலிருந்து 74 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது.

ஸ்ரீவில்லிபுத்தூரார் ஆலயத்தில் அமைந்துள்ள 12 அடுக்கு கோபுரம் ஒரு முக்கியமான கட்டடமாக உள்ளது. இந்த கோபுரமே தமிழ்நாடு அரசின் இலச்சினையாக உள்ளது.

தளி

கருநாடக மாநிலத்திற்கு அருகில், ஒசூரிலிருந்து 25 கி.மீ. தூரத்தில் தளி அமைந்துள்ளது. பல மலைக் குன்றுகள் சூழ்ந்துள்ள இந்த இடம், வருடம் முழுதும் குளுமையான தட்பவெப்பநிலையுடன் உள்ளது. இது சின்ன இங்கிலாந்து என பெயர்பெற்றுள்ளது. இந்த வட்டத் தலைமையிடம் தேன்கனிக்கோட்டை ஆகும். கி.பி.1530இல் பாளையக்காரர்களால் கட்டப்பட்ட கோட்டை, தேன்கனிக்கோட்டையில் உள்ளது.

கொடிவேரி



கொடிவேரி, கோபிச்செட்டிப்பாளையத்தில் இருந்து 10 கி.மீ. தொலைவிலும், ஈரோட்டிலிருந்து 55 கி.மீ. தூரத்திலும் உள்ளது. கொடிவேரி அணைக்கட்டுக்கு செல்லும் பாதையில், ஒருபுறம் சலனமின்றி தெளிவாக ஓடும் தண்ணீரும், மறுபுறம் ஆவேசமாக ஆர்ப்பரித்து வரும் தண்ணீரும் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளை ஆச்சரியப்பட வைக்கும்.

பச்சைமலை

துறையூர் செல்லும் வழியில் திருச்சியிலிருந்து 80 கி.மீ. தூரத்தில் பசுமையான மலைகளுக்கிடையே பச்சைமலை அமைந்துள்ளது. பச்சைமலை பகுதி இங்கு வாழும் பழங்குடியினரின் தனிப்பட்ட கலாச்சாரத்தாலும்,

கட்டபொம்மன் கோட்டை

தூத்துக்குடி மாவட்டம், பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் நினைவுக் கோட்டை அமைந்துள்ளது. 18ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயரை முதன் முதலாக எதிர்த்தவரான வீரபாண்டிய கட்டபொம்மன் என்ற "கட்டபொம்மு" பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரராக இருந்தார். தற்போது தமிழக வரலாற்றில் பாஞ்சாலங்குறிச்சி ஒரு முக்கிய இடமாக உள்ளது.

வாழ்க்கை முறையாலும் ஒரு சொர்க்கபூமியாகத் திகழ்கிறது. மலையேற்ற பயிற்சிக்கும், இயற்கையோடு இயைந்த வனவிலங்குகளைக் காணவும் பச்சைமலை சிறந்த இடமாகும்.

பிச்சாவரம்

கடலூர் மாவட்டத்தில், சிதம்பரத்திலிருந்து 16 கி.மீ. தூரத்தில் பிச்சாவரம் அமைந்துள்ளது. இங்கு இயற்கையின் அபூர்வமான, உலகிலேயே இரண்டாவது பெரிய மாங்குரோவ் காடுகள் எனப்படும் சதுப்புநிலக்காடுகள் மிகுந்துள்ளன. ஏறத்தாழ 11,000 எக்டேர் பரப்பளவு கடல் நீரில் இக்காடுகள் பரந்துள்ளது, சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருவதற்கு ஒரு காரணியாக உள்ளது. மீன் பிடிக்கவும், படகு சவாரி செய்யவும் இது ஒரு சிறந்த இடமாகத் திகழ்கிறது.

வைகை அணை



தேனி மாவட்டத்தில் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் பார்வையிடும் ஒரு இடமாக வைகை அணை உள்ளது. வைகையிலிருந்து வரும் முல்லை ஆற்றின் குறுக்கே, ஆண்டிப்பட்டி அருகே வைகை அணை கட்டப்பட்டுள்ளது. இங்குள்ள சிறுவர் பூங்காவும், உயிரியல் பூங்காவும் பிரசித்திப் பெற்றவையாகும்.

சிக்கல்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் சிக்கல் என்ற இடத்தில் அழகான முருகன் கோவில் (சிங்காரவேலர்) மிகப்பெரிய அளவில் அமைக்கப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலில் உள்ள தூண்கள் ஒவ்வொன்றிலும் நேர்த்தியான, கலைநயம் மிக்க வடிவங்கள் செதுக்கப் பட்டுள்ளது.

திருச்செங்கோடு

திருச்செங்கோடு மலை "அழகிய இறைத்தன்மை பொருந்திய செந்நிற மலை" என்றும், "செங்குத்தான மலை" என்றும் பொருள். நாககிரி, வாயுமலை, பிரம்மகிரி, போகிமலை, சக்கிரி மேரு, தேணுகிரி என பல பெயர்களால் இத்தலம் அறியப்படுகிறது.

★

ஓவியக்கலை

அகமரபும், புறமரபும்

தற்கால ஓவியன் அல்லது சிற்பி, தனது கலை படைப்பில் ஈடுபடுகிறபோதே, இந்த மண்ணின் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளின் கலை மரபுகள் அவனைச் சூழ்ந்திருந்து, இன்றும் வாழும் கலை மரபுகளாக அவன் மீது ரேகை பதிக்கின்றன. இந்தியக் கலைஞன் தன்னை அறியாமலேயே இந்த மண்ணின் மரபுகளைச் சுவாசிக்கிறான்.

செவ்வியல் கலை மரபுகள், பழமையான இலக்கியங்கள் பேசும் கலைக்கோட்பாடுகள், இன்றும் வாழும் நாட்டுப்புர மக்கள் கலைகள், இதுவரை அதிகமாக வெளிச்சத்திற்கு வராத மலையின மக்களின் கலைகள் என்று பல்வேறு அகமரபுகள் அவனது கலை வெளிப்பாடுகளை பாதிக்கின்றன.

உதாரணமாக, தற்காலக் கலைஞன் ஒருவன் நவீனமான முறையில் ஒரு மனிதவடிவத்தைப் படைக்க முற்படுகிறபோது, அவனுக்கு முன்னால், கீழ்வாலை குகை ஓவியங்களின் ஒல்லியான உருவங்கள், எழிலுற வளைந்து நின்று தாமரை மலர் பறிக்கும் சித்தன்னவாசல் உருவங்கள், தஞ்சாவூரின் சுவரோவியங்களில் வேகம் கூட்டிச் சுழன்றாடும் நடன நங்கை, கூர்மையான நாசியும், நீண்ட முகமும் கொண்ட சமண சிற்றோவிய உருவங்கள், மீன் விழி கொண்ட பஹாரி ஓவியப் பெண்கள், நளினமற்ற உடம்புகளுடன், கை கூப்பி நிற்கும் நாயக்கர் கால ஓவிய நங்கையர் என்று அவனது அகமரபு வந்து நின்று வழி மறிக்கிறது. எல்லாவற்றையும் அவனது முன்னோர்கள் சாதித்து முடித்துவிட்டார்களோ என்கிற ஐயம் கூட அவனுக்கு வந்துவிடுகிறது.

ஆனால் தற்கால கலைஞனின் மிகப்பெரிய பலமாகிய அவனது தேடல் தாகம் அவனைச் சோர்ந்து போக விடுவதில்லை. இந்தத் தொழில்நுட்ப யுகம் அவனுக்கு அளித்த ஒரு ஜோடிக் கண்கள் அவனை இந்த உலகைப் புதிய முறையில் பார்க்க உதவி செய்கின்றன. இது படைப்பு ரீதியான ஒரு புதிய வரையறைக்கு, தான் பார்க்கும் உருவத்தை உட்படுத்து கிறது. வெட்டிப் பிரிக்கிறது. வடிவத்தை வடிகட்டுகிறது. இதனால் காலந்தோறும் மனித வடிவம் மாறாமல் இருந்து வந்த போதிலும் அதனைப் பார்க்கிற கலைஞனின் பார்வை காலந்தோறும் மாறி வந்திருக்கிறது. இந்த மாற்றம் எப்படி அந்த கலைஞனை வந்து தாக்கும் புறமரபுகள் பாதிக்கின்றனவோ, அதே அளவுக்கு அவனது அகமரபுகளும் அவனை பாதிக்கின்றன.

சங்க இலக்கியத்தில் கலை

'கலை' என்ற சொல் சங்க இலக்கியத்தில் காணப்படவில்லை. இதே போல் 'சிற்பி' என்ற சொல்லும் கிடையாது என்று கருத்துரைப்பார் சங்க இலக்கியத்தில் 'கலையும், கலைக்கோட்பாடும்' எனும் நூலை எழுதிய முனைவர்

கு.வே.பாலசுப்பிரமணியம். ஆனால் கல், மரம், மண், சுதை, யானைத்தந்தம், உலோகம் ஆகியவற்றால் படைக்கப்பட்ட உருவங்கள், 'படிமம்' என்ற சொல்லால் குறிக்கப்பட்டன. 'நடுகல்' என்ற சொல்லாலும் சிற்பம் குறிக்கப்பட்டது. ஓவியர்களை 'கண்ணுள் வினைஞர்' என்று மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது. ஓவியத் தூரிகையை 'துகிலிகை' என்று பாலை பாடிய பெருங்கடுங்கோ குறிப்பிடுகிறார். தூரிகையை 'வட்கை' என்றும், ஓவியத்தை 'வட்கைச் செய்தி' என்றும் குறிப்பிடுவதுண்டு.

"வெள்ளி யன்ன விளக்குஞ் சுதையுரீஇ
மணிகண் டன்ன மாத்திரட் டிண்காழ்ச்
செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்
உருவப் பல்பூ ஒருகொடி வளைஇக்
கருவொடு பெயரிய காண்பின் நல்லில்"

என்று சிறுபாணாற்றுப்படை மலரும், தாதும் உதிர்ந்து கிடக்கும் நீர்நிலையை ஒரு நிலக்காட்சி ஓவியமாக (Landscape Painting) வீட்டின் சுவற்றில் தீட்டி வைத்திருந்தது பற்றிப் பேசுகிறது. நெடுநல்வாடையில் "புனையா ஓவியம்" எனும் சொற்றொடர் பயிலப்படுகின்றது. இதற்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர் "வண்ணங்களைக் கொண்டெழுதாத வடிவக் கோட்டின சித்திரத்தையொப்ப" என்று உரையெழுதுகிறார். எனவே வண்ணந்தீட்டும் ஓவியங்கள் மட்டுமின்றி, கோட்டுச் சித்திரங்களும் இருந்தன என்பது பெறப்படுகிறது.

"வெண் சுதை விளக்கத்து வித்தக ரியற்றிய
கண்கவ ரோவியங் கண்டுநிற் குநரும்"

எனும் மணிமேகலைக் காப்பியத்தின் வரிகளில் "கண்கவர் ஓவியம்" பற்றிப் பேசப்படுகிறது.

சங்க இலக்கியம் முழுவதும் சுவர்களிலும், மனித உடம்புகளிலும் தீட்டப்பட்ட ஓவியங்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

நற்றிணையில் அம்மெய்யன் நாகனார் "புனை சுவர்ப் பாவையன்ன பழிதீர் காட்சி" என்று சுவரில் தீட்டப்பட்ட பாவையின் காட்சி குற்றமற்றதாக இருந்ததாக எழுதுகிறார்.

ஒன்றை மிக அழகானது என்று குறிப்பிட வருகிறபோது, அது ஓவியம்போல் இருந்தது என்கிற சொல்லாட்சி சங்க இலக்கியத்தில் நிறையக் காணப்படுகிறது.

"ஓவத்தன்ன வினை புனை நல்லில்" என்று கபிலர், ஒரு வீடு ஒரு ஓவியம்போல் எழிலுற இருந்தது என்று பேசுகிறார்.

இதையே பதிற்றுப்பத்தில் பெருங்குன்றூர்க்கிழார், "ஓவத்தன்ன உருகெழு நெடுநகர்" என்று பேசுகிறார். ராபர்ட் ப்ரெய்ன் (Robert Brain) எனும் அறிஞர் தனது "The Decorated body" எனும் நூலில் தமிழ்ப்பழங்குடி மக்களின் வாழ்க்கையில் மேனியெழுத்து என்பது சிறப்பிடம் பெற்றிருந்தது என்றும், அது இயற்கையோடும், இறையோடும் அவர்கள் கொண்டிருந்த உறவு குறித்ததாக இருந்தது என்றும் குறிப்பிடுகிறார். இதனைத் "தொய்யில் எழுதுதல்" என்று சங்க இலக்கியம் பேசுகிறது.

தொய்யில் என்பது ஒரு நீர்க்கொடி. அதனைப் போலத் தோன்றுமாறு, செம்பஞ்சுக் குழம்பும், குங்குமக் குழம்பும் கொண்டு நகம், நெற்றி, மார்பு ஆகியவற்றில் படம் வரைந்து கொள்ளும் வழக்கம் இருந்தது. அடியார்க்கு நல்லார் எனும் உரையாசிரியர் இதனை "பத்திக் கீற்று" என்று குறிப்பிடுகிறார். இந்த தொய்யில் குழம்பு என்பது சந்தனம், தேவதாரு, அகில், குங்குமம் ஆகியவற்றால் செய்யப்படுவதாகும்.

பழந்தமிழ்க் காலத்திலேயே ஓவியம் பற்றிப் பேசுகிற நூல்கள் தமிழில் இருந்தன என்பதற்கு மணிமேகலைக் காப்பியம் சான்று பகர்கின்றது.

ஓவியங்களில் மண்ணோவியம், சுவரோவியம், புடைப்போவியம் ஆகிய பலவகை ஓவியங்கள் இருந்தது குறித்தும் மணிமேகலை பேசுகிறது.

ஓவியங்களை நாம் வெறும் சுவர்களில்தான் எழுதிக் கொண்டிருந்தோம் என்றும், அண்மைக் காலத்தில்தான் துணியில் ஓவியம் தீட்டத் தொடங்கினோம் என்றும் பலர் நினைத்துக் கொண்டுள்ளனர். உண்மையில் ஓவியத்தைப் பழந்தமிழ் இலக்கியங்கள் 'படம்' என்றழைக்கின்றன. ஓவியம் தீட்ட அடிப்படையாக இருந்த துணியை "படாம்" என்று அழைத்தனர் என்று கூறுவார் அறிஞர் மயிலை சீனிவேங்கடசாமி அவர்கள்.

"உள்ளக் கிழியில் உருவெழுதி" எனும் வரிகளில், துணிச்சீலையில் அதாவது "கிழி"யில் ஓவியம் தீட்டும் மரபு இருந்தது சொல்லப்படுகிறது.

இளங்கோவடிகள், நாடக மேடைகளில் ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி ஆகிய மூன்று வகைத் திரைச் சீலைகள் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். இவற்றில் ஓவியம் தீட்டும் மரபு இருந்தது.

ஓவியக்கலையில் எழுதுதல், அளவிடல், வண்ணந்தீட்டல், பரிமாணங்காட்டல் ஆகிய நிலைகள் இருந்தது பற்றி இலக்கியங்கள் பேசுகின்றன.

சிற்பம் குறித்த திவாகர நிகண்டு கீழ்க்கண்டவாறு பேசுகிறது.

"கல்லும் உலோகமும் செங்கலும் மரமுட
மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்
கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை
பத்தே சிற்பத்தொழிற் குறிப்பாவன"

ஒரு ஊரின் அமைப்பு ஒரு பூவின் இதழ்கள் அமைக்கப்பட்டிருப்பது போன்று இருந்ததாக ஒரு செய்யுள் பேசுகிறது.

"மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும், சீருர்; பூவின்
இதழகத்து அனைய தெருவம்"

இந்த பழமையான இலக்கியங்களின் மரபுகள் இன்னமும் நமது அன்றாட வாழ்க்கையில் வாழும் மரபுகளாக உள்ளன என்பதே தமிழ் அழகியலின் சிறப்பாகும்.

பாறை ஓவியங்கள்

தமிழகத்தில் தென்னார்க் காட்டைச் சேர்ந்த கீழ்வாலை, செத்தவரை ஆகிய பகுதிகளிலும், மதுரை மாவட்டத்தில் முத்துப்பட்டி, அணைப்பட்டி, திருமலை ஆகிய பகுதிகளிலும், கோவை மாவட்டத் திலுள்ள வேட்டைக்காரன் பாளையம் போன்ற பகுதிகளின் ஓவியங்களிலும் வேட்டையாடும் காட்சி, படகில் மனிதர்கள் செல்லும் காட்சி, குதிரைமேல் ஏறிச் செல்லும் மனித உருவம் ஆகியவை இடம் பெறுகின்றன. வெள்ளை, செந்நிற வண்ணங்களில் வரையப் பட்டிருக்கும் இந்த பாறை ஓவியங்கள் சிந்துவெளி நாகரீகத்துக்கு முந்தைய காலமான வேட்டையாடி உணவுண்ட காலகட்டத்தைச் சேர்ந்தவை என்று டாக்டர்.பவுன்துரை தனது 'தமிழகப் பாறை ஓவியங்கள்' எனும் நூலில் குறிப்பிடுகிறார். இந்தப் பாறை ஓவியங்களின் பண்புக்கூறுகள் நமது தற்காலக் கலை வெளிப்பாட்டில் ஒரு அகமரபு சார்ந்த பாதிப்பாகத் தனது பங்களிப்பைச் செய்கின்றன.

சுடுமண் சிற்பங்கள்

தமிழகத்து அகமரபுகளைத் தேடுகிற பயணத்தில் ஒழுங்கு செய்யப்படாத மூலசக்தியுடனும், கம்பீரத்துடனும் நம்மைக் கவர்ந்து இழுக்கக்கூடியவை சுடுமண் சிற்பங்கள். இவை தமிழகம் முழுவதும், வெவ்வேறு அளவுகளில் செய்யப்படுபவை. ஐயனார், மதுரைவீரன் போன்ற கிராமதேவதைகளும், அவர்களது வாகனங்களான குதிரைகளும், இவற்றிக்கு படையலாகக் கொடுக்கப்படுவதற்காகத் தயாரிக்கப்படும் கன்றுக்குட்டி போன்ற சுடுமண் சிற்பங்களும் தற்காலக் கலை வெளிப்பாட்டிற்கு பெரும் பங்களித்துள்ளன.

குறிப்பாக சென்னையின் கலை இயக்கத்தின் துவக்க நாள்களிலிருந்தே இந்தச் சுடுமண் சிற்பங்கள் தற்காலச் சிற்ப வெளிப்பாட்டில் ஏராளமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

பண்ருட்டிக்குப் பக்கத்திலிருக்கும் சேமக்கோட்டை எனும் ஊரில் மிகப்பெரிய சுடுமண் குதிரை உள்ளது. இதனைச் செய்தவர்கள், இந்தச் சுடுமண் சுவர்களுக்குள் இரும்புக் கம்பிகளைப் போல, உறுதிக்காக வைக்கோலைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். இந்தச் சுடுமண் மரபு என்பது ஹரப்பா காலத்திலிருந்து தொடர்ந்து வருகிற ஒரு பழைய கலை சாதனத்தைத் தற்காலக் கலைஞனுக்கு வழங்குகிறது. ஆனால் இந்த சாதனத்தைப் பெறுகிற தற்காலக் கலைஞன் அதன் பழமையான பாணிகளையும் சேர்த்துப் பெறுவதா அல்லது கலைச் சாதனத்தை மட்டும் பெற்றுக் கொள்வதா போன்ற வினாக்களுக்கு விடை தேடவேண்டி இருக்கிறது.

சித்தன்னவாசல் சுவரோவியங்கள்

புதுக்கோட்டையிலிருந்து 15 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் சித்தன்னவாசல் எனும் சிறுகிராமத்தில் குகைக்கோயிலின் விதானங்களிலும் சுவர்களிலும் காணப்படும் பழமையான ஓவியங்கள் அஜந்தா ஓவிய பாணியை நினைவூட்டுபவை. யானையும், பறவைகளும், மனிதர்களுமாக நிறைந்து இருக்கும் தாமரைக் குளத்தின் காட்சியில் அனைத்து உருவங்களும், கோடுகள் ரீதியாக வரையறுக்கப்பட்டுள்ளன. சென்னை கலை இயக்கத்தின் பலமாக இன்று கருதப்படுகிற கோடுகள் ரீதியான வரையறை அன்றைக்கே சித்தன்னவாசல் ஓவியங்களின் அகமரபில் நாம் காணமுடியும்.

தஞ்சாவூர் ஓவியங்கள்

17, 18ஆம் நூற்றாண்டுகளில், உருவங்களை ஓவியங்களாகத் தீட்டும் போக்கு அவுரங்கசீப் மன்னரால் புரக்கப்படாதபோது, முகலாய அரசவை ஓவியர்கள், தெற்கு நோக்கி வந்து மைசூர், தஞ்சாவூர் போன்ற இடங்களில் தங்கினர். தஞ்சைக்கு வந்த இவர்களை அன்றைய மராத்திய மன்னர்கள் பாதுகாத்தபோது தஞ்சாவூர் ஓவியபாணி செழிக்கத் தொடங்கியது. மரம், கண்ணாடி, தந்தம், காகிதம், மைகா என்று பல்வேறு கலை சாதனங்களைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட இந்த ஓவியங்களில் பளிச்சிடும் வண்ணம், தங்கமும், பளிச்சிடும் கற்களும் வைத்து பதிக்கப்பட்ட அலங்காரம் ஆகியவற்றுடன் கூடிய உருவங்கள் கோடுகள் ரீதியாகத் தீர்க்கமாக வரையறுக்கப்பட்டிருந்தன.

இத்தகைய அகமரபுகள் குறித்த தேடலை மேற்கொண்ட மதராஸ் கலை இயக்கத்தினர் கே.சி.எஸ். பணிக்கர், எஸ்.தனபால், கே. ஸ்ரீனிவாசலு போன்றவர்களாவர். இதில் எஸ். தனபால் நடனம், நாடகம், இசை என்று பல துறை ஆர்வம் கொண்டவராக இருந்த தினால், இவர் 1950களில் தனது சுடுமண், சிமெண்ட் ஆகியவை கொண்டு படைத்த பல சிற்பங்களில் சோழர்கால சிற்பங்களின், பல்லவர் கால சிற்பங்களின் பண்புக் கூறுகளைக் கொண்டவையாக படைத்தார்.

எஸ்.தனபால் செவ்வியல் கலைகளின் அகமரபுகளிலிருந்து ஊக்கம் பெற்றார் என்றால், கே.ஸ்ரீனிவாசலு மக்கள் பண்பாட்டுக் (Folk Culture) கூறுகளிலிருந்து தனது ஓவியத்திற்கான ஊக்கத்தைப் பெற்றார். நீண்ட நெடும் கலை வெளிப்பாட்டுப் பாரம்பரியம் மிக்க ஒரு மண்ணில், புதிய கலை எழுச்சி தோன்றுகிறபோது, தங்களது வேர்களை மீண்டும் தேடிக் கண்டெடுத்து, அவற்றின் தற்காலத்துக்கான பொருத்தப் பாடுகள் குறித்து விடுதலைக்கு முந்தைய ஓவியர்களும், சிற்பிகளும் தேடத் தொடங்கிவிட்டனர்.

இந்தத் தேடலின் விளைவாக அகமரபுகளின் சாரமாக இருக்கிற பல பண்புக்கூறுகளை தற்காலக் கலை சுவீகரித்துக் கொண்டது. இதுபற்றி கலை விமர்சகரும் ஓவியருமான ஜெயா அப்பாசாமி கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்.

1. எளிமையான வெளிக்கோடுகள் ஒரு உருவத்தை பிரதிநிதித்துவப்படுவதுபோல், துணைக் கோடுகளை தவிர்த்த புதிய முயற்சி மேற்கொள்வது.
2. வண்ணம், கனபரிமாணம் ஆகியவற்றைத் தவிர்ப்பதின் மூலமாக நிழற்பூச்சுகளை உண்டாக்கும் நிர்பந்தங்களைத் தவிர்ப்பது.
3. வெளிப்பாட்டுச் சிறப்பிற்காக உடம்பின் சைகைகளை அதீதமாக வரைவதுடன், உருவங்களின் உண்மை அளவுகளை மாற்றி வரைவது.
4. அலங்காரப் பண்புகளை உண்டாக்கு வதற்காகச் சிலவற்றைத் திரும்பத் திரும்பச் செய்தல்.
5. மொத்த உருவத்தையும், கோடுகளையும், புள்ளிகளையும் திரும்பத் திரும்பச் செய்வதினால் இசைலயமான ஒரு தொனியைக் கொண்டு வருதல்.

இத்தகைய அகமரபுகளை நோக்கிய தேடல், தமிழகத்துக்குள் ஐரோப்பியர்களால் அறிமுகப் படுத்தபட்ட, பல புறமரபுகளை சரியான விதத்தில் புரிந்து கொள்ளவும், இவை இரண்டிற்குமான கலை ரீதியான ஒரு ரசாயன மாற்றத்தை உண்டாக்கவும் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இருப்பினும் இந்திய மண்ணில் நுழைந்து வீசிய மேலைநாட்டுக் காற்று, திடீரென்று வந்து சேர்ந்த பல தீவிரமான மாறுதல்களைச் செரித்துக் கொள்ள முடியாத ஒரு நிலையை கலைஞர்களுக்கு ஏற்படுத்தியது.

இந்தியப் பின்னணியில் மதராஸின் கலை இயக்கம்

இதுவரையிலும் ஒரு அருகாமைக் காட்சியாகத் தமிழகத்தின் தற்காலக் கலைக்கான அகமரபுகளைப் பார்த்ததின் பிறகு,

இந்தியாவின் ஒட்டுமொத்தமான ஒரு பார்வையை சுருக்கமாகவெனினும் நாம் காணவேண்டி இருக்கிறது. ஏனெனில் சென்னையின் தற்காலக் கலை என்பது ஒரு வெற்றிடத்தில் நிகழ்ந்துவிடவில்லை. அது பல்வேறு புறமரபுகளின் பாதிப்புக்கு உள்ளாயிற்று.

ஐரோப்பியர்கள் இந்தியாவுக்குள் காலடி எடுத்து வைத்ததின் பிறகு, அதுவரையிலும் செல்வாக்கு பெற்றிருந்த இந்தியாவின் பெரு நகரங்கள் பல, புதிதாக உருவாகிய துறைமுக நகரங்களிடம் தங்களது முக்கியத்துவத்தை இழந்துவிட்டன.

அதுவரையிலும் இருந்து வந்த அரசவைகள், காலனி ஆதிக்கத்தினால் தங்களது அரசு அதிகாரத்தை இழந்ததினால், அவர்களால் பாதுகாக்கப்பட்டு வந்த மரபு ரீதியான ஓவியர்களும், சிற்பிகளும் பாதுகாப்பற்ற ஒரு அபாய நிலையை அடைந்தனர்.

18ஆம் நூற்றாண்டில் முகலாய, ராஜபுதன சிற்றோவிய மரபுகள் தங்களது செல்வாக்கை இழந்தன. ஐரோப்பியர்களால் ஊக்குவிக்கப் பட்ட புதிய துறைமுக நகரங்களான, மதராஸ், கல்கத்தா, பம்பாய் போன்ற இடங்களில் பிரிட்டிஷ்காரர்களால் ஏற்படுத்தப்பட்ட கலைப்பள்ளிகள், மேலை நாட்டு முறையிலான ஓவிய மரபுகளைக் கற்றுக் கொடுத்தன. கலை (Art), கைவினை (Craft) என்று பிரிவினைகள் ஏற்படுத்தப்பட்டன. இதில் பெரும்பாலான இந்தியக் கலை மரபுகள், கைவினை மரபுகள் என்ற பெயரில் கற்றுக் கொடுக்கப்பட்டன. ஐரோப்பிய ஓவிய / சிற்ப மரபுகள்தான் கலை மரபுகள் என்று சொல்லிக் கொடுக்கப்பட்டன. அடுத்ததாக, நமது கைவினை மரபுகள், மேற்கத்திய கலை மரபுகளுக்குக் கீழ்நிலையில் வைக்கப்பட்டன. இந்த கால கட்டத்தில்தான் நமது அழகியல் கோட்பாடுகளையே நாம் மறு பரிசீலனை செய்ய வேண்டிய தாயிற்று. இதன் விளைவாக இந்தியக் கலை உலகில் ஏற்பட்ட மாறுதல்களை முக்கியமான மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. வேர்களைத் தேடிய நவீனகலை

இந்தியாவின் பாரம்பரியமான வேர்களைத் தேடி அவற்றின் மூலமாக இந்தியாவின் நவீன கலையில் ஒரு மறுமலர்ச்சியை உருவாக்க முடியும் என்று சில மேதைகள் நம்பிச் செயல்பட்டனர். இதன் முக்கியமான முன்னோடி அபனிந்திரநாத் தாகூர் 1871–1951. இவர் தொடங்கிய தேடலை முன்னெடுத்துச் சென்ற இவரது முக்கியமான சீடரான நந்தலால் போஸ், சாந்திநிகேதனத்தின் கலாபவனத்தில் உருவாக்கிய கலைஞர்களின் தலைமுறை வங்காளத்தில் ஒரு கலை இயக்கத்தையே கட்டி எழுப்பியது.

2. மக்கள் கலையின் மறு உயிர்ப்பு

ஐரோப்பாவில் பிக்காசோ போன்றவர்கள், எப்படி ஆப்பிரிக்க கலை போன்றவற்றிலிருந்து உணர்வெழுச்சி பெற்றார்களோ, அதே போன்று இந்தியாவின் மக்கள் கலைகளிலிருந்தும், மலையின மக்களின் கலையிலிருந்தும் தங்களது தற்கால படைப்புகளை உருவாக்கும் பிரிவினர் தோன்றினர். இவர்களின் முன்னோடி ஜாமினிராய் (1887–1972). இவரின் தாக்கத்தினால் சென்னையில் ஸ்ரீனிவாசலு போன்ற முன்னோடிகள் தங்களது கலை வெளிப்பாட்டின் அடிநாதமாக மக்கள் கலையை தேர்ந்தெடுத்தனர். இதனால் மக்கள் கலை நவீனமான முறையில் மறு உயிர்ப்படைந்தது.

3. சர்வதேசக் கலை பாணி

அபனிந்திரநாத் தாகூரின் முக்கிய இரண்டு சீடர்கள் நந்தலால் போஸ், தேவிபிரசாத் ராய் சௌதுரி (1899–1975) ஆகியவர்கள் ஆவர். இவர்கள் இருவரில் ஒருவரான நந்தலால் போஸ் வங்காளத்தில் புதிய இந்திய ஓவிய பாணி ஒன்றை உருவாக்கியபோது, தேவிபிரசாத் ராய் சௌதுரி இதிலிருந்து முற்றிலும் விலகி இருந்தார். இவர் மதராஸ் ஓவியப் பள்ளியின் முதல்வராகப் பொறுப்பேற்று, ஒரு சர்வதேச பாணி ஒன்றை கைக்கொண்டு தனது படைப்புகளைச் செய்தார். இந்தப் பிரிவில் வங்காளத்தில் வாழ்ந்த ககனேந்திரநாத் தாகூர் (1867–1938), மகாகவி ரவீந்திரநாத் தாகூர் (1861–1941), பினோத் பெஹாரி முக்கர்ஜி (1904–1980), ராம் கிங்க்கர் பைஜ் (1906–1980) அம்ரிதா ஷேர் கில் (1913–1941) போன்றவர்கள் அடங்குவர்.

விடுதலைக்கு முந்தைய சென்னையின் கலை முயற்சிகளில் இந்த மூன்று முக்கியமான போக்குகளின் பாதிப்பையும் நாம் காணமுடியும்.

சென்னையின் கலை வெளிப்பாடு. காலனி ஆதிக்க குழப்பங்களினாலும், கட்டுக் குலையாத சம்பிரதாய மனப் பான்மையினாலும், மதரீதியாகக் கட்டமைக்கப்பட்ட பண்பாட்டின் உறுதிப்பாட்டினாலும் சிக்கல் மிகுந்த ஒரு காலத்தை நேருக்கு நேர் சந்தித்தது.

நன்றி : **'தேடலின் குரல்கள்'**
தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு.

★ ★ ★

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் 2011

தேர்தல் ஆணையத்தால் 1.3.2011 அன்று தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் 2011 நடைபெறுவதற்கான தேர்தல் அட்டவணை கீழ்க்கண்டவாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

வ.எண்.	தேர்தல் நிகழ்வு	தேதி (அனைத்து 234 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும்)
1.	தேர்தல் அறிவிக்கை	19.3.2011 (சனிக்கிழமை)
2.	வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான கடைசி நாள்	26.3.2011 (சனிக்கிழமை)
3.	வேட்பு மனுக்கள் பரிசீலனை	28.3.2011 (திங்கள்கிழமை)
4.	வேட்பு மனுவை திரும்ப பெறுவதற்கான கடைசி நாள்	30.3.2011 (புதன்கிழமை)
5.	தேர்தல் தேதி	13.4.2011 (புதன்கிழமை)
6.	வாக்குகள் எண்ணிக்கை	13.5.2011 (வெள்ளிக்கிழமை)
7.	தேர்தல் பணிகள் முடிவடைவதற்கான நாள்	16.5.2011 (திங்கள்கிழமை)

தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்களில் 234 சட்டப்பேரவைத் தொகுதிகள் அமைந்துள்ளன. இந்த 234 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் 10.1.2011 அன்று வெளியிட்ட வாக்காளர் பட்டியலின் படி உள்ள வாக்காளர்களின் விவரங்கள் பின்வருமாறு :–

ஆண் வாக்காளர்கள்	– 2,30,86,295
பெண் வாக்காளர்கள்	– 2,28,63,481
இதர வாக்காளர்கள்	– 844
மொத்த வாக்காளர்கள்	– 4,59,50,620

தமிழகத்திலேயே அதிக வாக்காளர் கொண்ட சட்டப்பேரவைத் தொகுதி மற்றும் குறைந்த வாக்காளர் கொண்ட சட்டப்பேரவைத் தொகுதியின் விவரம் பின்வருமாறு :–



சட்டப்பேரவைத் தொகுதியின் பெயர்	வாக்காளர்கள் எண்ணிக்கை
27 சோழிங்கநல்லூர் (காஞ்சிபுரம் மாவட்டம்)	– 3,40,615
164 கீழ்வேளூர் (தனி தொகுதி, நாகப்பட்டினம் மாவட்டம்)	– 1,40,181

தமிழகத்தில் 54,016 வாக்குச்சாவடிகள் 28,909 இடங்களில் அமைந்துள்ளன. இவற்றுள் 19,560 வாக்குச்சாவடிகள் நகர்ப்புரப் பகுதியிலும் 36,456 வாக்குச்சாவடிகள் கிராமப்புரப் பகுதியிலும் அமைந்துள்ளன.

புகைப்பட வாக்காளர் பட்டியல்	– 99.85%
வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்பட்ட விவரம்	– 99.90%

நடைபெறவுள்ள தமிழக சட்டபேரவைத் தேர்தல் 2011 தேர்தல் பணிக்காக 2,76,519 அரசுப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இந்தத் தேர்தலுக்காக மின்னணு வாக்கு இயந்திரம் பயன்படுத்தப்பட உள்ளது. அதற்காக 70,004 கட்டுப்பாட்டு இயந்திரங்களும், 98,000 வாக்குப்பதிவு இயந்திரங்களும் தயார் நிலையில் உள்ளன.

தேர்தல் அறிவிக்கப்பட்ட 1.3.2011 முதல் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துவிட்டன. இதன்படி புதிய திட்டங்கள் பற்றிய அறிவிப்பு ஏதும் வெளியிடப்படக்கூடாது. ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு ஆரம்பிக்கப்படாத புதிய திட்டங்களையும் தொடங்கக் கூடாது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள் கீழ்க்கண்ட இணைய தளத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம். http://eci_main/ElectoralLaws/compendium/vol3.pdf and http://eci.nic.in/eci_main/faq/faq_mcc.pdf மேலும், Tamil Nadu Open Space (Prevention and Disfigurement) Act 1959இல் கூறப்பட்டுள்ள விதிகள் அனைத்தும் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படும்.

இந்த விதிகள் நடைமுறைப்படுத்துவதை கண்காணிக்க தேர்தல் பொதுப் பார்வையாளரும் (General Observer) மற்றும் தேர்தல் செலவின கணக்குகளை கண்காணிக்க செலவின பார்வையாளர் (Expenditure Observer) தேர்தல் ஆணையத்தால் நியமனம் செய்யப்படுவார்கள். வேட்பாளர்களின் செலவினங்களை கண்காணிப்பதற்காக ஒவ்வொரு செலவின பார்வையாளரின் கீழ் ஒரு உதவி செலவின பார்வையாளர் சம்பந்தப்பட்ட மாவட்ட தேர்தல் அதிகாரிகளால் நியமனம் செய்யப்படுவார்கள்.

மேலும், ஒவ்வொரு சட்டப்பேரவைத் தொகுதியிலும் வீடியோ கண்காணிப்புக் குழு (Video Survilence Team), எடுக்கப்பட்ட படங்களை கண்காணிக்கும் குழு (Video Viewing Team), மற்றும் கணக்குக் குழு (Accounting Team) ஆகியவை நியமனம் செய்யப்பட உள்ளன. ஒவ்வொரு சட்டப் பேரவைத் தொகுதியின் எல்லைக்குட்பட்ட ஒவ்வொரு காவல் நிலைய ஆளுமை பகுதியில் வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்கப்படுவதை கண்காணிக்கவும், தடுக்கவும் பறக்கும் படை ஒன்று அமைக்கப்பட உள்ளது. ஒவ்வொரு பறக்கும் படையின் கீழும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட (Static Survilence) குழு அமைக்கப்பட்டு அவைகள் சோதனைச் சாவடிகளாக ஆங்காங்கே செயல்படும். தேர்தல் செலவினங்கள் குறித்த விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் கீழ்க்கண்ட இணையதளத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம். http://eci.nic.in/eci_main/recent/instruction_expenditure.pdf

தலைமைத் தேர்தல் அலுவலர் அலுவலகம் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலகங்களிலும் தேர்தல் கட்டுப்பாட்டு அறை மற்றும் கால் சென்டர் 24 மணி நேரமும் தேர்தல் நடைபெற்று முடியும் வரை செயல்பட உள்ளன. வாக்காளர்கள் கட்டணமின்றி 1965 என்ற எண்ணினைப் பயன்படுத்தி கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொண்டு தகவல்களை தெரிவிக்கலாம். ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்புக் குழுக்கள் தலைமைத் தேர்தல் அலுவலகத்திலும் மாவட்ட தேர்தல் அலுவலகத்திலும் செயல்பட உள்ளன. வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் தொடர்பான விளம்பரங்களை ஊடகங்கள் மூலம் விளம்பரம் செய்வதற்கு மேற்படி குழுக்களின் சான்று கண்டிப்பாக பெற்றிருக்க வேண்டும். இந்தக் குழு வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் ஊடகங்களுக்கு கட்டணம் செலுத்தி தேர்தல் விளம்பரங்கள் மற்றும் செய்திகளை வெளியிடுகின்றனரா என்பதைக் கூர்ந்து கவனித்து விதி மீறல்கள் ஏதேனும் இருப்பின் தகுந்த நடவடிக்கை எடுக்க ஆவன செய்யும்.

மேலும், போட்டியிடும் வேட்பாளர்கள் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்த நாள் முதல் தேர்தல் தொடர்பான கணக்குகளை உரிய பதிவேட்டில் பதிவு செய்து பராமரிக்க வேண்டும். தேர்தல் பிரச்சாரத்தின் போது தேர்தல் நடத்தும் அலுவலர் குறிப்பிடும் 3 நாட்களில் தனது தேர்தல் கணக்குகளை ஆய்வுக்கு தாக்கல் செய்ய வேண்டும். தேர்தல் முடிவுகள் வெளியான பின்பு 30 நாட்களுக்குள் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் தங்களது தேர்தல் கணக்குகளை மாவட்ட தேர்தல் அலுவலர் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்க வேண்டும். ★

கணினித் தமிழ் வளர்ச்சி

❖ முனைவர் **க. திருவாசகம்**

ஒரு மொழியானது, தான் வழங்கும் சமுதாயத்தின் அனைத்து மொழித் தேவைகளையும் நிறைவேற்றித் தரும்போதுதான், சிறப்பான வளமான மொழி என்று அழைக்கப்படும். பல்லாயிரம் ஆண்டுக்கால வரலாறு உடைய செம்மொழித் தமிழானது, தனது வரலாற்றில் தமிழ்ச் சமுதாயத்தின் தேவைகளை முறையாக, முழுமையாக நிறைவேற்றிக்கொண்டு வருவதனால் தான் சிறந்த மொழியாகக் கருதப்படுகிறது. அதன் பயனாகத்தான் செம்மொழித் தமிழானது இன்றுவரை தொடர்ச்சி அறுந்திடாத ஒரு மொழியாக வாழ்ந்து வருகிறது.

தமிழின் மொழிப் பயன்பாடு

செம்மொழித் தகுதியைத் தமிழ் பெற்றதற்கு அதன் வரலாற்றுத் தொடர்ச்சி (Continuity) மட்டுமே காரணி இல்லை. வளர்ச்சியடைந்த தமிழ்ச் சமுதாயத்தின் உயர்நிலைத் தேவைகளாக அமைந்த தத்துவம், இலக்கியம் ஆகியவற்றின் படைப்பு அல்லது உருவாக்கத்திற்கும் ஏற்ற ஒரு மொழியாகத் தமிழ் அமைந்ததும் ஒரு முக்கியக் காரணியாகும். தமிழ்நாட்டில் அரசாண்ட அரசர்களின் செயற்பாடுகளை மக்களுக்கு அறிவிக்கும் ஊடகங்களாக அமைந்த கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைச் சுவடிகள் போன்றவற்றிலும் சிறந்த முறையில் பயன்படும் ஒரு மொழியாகத் தமிழ் திகழ்ந்தது. இவை எல்லாவற்றிலும் சிறப்பாகப் பயன்படும் வகையில், காலத்தின் தேவைக்கேற்ப தனது சொற்களஞ்சிய வளத்தையும் (Lexicon) இலக்கண வளத்தையும் (Grammar) தமிழ் வளர்த்துக் கொண்டே வந்துள்ளது.

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் அச்சுத் தொழில்நுட்பம் (Printing Technology) தோன்றியபோது, அதற்கும் ஈடுகொடுத்து, தமிழ் செயற்படத் தொடங்கியது. அதன் பயனாகவே இன்றைய தமிழ் மிக உயர்ந்த நிலையில் உள்ளது. உலகெங்கும் தமிழ்வழி மூலம் பல்வேறு சிறந்த கருத்துகள் சென்றடைந்துள்ளன.

கணினி யுகம்

இன்றைய யுகம் கணினி யுகம் (Age of Computer) ஆகும். தட்டச்சு செய்தல் போன்ற சாதாரண அடிப்படைத் தேவைகளிலிருந்து, விண்வெளியில் செயற்படுகிற ஏவுகணைகள், விண்வெளி ஆய்வுக்கூடங்கள் ஆகியவற்றைக்கூட நமது பூமியிலிருந்து கட்டுப்படுத்தி, செயற்படுத்தக் கூடிய உயர்மட்டப் பணிகள்வரை அனைத்துக்கும் பயன்படும் ஒரு கருவியாகக் கணினி திகழ்கிறது.

இன்றைய கணினி யுகத்தில் தனி மனிதராகட்டும் அல்லது பன்னாட்டுத் தொழில் நிறுவனமாகட்டும், கணினியின்றி அன்றாடச் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாத ஒரு நிலை நீடிக்கிறது. கட்டுரைகள், கடிதங்கள் ஆகியவற்றைத் தட்டச்சு செய்தல் (Typing), தேவையான தகவல்களைத் தரவுகளாகச் சேமித்துவைத்தல் (Database Development), தேவைப்படும்போது தகவல்களைத் தேடியெடுத்தல் (Information Extraction and Retrieval), மின்னஞ்சல் அனுப்புதல் (e-mail), வினாடிகளில் உலகெங்கும் இணையதளம் (Internet and Web) மூலம் தொடர்பு கொள்ளுதல், இணையதளம் மூலம் தொழில் மற்றும் வாணிகத் தொடர்புகளை மேற்கொள்ளுதல் (E-commerce) என்று கணினியின் பயன்பாடுகளை அடுக்கிக்கொண்டே செல்லலாம். இந்தியாவில் இன்று மின் ஆளுகை (E-Governance) நடைமுறையில் வந்துவிட்டது.

இணையதளத்தின் மூலம் மின்னணுக் கல்வி (E-learning), மின்னணுக் கருத்தரங்கம் (E-conference) ஆகியவைகூட இன்று நடைமுறையில் உள்ளன. பல்லூடகக் கருவியாகவும் (Multimedia) கணினி இன்று பரிணமித்துள்ளது. எனவே எழுத்து, பேச்சு, படம் என்று பலவகைப்பட்ட ஊடகங்கள் வழியே ஒருவர் உலகெங்கும் தொடர்பு கொள்ளக்கூடிய ஒரு பிரம்மாண்டமான வளர்ச்சி இன்று ஏற்பட்டுள்ளது.

மொழி சார் மென்பொருள்கள்

மேற்கூறிய செயல்களைப் புரிவதற்காகக் கணினி மென்பொருள்கள் (Software) ஏராளமாக உருவாக்கப்பட்டுள்ளன. தட்டச்சு செய்வதற்கான எழுத்துருக்கள் (Fonts), விசைப்பலகைகள் (Keyboards) தொடங்கி, ஒருவர் கணினியில் தட்டச்சு செய்வதனைப் பேச்சாக மாற்றிக் கொடுக்கும் மென்பொருள் (Text to Speech - TTS), ஒருவர் பேசுவதனை எழுத்துவடிவில் மாற்றிக்கொடுக்கும் மென்பொருள் (Automatic Speech Recognizer - ASR), ஒரு மொழியில் எழுதுவதனை அல்லது பேசுவதனைச் சில வினாடிகளில் பிறமொழிகளில் மொழிபெயர்த்துக் கொடுக்கும் மென்பொருள் (Automatic Machine Translation) என்று பல்வேறு மென்பொருள்கள் இன்று பல மொழிகளுக்கு உருவாக்கப்பட்டுள்ளன.

மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு

இந்தியாவில் இன்று நிலவுகிற மொழிப் பிரச்சினையைத் தீர்க்க மேற்குறிப்பிட்ட மென் பொருள்கள் நிச்சயமாகப் பயன்படும். இந்திய மொழிகளுள் ஒன்றில் பேசினால் அல்லது எழுதினால், அது இந்தியாவின் பிற மொழிகளில் கணினியினால் சில வினாடிகளில் மொழிபெயர்க்கப் படும் என்ற ஒரு சூழல் ஏற்பட்டால், நம்மிடையே மொழிப் பிரச்சினை தோன்றுவதற்கே இடம் இல்லை.



உலகமயமாக்கம்

பலவகை மொழிகளுக்கும் மேற்கூறிய மென் பொருள்கள் தயாராகி அந்தந்த மொழிகள் உலக அளவில் பயன்படுத்தப்பட்டுச் சிறப்புப் பெறுகின்றன. தனிமனிதரின் தேவைகளை நிறைவேற்றுவதோடு, ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், பிற நாட்டுத் தொடர்புகளுக்கும் அந்த மொழிகள் மிகவும் பயன்படுகின்றன. குறிப்பாக, உலகமயமாக்கம் (Globalization) என்ற இன்றைய சூழலில் மேற்கூறிய பயன்பாடுகள் மிக முக்கியமானவையாக அமைகின்றன.

டிஜிட்டல் டிவைட்

கணினியைப் பயன்படுத்துவோர் உலகெங்கும் இருந்து பல்வேறுபட்ட அறிவுகளை, தகவல்களைப் பெறமுடிகிறது. தங்களது அறிவை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள முடிகிறது. ஆனால், கணினியைப் பயன்படுத்த இயலாதவர்களுக்கு இந்த வாய்ப்பு கிடைப்பதில்லை. இதனைத்தான் Digital Divide என்று அழைக்கிறார்கள். எனவே, ஒருபுறம் Digital Divide, மறுபுறம் உலகமயமாக்கம். இப்பிரச்சினை களைத் தீர்க்க வேண்டும் என்றால், அனைவரும் கணினியைப் பயன்படுத்தும் ஒரு சூழல் உருவாக வேண்டும்.

மேற்கூறிய சூழல் ஒரு சமுதாயத்தில் உருவாக வேண்டும் என்றால், அச்சமுதாயத்தின் தாய்மொழியில் மேற்கூறிய கணினிப் பயன்பாடுகளுக்குத் தேவையான அனைத்து மென்பொருள்களும் உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் அச்சமுதாயத்தில் மட்டுமல்லாமல், உலகெங்கும் அம்மொழிக்குச் சிறப்பு ஏற்படும். அதன் பயன்பாடு அதிகரிக்கும். அந்த மொழி வளரும்.

தமிழகத்தில் தமிழர்கள் தங்களது கணினிசார் பணிகள் அனைத்துக்கும் பயன்படுத்தத் தமிழ் மென்பொருள்கள் உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாமல், ஆங்கிலத்தில் உருவாக்கப்

பட்டுள்ள மென்பொருள்களையே பயன்படுத்த வேண்டிய கட்டாயச் சூழல் இருந்தால், தமிழின் பயன்பாடு குறையத் தொடங்கும். ஆங்கிலத்தின் செல்வாக்கே நீடிக்கும். தமிழை அதனது அடுத்த கட்ட வளர்ச்சிக்கு நம்மால் இட்டுச் செல்ல முடியாது.

கணினித் தமிழ் வளர்ச்சி

25 ஆண்டுகளுக்கு முன்னர்க் கணினியில் தமிழ் எழுத்துக்களைத் தட்டச்சு செய்ய இயலாத ஒரு நிலை நீடித்தது. ரோமன் எழுத்துகளில் தாம் தமிழை எழுத முடிந்தது. பின்னர், ரோமன் எழுத்துகளில் தட்டச்சு செய்து, தமிழ் எழுத்துகளில் மாற்றிக் கொள்ளக்கூடிய ஒரு வளர்ச்சி ஏற்பட்டது. அடுத்த கட்ட வளர்ச்சியாகத் தமிழ் எழுத்துகளையே நேரடியாகத் தட்டச்சு செய்துகொள்ளக் கூடிய ஒரு வளர்ச்சி ஏற்பட்டது.

இருப்பினும் தமிழ் எழுத்துரு மற்றும் விசைப்பலகைகளில் தரப்படுத்தம் (Standardization) இல்லாமல் இருந்தது. அதன் விளைவாக, ஒரு குறிப்பிட்ட மென்பொருளைக் கொண்டு கணினியில் தட்டச்சு செய்த ஒரு உரையை வேறு ஓர் கணினியில் வேறு ஒரு தமிழ் மென்பொருளைக் கொண்டு வாசிக்க முடியாத நிலை நீடித்தது.

இப்பிரச்சினையைத் தீர்க்கும்பொருட்டு, உலக அளவிலான கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டு, தமிழ் எழுத்துருக்கள் (TAM, TAB) விசைப் பலகைகள் (TamilNet 99 Keyboard) தரப்படுத்தப்பட்டது. மேலும் கணினித் தமிழ் வளர்ச்சிக்கான ஓர் உயர்மட்டக் குழு (IT Task Force) அமைக்கப்பட்டு, பல பணிகள் மேற்கொள்ளப் பட்டன.

அதனையொட்டி, கணினித் தமிழை மேலும் வளர்த்தெடுக்கும் பொருட்டு, தமிழ் இணையப்



பல்கலைக்கழகம் (Tamil Virtual University) நிறுவப்பட்டது. தமிழ் மென்பொருள் வளர்ச்சிக்கான (Tamil Software Development) பல்வேறு திட்டங்களின் பயனாக இன்று கணினித் தமிழ் அடுத்த கட்ட வளர்ச்சியை எட்டியுள்ளது.

கணினியில் ஒரே நேரத்தில் பல்வேறு மொழிகளை உள்ளடக்கிய உரைகளைத் தட்டச்சு செய்வதில் இருந்துவந்த சிக்கலைத் தீர்ப்பதற்காகத் தற்போது ஒருங்குறி (யூனிகோட் – UNICODE) எழுத்துரு முறை நடைமுறைக்கு வந்துள்ளது. அதற்கான உலக அளவிலான அமைப்பில் (Unicode Consortium) தமிழ்நாடு அரசு உறுப்பினராக இருப்பது குறிப்பிடத்தக்கது.

கணினித் தமிழின் அடுத்த கட்ட வளர்ச்சி

தமிழ் எழுத்துரு, விசைப்பலகை ஆகியவற்றில் நீடித்த பிரச்சினைகள் தற்போது தீர்க்கப்பட்டு விட்டன. அதற்கு அடுத்த நிலையில் வேறு பல மென்பொருள்கள் தமிழுக்கு உருவாக்கும் முயற்சிகள் இன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒளிவழி எழுத்தறிவான் (Optical Character Recognizer - OCR), பேச்சு – எழுத்து மாற்றி (ASR), எழுத்து – பேச்சு மாற்றி (TTS), தானியங்கு மொழிபெயர்ப்பு (MT) போன்ற மென்பொருள்களைத் தமிழுக்கு உருவாக்குவதற்கான பல முயற்சிகளைப் பல்கலைக்கழகங்களும், தனியார் நிறுவனங்களும் மேற்கொண்டு வருகின்றன.

கணினியில் காணப்படும் தகவல்களைப் பேச்சாக மாற்றித் தரும் மென்பொருள் (TTS) தமிழுக்கு உருவாக்கப்பட்டால், பத்தாயிரக் கணக்கான பார்வைத்திறன் இழந்தவர்களுக்கு அது மிகவும் பயன்படும். அதுபோல நாம் தமிழில் பேசுவதனைக் கணினி உணர்ந்து, தட்டச்சு செய்து தருமேயானால் (ASR), நமக்கு மிகவும் பயன்படும்.

ஒளிவழி எழுத்தறிவான் (OCR) ஒன்று உருவாக்கப்பட்டால், நூல் பதிப்புக்கு மிகவும் பயன்படும். தானியங்கு மொழிபெயர்ப்பு மென் பொருள்களும் (MT) தமிழ்–ஆங்கிலம், ஆங்கிலம்–தமிழ் என்று பல மொழிகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட வேண்டும். மின்னகராதி (Electronic Dictionary), மின்நூல்கள் (E-books and Readers) போன்றவையும் தமிழுக்கு உருவாக்கப்பட வேண்டும். கையடக்கத் தமிழ்

அகராதிகள், சொல்லாளல்கள், மொழிபெயர்ப்பிகள் போன்றவையும் தமிழுக்கு உருவாக்கப்பட வேண்டும்.

கணினி, இணையதளத்தில் மட்டுமல்லாமல், செல்பேசியிலும் தமிழ் இடம் பெற வேண்டும்.



Bamini keyboard layout

கணினி மொழியியல் மற்றும் மொழித் தொழில்நுட்பம்

முன்குறிப்பிட்ட தமிழ் மென்பொருள்கள் சிறப்பாக உருவாக்கப்படுவதற்குப் பல அடிப்படை ஆராய்ச்சிப் பணிகள் தமிழில் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கான அறிவியல், தொழில்நுட்பத் துறையாக ஒரு தனித்துறையே – கணினி மொழியியல் (Computational Linguistics) மற்றும் மொழித் தொழில்நுட்பத்துறை (Language Technology) தோன்றியுள்ளது. மனித மூளைக்கே உரிய இயற்கை மொழி அறிவை எவ்வாறு கணினிக்கு ஏற்றவாறு மாற்றி அளிப்பது என்பது பற்றிய ஓர் அறிவியல் துறையாக அது அமைந்துள்ளது. அவ்வாறு அளிக்கும் போதுதான் கணினிக்கு இயற்கைமொழி சார்ந்த மேற்குறிப்பிட்ட மென்பொருள்களை உருவாக்க முடியும். கணினி மொழியியல் அடிப்படையில் மொழிசார் மென் பொருள்களை உருவாக்கும் துறையானது மொழித் தொழில்நுட்பத்துறை என அழைக்கப்படுகிறது.

மேற்கூறிய துறைகளின் அடிப்படையில் தமிழுக்குப் பல ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப் பட வேண்டும். கணினித் தமிழ் இலக்கணம் (Computational Grammar of Tamil), கணினித் தமிழ் அகராதி (Computational Tamil Lexicon), தமிழ்த் தரவுத்தளம் (Electronic Tamil Corpus), கணினிவழி தமிழ்த்தரவு ஆய்வுக் கருவிகள் (Corpus Analysis Tools) ஆகியவையெல்லாம் உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் தமிழ் மென்பொருள் வளர்ச்சி ஏற்படும். மேலைநாட்டு மொழிகளுக்கு இணையான வளர்ச்சியைத் தமிழ் பெறமுடியும்.

மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சகத்தின்கீழ் (Ministry of Information Technology) இதற்கென்று இந்திய மொழிகளுக் கான தொழில்நுட்ப வளர்ச்சி (Technology Development of Indian Languages -TDIL) என்ற ஒரு தனிப்பிரிவு உருவாக்கப்பட்டு, பல்வேறு ஆராய்ச்சி ஒருங்கிணைப்பு மையங்கள் (Consortiums) நிறுவப்பட்டுள்ளது.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் கணினித் தமிழ்ப் பணி

சென்னைப் பல்கலைக்கழகத்திலும் தமிழ் மொழித் துறை மற்றும் மொழியியல் ஆய்வுப் பிரிவில் இதற்கான பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கணினி மொழியியல் மற்றும் மொழித் தொழில்நுட்பத்தில் மனிதவளத்தை உருவாக்கும் நோக்கத்தில் ஒரு தனி முதுகலைப் பட்டப் படிப்பு பிரிவு நிறுவி நடத்தப்பட்டு வருகிறது. கணினி மொழியியல் ஆய்வுக்கூடம் (Computer Assisted Language Technology Lab - CALT) நிறுவப்பட்டுள்ளது. பல கணினித் தமிழ் ஆராய்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

செம்மொழித் தமிழின் அடுத்த கட்ட வளர்ச்சி

பல்லாயிரம் ஆண்டு வரலாற்றுப் பெருமையும் இலக்கிய, இலக்கண வளமும் உடைய செம்மொழித் தமிழ், இன்றைய கணினி யுகத்தில் உலக அளவில் மேலைநாட்டு மொழிகளுக்கு இணையாக நடைபோட, கணினித் தமிழாகவும் நன்கு வளர்ச்சி யடைய வேண்டும். தமிழ் மூலமே உலகில் எச்செயலையும் தமிழன் மேற்கொள்ளலாம் என்ற ஒரு நிலை உருவாக வேண்டும். செம்மொழித் தமிழுக்கு மேலும் சிறப்பூட்டும் வகையில், அதன் மற்றொரு மகுடமாகக் கணினித் தமிழ் அமையவேண்டும்.

– உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு மலரிலிருந்து...

★ ★ ★

பழங்களின் மருத்துவ குணங்கள்

உணவு வகைகளில் பெரும் பங்கு வகிப்பது பழங்களாகும். பழங்கள் உடலுக்கு ஊட்டத்தையும் ஆற்றலையும் தருகின்றன. பழங்கள் இயற்கையாகவே அனைவரையும் எளிதில் கவரக் கூடிய, அழகிய நிறங்களையும்,



நல்ல மணத்தையும் நாவிற்கினிய சுவையையும் கொண்டிருக்கின்றன. பழங்கள் பழுக்கும் போது, காய்கறிகளிலுள்ள மாவுச்சத்தானது சர்க்கரைச் சத்தாக மாறுகிறது. இச்சத்து எளிதில் செரித்து உடலுக்கு வேண்டிய சக்தியில் ஒரு பகுதியை கொடுக்கிறது. புரதச்சத்தும், கொழுப்புச்சத்தும், மிகக் குறைவாகவும், பெரும் பகுதி நீராகவும் உள்ளதால் உடல் இளைக்கப் பழ உணவு ஏற்றதாகும்.

மாம்பழம், பப்பாளி போன்ற மஞ்சள் நிறப் பழங்களிலுள்ள உயிர்ச்சத்து, உடல் ஆரோக்கியத்திற்கும், நரம்பு வளர்ச்சிக்கும், நல்ல கண் பார்வைக்கும் பளபளப்பான தோலிற்கும் மிகவும் தேவையாக உள்ளது. வாழைப்பழம், சீதாப்பழம் போன்ற பழங்களில் உள்ள உயிர்ச்சத்து பற்கள், ஈறுகள் நன்கு உறுதியாக இருக்கவும், ஈறுகளில் இருந்து இரத்தம் வராமலிருக்கவும் பயன்படுகிறது. பழங்களிலுள்ள நார்ச்சத்து, மலச்சிக்கலைப் போக்கவும் உண்ணும் உணவு நன்கு செரிக்கவும் பெரிதும் பயன்படுகிறது.

பழங்களில் (Pectin) என்ற பழப்பசைச்சத்து உள்ளது. இச்சத்து ஜாம், ஜெல்லி போன்றவை தயாரிக்கப் பயன்படுகிறது. ஆக ஒருவரது தினசரி உணவில் ஒரு பகுதி பழங்களாக இருந்தால் அதன் மூலம் இயற்கையாக எல்லாச் சத்துகளையும் எளிதில் பெற்றிடலாம். பழங்கள் பல்வேறு நோய்களையும் குணப்படுத்தும் வல்லமை கொண்டவை.

பழங்கள்	குணமடையும் நோய்கள்
எலுமிச்சம்பழம்	தலைவலி, ஆஸ்துமா, பல்நோய், சுரப்பான், ஊளைச்சதை, ஜலதோஷம், மார்புச்சளி, செரியாமை, மூலநோய், கருப்பை இரத்தக்கசிவு, கருப்பை சீழ் வடிதல், சொறி நோய், குடற்புண், மேகநோய், பித்தம், பசியின்மை, மயக்கம், சரும நோய், தொண்டைப்புண், நுரையீரல் நோய், முடக்குவாதம்.
மாதுளை	மார்புச் சளி, ஜீரணசக்திக் குறைவு, தொண்டைப்புண், சீதபேதி, காய்ச்சல்
பப்பாளி	ஜீரணசக்திக் குறைவு, குடற்புண், மலச்சிக்கல், சிறுநீரக நோய்கள்.
நெல்லி	மயக்கம், மனநோய், ஜன்னி, பல்நோய், சொறி நோய், குடற்புண், மலச்சிக்கல்.
அன்னாசி	குடற்புண், மலச்சிக்கல்.
திராட்சை	பித்தம், வாயுத் தொந்தரவு, குடற்புண், ஜீரணசக்திக் குறைவு, சிறுநீரக நோய்கள்

பழங்கள்	குணமடையும் நோய்கள்
ஆரஞ்சு	கரப்பான், ஊளைச்சதை, மயக்கம், தினவு
நாவல்பழம்	சீதபேதி
ஆப்பிள்	காய்ச்சல், சீதபேதி, தொண்டைப்புண், மலச்சிக்கல்
வாழைப்பழம்	காய்ச்சல், மலச்சிக்கல்
மாம்பழம்	பசியின்மை
முலாம்பழம்	மலச்சிக்கல், இசிவு நோய்
கொய்யாப்பழம்	மலச்சிக்கல், ரத்தச் சோகை, சளி
அத்திப்பழம்	மேக நோய், கீல் வாதம், சிறுநீரக நோய்கள்
வில்வப்பழம்	திமிர் வாதம், காலரா, சர்ப்ப விஷம், வயிற்று உப்புசம்
வெள்ளரிப்பழம்	குடற்புண், மலச்சிக்கல், வயிற்று உப்புசம்
பேரீச்சம் பழம்	மலச்சிக்கல், இரத்தச் சோகை
தர்ப்பூசணி	சிறுநீரக நோய்கள்

நோய் வராமல் தடுக்கவும், நோயின் தன்மையை குறைக்கவும் பல்வேறு பழங்களை உட்கொண்டு ஆரோக்கியமாக வாழ்வோமாக.

நன்றி : "கால்நடைக் கதிர்"

அறிந்து கொள்வோம்

தட்டணுக்கள்

இரத்தத்தில் சிவப்பணுக்கள், வெள்ளணுக்கள், தட்டணுக்கள் என்னும் மூவகை உயிரணுக்கள் உள்ளன. தட்டணு மிகச் சிறிய உயிரணுக்கள்தாம். ஒரு கனமில்லி லிட்டர் இரத்தத்தில் மூன்று இலட்சம் தட்டணுக்கள் உள்ளன. உடலில் காயம் ஏற்பட்டவுடன் இரத்தம் வெளியேறுவதை இயற்கையாகவே தடுக்கும் சக்தி தட்டணுக்களுக்கு உண்டு. இரத்தம் வெளியேறும் இடத்தைச் சுற்றி 'கார்க்' போல அடைப்பை ஏற்படுத்தி மேலும் இரத்தம் கசிவதை இவை தடுத்துவிடும்.

கிராமப்புர வளர்ச்சியில்

காளான் வளர்ப்பு

இந்திய நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படையாகக் கிராமிய வளர்ச்சி அமைந்துள்ளது. கிராமங்கள் முன்னேற்றமடைந்தால் இந்தியா வளமான நாடாகும் என்பதில் ஐயமில்லை. கல்வி அறிவு, கிராமியத் தொழில்களின் முன்னேற்றம், சுகாதாரம் போன்றவை கிராம வளர்ச்சிக்கு ஆதாரத் தூண்களாக அமைந்துள்ளன. கிராமியத் தொழில்களில் ஒன்றாக விளங்கும் காளான் வளர்ப்பு, கிராமங்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவுவதோடு, மக்கள் ஆரோக்கியத்திற்கு எவ்வாறு பயனுள்ளதாக விளங்குகிறது என்பதை இக்கட்டுரையில் காணலாம்.

கிராமத் தொழில்கள்

நம்நாட்டின் வளர்ச்சிக்குக் கிராமியத் தொழில்கள் ஒரு முக்கியமான பயனுள்ள அங்கமாக விளங்குகின்றன. இத்தகைய கிராமத் தொழில்கள் இலாபகரமான முறையில் நடைபெற கிராமப்புரத்திற்கு ஏற்ற தொழில்நுட்பங்களைக் கையாளுதல் வேண்டும்.

1. செய்யும் பணிகளில் உள்ள சிரமங்களைக் குறைக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.
2. கிராம மக்களுக்குப் புரியும் விதத்தில் எளிமையாக இருக்க வேண்டும்.
3. உள்ளூரில் கிடைக்கும் பொருள்களைப் பயன்படுத்தும் விதத்தில் அமைய வேண்டும்.
4. கிராம மக்களுக்கு நியாயமான வருவாய் கிடைக்கும் விதத்தில் இருக்க வேண்டும்.
5. தொழில்நுட்பம் கிராம மக்களின் தொழில்திறன், பொருள்களின் உற்பத்தி மற்றும் தரத்தை மேம்படுத்தும் விதத்தில் இருக்க வேண்டும்.
6. உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்குச் சந்தை இருக்க வேண்டும்.

கிராமத் தொழில்கள் சிறப்புறச் செயல்பட்டால் வேலையின்மையும், வறுமையும் நீங்க வாய்ப்புண்டு. இதனால் கிராம மக்களின் வாழ்க்கைத் தரமும், ஆரோக்கியமும் மேம்படும். அத்தகைய கிராமத் தொழில்களுள் ஒன்றாக விளங்குவது காளான் வளர்ப்பாகும்.

காளான் வளர்ப்பு

கிராமப்புரத்திற்கு ஏற்ற தொழிலாகக் காளான் வளர்ப்பு அமைந்துள்ளது. பணிச் சிரமங்களைக் குறைக்கும் தொழிலாகவும் விளங்குகிறது. பண்ணை வைத்துள்ள விவசாயிகளுக்கு மக்காச் சோளக் கதிர் சக்கைகள், கரும்புச் சக்கை, வீணாகிவிட்ட பஞ்சு, தேவையற்ற காகிதங்கள் போன்ற கழிவுப் பொருட்களால் அநேகத் தொல்லைகள் விளைகின்றன. காளான்கள் இத்தகைய கழிவுப் பொருட்களில் உற்பத்தியாவதால், கழிவுப் பொருட்களைச் சிறந்த முறையில் அப்புறப்படுத்திச் சூழ்நிலைச் சுகாதாரத்தை மேம்படுத்தி, வருவாயைத் தரும் தொழிலாக விளங்குகிறது.

கிராமத் தொழில் சிறப்பாக நடைபெற வேண்டுமாயின் அத்தொழில்நுட்பம் கிராம மக்களுக்குப் புரியும் விதத்தில் எளிமையாக இருக்க வேண்டும். காளான் வளர்த்தல் எளிமையானது. மற்றவர்களின் உதவியின்றி இக்காளான்களைப் பெண்களே கூட வீட்டில் வளர்த்துவிட முடியும். ஆகவே கிராம மக்கள், வேலையில்லா இளைஞர்கள், பெண்கள் போன்றோர் இத்தொழிலில் முனைப்புடன் ஈடுபடமுடியும்.

உள்ளூரில் கிடைக்கும் பொருள்களைப் பயன்படுத்தும் விதத்தில் அமையும் கிராமத் தொழில்கள், நன்றாக நடைபெற முடியும். தமிழ்நாட்டுத் தட்பவெப்ப நிலையில் செயற்கை முறையில் வளர்ப்பதற்கேற்றவை



சிப்பிக்காளானும், வைக்கோல் காளானும் ஆகும். காளான் பயிரிடுவதற்குப் பயன்படுத்தப்படும் படுக்கை, வைக்கோலால் ஆனது. விவசாய நாடாக விளங்கும் நம் நாட்டில், கிராமங்களில் வைக்கோல் எளிதாகக் கிடைக்கும் பொருளாகும். அறிவியல் வளர்ச்சியின் காரணமாகக் காளான் வித்துக்கள் ஆண்டு முழுவதும் பரவலாகக் கிடைக்கின்றன. வேளாண்மை மற்றும் பண்ணைத் தொழிலின் உபதொழிலாகக் கூட காளான் வளர்ப்பில் ஈடுபட முடியும். பெரிய அளவில் காளான் வளர்ப்பதற்கு மற்ற பயிர்களுக்குத் தேவைப்படுவது போல அல்லாமல் குறைந்த இடமே போதுமானதாகும்.

கிராமத் தொழில் என்பது குறைந்த முதலீட்டில் அமையும்படியானதாகவும் தொழிலில் ஈடுபடுவோருக்கு நியாயமான வருவாய் கிடைக்கும் விதத்திலும் இருக்க வேண்டும். காளான் வளர்ப்பு குறைந்த மூலதனத்தில் தொழில் செய்ய விரும்புபவர்களுக்கு நல்லதொரு வாய்ப்பை நல்குவதாக அமைந்துள்ளது. காளான் வித்து, நெல் வைக்கோல், துவரம் பருப்பு, பாலிதீன் தாள், குறைந்த அளவு நீர், குறைந்த அளவிலான இடம் முதலான பொருட்களே தேவைப்படுகின்றன. ஒரு காளான் படுக்கையில் இருந்து ஒரு வார கால இடைவெளிகளில் மூன்று அல்லது நான்குமுறை காளான்களை அறுவடை செய்யலாம். ஆதலால் வேறு விவசாயப் பயிர்களைவிடக் காளான் வளர்ப்பின் மூலம் குறுகிய காலத்தில் அதிக இலாபம் பெற முடியும்.

காளான் வளர்ப்பிற்கு இன்று வரவேற்பு இருக்கின்ற காரணத்தால் சுயவேலை புரிய விரும்புபவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக விளங்குகிறது. இலாபம் தரும் தொழிலாக விளங்குகின்ற காரணத்தால் கிராமப் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவுவதோடு தனிநபரின் வருமானம் பெருகுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. காளான் உணவு சுவைமிகுந்ததாக விளங்குகின்ற காரணத்தால் நகர்ப்புரங்களுக்கு வணிகம் செய்து அதிக இலாபம் பெறலாம்.

காய்கறிகளைப் போல அல்லாமல் அதிக அளவில் உற்பத்தியாகும் நாட்களில் அவற்றை வெயிலில் உலர்த்திச் சேகரித்து வைத்துக் கொண்டு, சுவை மாறாமல் மீண்டும் பயன்படுத்த முடியும். மழைக்காலங்களில் மின்சார அடுப்பில் உலர்த்திப் பதப்படுத்தி வைக்கலாம். இதனால் இலாபம் கிடைக்கிறது.

காளான்கள் வளர்ந்து அறுவடை செய்யப்பட்ட பின்னர் காளான் படுக்கையில் எஞ்சியிருக்கும் கழிவுப் பொருள் தோட்டங்களுக்கும் வயல்களுக்கும் எருவாகப் பயன்படுகின்றன. மேலும் இக்கழிவைக் கால்நடைத் தீவனமாகவும் பயன்படுத்தலாம். மேலும் இவை கோழிகளுக்குத் தீவனமாக விளங்குவதோடு மீன் உணவாகவும் பயன்படுகிறது. இதனாலும் அதிகப்படியான வருமானம் அல்லது பயன் கிடைக்கிறது.

கிராமத் தொழில்கள் மூலமாக உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்குச் சந்தை இருக்க வேண்டும். காய்கறி,

இறைச்சி போன்றவற்றின் விலை உயர்ந்துவிட்ட காரணத்தினாலும் காளான் உணவுகள் புலால் உணவுகளின் தரத்தைக் கொண்டிருப்பதன் காரணத்தாலும் அனைவராலும் இவை விரும்பி உண்ணப்படுகின்றன. என்றாலும் இன்றைய நிலையில் காளானுக்கு விரிவான சந்தை இல்லை என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின்றோம். அதற்கான முயற்சியிலும் ஈடுபட்டுக் காளான் வளர்ப்பை மேற்கொண்டு முன்னேற்றலாம். அலோபதி மருந்துகள் பக்கவிளைவை ஏற்படுத்துகின்ற காரணத்தால் இன்று மக்கள் கவனம் "உணவே மருந்து, மருந்தே உணவு" எனும் கருத்திற்கிணங்க உணவுப் பழக்கங்களை மேற்கொண்டு வருகின்றனர். காளானில் உடலுக்குத் தேவையான சத்துப் பொருள்கள் இருக்கின்றன.

கல்வி, பொருளாதார மேம்பாடு ஆகியவற்றோடு மக்களுக்கு மிகவும் வேண்டுவது உடல் ஆரோக்கியமாகும். வறுமை கோட்டிற்குக் கீழ்வாழும் கிராம மக்களுக்கு விலை குறைந்த சத்துமிகுந்த உணவு அவசியமானதாகும். அது எளிமையாகக் கிடைக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். இயற்கையில் கிடைக்கும் காளான்களில் நச்சுக்காளான்கள் இருக்க வாய்ப்புண்டு. எனவே, சுவை மிகுந்ததாக இருக்கும் காளான்கள் கிராமத் தொழில்களின் வாயிலாகக் கிராமங்களுக்குக் கிடைக்குமாயின் மக்கள் அதனை உண்டு பயன்பெறுவர்.

காளான் உணவாகப் பயன்படுவதோடு மருத்துவக் குணங்கள் மிகுந்ததாக விளங்குகிறது.

காளான்களின் மருத்துவப் பண்புகள்

பொதுவாகக் காளான் உணவில் நீர் 90.80% கார்போஹைட்ரேட் 5.8% சக்கைப் பொருள் 1% தாதுப்பொருட்கள் 1½% வரை உள்ளன. இவற்றில் இருக்கும் தாதுப் பொருட்களில் குறிப்பிடத்தக்கவை பொட்டாசியமும் பாஸ்பேட்டும் ஆகும்.

சிப்பிக் காளானில் கொழுப்புச்சத்து, மாவுச்சத்து, சக்கை, சாம்பல், ஈரம் முறையே 0.36%, 5.3%, 1.10%, 1.00%, 89.30% என்ற அளவிலும் சக்தி திறன் 339 கிலோ கலோரிகளும் உள்ளது என்பதைக் கிராமியப் பல்கலைக்கழக உயிரியல் துறையில் கண்டறிந்து உள்ளனர்.

காளான்களும் மருத்துவக் குணங்களும்

புரதச்சத்து நிரம்பிய காளான் உணவு இன்று உணவில் முக்கிய இடம் பெறுகிறது. உணவாக மட்டுமின்றி மருத்துவ ரீதியிலும் மிகுந்த பயனளிப்பனவாகக் காளான்கள் உள்ளன.

ஒரு மனிதனுக்கு ஒரு நாளைக்குச் சராசரியாக 70 கிராம் புரதச்சத்து உணவு அவசியமாகத் தேவைப்படுகிறது. இப்புரதச்சத்து குறையும் பொழுது இது ஆரோக்கிய வாழ்வினைப் பாதிக்கிறது என்றும் கூறப்படுகிறது. இந்தியர்கள் நாளொன்றுக்கு 6 கிராம் முதல் 8 கிராம் வரையிலான புரத உணவையே உட்கொள்வதாகத் தற்போதைய ஆய்வுகள் கூறுகின்றன. இன்று குழந்தைகள் பலரும் பெரியவர்களும் புரதச்சத்துக் குறைவினாலும் ஊட்டச்சத்துக் குறைவான உணவு முறையினாலும் பல நோய்களுக்கு ஆளாகின்றனர்.

காளானில் உயிர்ச்சத்துக்களும், தாதுச்சத்துக்களும் நிறைந்துள்ளது. ஆகையால் நீரிழிவு, புற்றுநோய், அதிக எடையுடையோர் போன்ற நோயாளிகளுக்கு ஏற்ற உணவாக காளான் விளங்குகிறது.

உயிர்ச்சத்துக்களும் தாதுச் சத்துக்களும் நிறைந்து கொழுப்புச்சத்து குறைவாக இருப்பதால் நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு உணவாகவும் மருந்தாகவும் காளான்கள் பயன்படுகின்றன.

இதில் அதிக அளவு தாமிரச்சத்து இருப்பதன் காரணமாக மூட்டுவாதம் உடையவர்களுக்குச் சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது. இது இருதயக் கோளாறு நோய்களுக்கு மருந்தாகச் செயல்படுவது ஒரு சிறப்பு அம்சமாகும். மேலும் எலும்பு வளர்ச்சிக்கும், பற்களின் உறுதித் தன்மைக்கும் காளான்கள் உறுதுணை செய்து வருகின்றன என்று கூறப்படுகின்றது.

காளான் உணவு இரத்தத்தில் மிகுந்து காணப்படும் கொழுப்பு உயர்வைக் குறைக்கிறது என்றும் உயர் இரத்த அழுத்தம் மற்றும் இரத்த நாளங்களின் உட்பரப்பில்

ஏற்படும் விரிவைத் தடுத்துப் பாதுகாப்பு அளிக்கின்றது என்றும் ஆய்வு ரீதியாகக் கண்டறிந்து உள்ளனர். காளானில் இருந்து 'பி' வைட்டமின் தயாரிக்கப்படுகிறது. பென்சிலியம் நொட்டேட்டம் (Penicillium Natatium) காளானில் இருந்து கிடைக்கிறது. பென்சிலின் தடை செய்யும் எதிர் உயிரியாக (Antibiotics) உள்ளது. கிளவிசெப்ஸ் (Claviceps) என்ற காளான் மிகவும் சிறிய அளவில் மருந்தாகப் பயன்படுகிறது.

இக்கால ஆய்வுகள் மட்டுமின்றி பழங்கால சித்தர் பாடல்கள் சில காளான்களின் மருத்துவக் குணத்தை எடுத்தோதுகின்றன.

''புற்றுக்கா ளான் வலையைப் போலும் பொறிவரியை
உற்றெழுகா ளானென் றுரைக்குமவை – முற்றும்
பழுதின்று நற்குணமும் பண்ணுவன மாந்தர்
தொழுதின்று உண்பரெனச் சொல்''

– அகத்தியர் பதார்த்த குணசித்தாமணி

இவை உடலுக்கு நன்மையைத் தரும் என்று கூறுவதோடு, சித்த மருத்துவ மருந்துகளாக அயம், காந்தம், மண்டூரம், தங்கம் முதலான உலோகச் செந்தூரங்களுடன் கலந்து கொடுக்க விரைவான பலன் கிடைக்கிறது. சோகை, காமாலை இவற்றிற்கு மருந்தாகக் கொடுக்கலாம். விஷசுரம், அம்மை, காலரா முதலிய தொற்று வியாதிகள் பரவியுள்ள பொழுது அடிக்கடிக் காளான்களைக் கஷாயமிட்டுக் குடிக்கச் செய்தல் அந்நோய்களுக்குத் தடுப்பாக இருக்கும். மேலும் அடிபட்ட காயம், புண்களுக்கு இதை உலர்த்தித் தூள் செய்து தேங்காய் எண்ணெயுடன் கலந்து மேலே தடவி வர காயம் வேகமாக ஆறிவிடும். உடலில் ஏற்பட்ட வெட்டுக்காயத்தால் இரத்தம் பீறிட்டு நிற்காமல் வெளிவரும் சமயம் காளான் தூளை வைத்தால் உடனே இரத்தம் வெளிவருவது நின்றுவிடும்.

கண் இமைகள் தானாகத் துடிப்பதற்கு மருந்தாக ஓமியோபதி மருத்துவத்தில் இதனைப் பயன்படுத்துகின்றனர். முதுகுத்தண்டு வலி உடையவர்களுக்கும், டீ, காபி, சிகரெட் முதலான கெடுதல் பழக்கம் அதிகமாகி அதனால் ஏற்படும் இதயக் கோளாறுகளுக்கும் இது நல்ல பலனை அளிக்கிறது.

யுனானி மருத்துவ முறையைக் கூறும் ''யுனானி பதார்த்த குண விளக்க சார சங்கிரகம்'' என்ற நூலில் காளான்களைப் பற்றிய மருத்துவச் செய்திகள் காணப் படுகின்றன. காளான் சாற்றைக் கண்களில் பிழிந்தால் கண்களில் உள்ள அழுக்கு நீங்கி ஒளியுடைய தாகும். காளானின் பொடி பேதியைக் கட்டுப்படுத்துவதோடு வயிற்றுக் கடுப்பையும் உதிரத்தையும் மாற்றும்.

இவ்வாறு கிராமங்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் மக்களின் ஆரோக்கிய வாழ்விற்கும் உணவுத் தேவையை ஓரளவு நிறைவு செய்யக் கூடியதாகவும் காளான் வளர்ப்பு விளங்குகிறது. இத்தொழிலில் இருக்கக்கூடிய சிறுசிறு குறைகளைப் போக்கி, தைரியத்துடனும் முனைப்புடனும் ஈடுபட்டால் குறைந்த முதலீட்டில் சுயதொழில் செய்து முன்னேற முடியும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

நன்றி : **கிராம உலகம்,**
அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகம், தஞ்சாவூர்.

நுகர்வோர் விழிப்புணர்வு

தகவல் தொகுப்பு

நுகர்வோர் என்பவர் யார் ?

பொருட்களையோ அல்லது சேவைகளையோ – விலை கொடுத்தோ, வாக்குறுதி கொடுத்தோ வாங்குபவரை நுகர்வோர் என்கிறோம்.

வணிக மற்றும் வியாபார நோக்குடன் ஒரு பொருளினை அல்லது சேவையினை பணம் செலுத்தி பெறுபவர் நுகர்வோர் ஆகமாட்டார். ஆனால் சிறு வியாபாரத்தை மட்டுமே நம்பி பொருட்கள் வாங்கி விற்று பிழைப்பு நடத்துபவர் நுகர்வோர் ஆகிறார்.

நுகர்வோர் உரிமைகள் யாவை ?

பாதுகாப்பு உரிமை

உடலுக்கும், உயிருக்கும் ஆபத்து விளைவிக்கக் கூடிய பொருட்கள், உற்பத்தி செய்யும் முறைகள் மற்றும் சேவைகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் உரிமை.

தகவல் பெறும் உரிமை

ஏமாற்றும் மற்றும் தவறான தூண்டுதலில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள, தானாகவே, அறிவுபூர்வமாக முடிவு எடுக்க உதவும் உரிமை.

தேர்ந்தெடுக்கும் உரிமை

தனக்குத் தேவையான பொருள் அல்லது சேவைகளை சுதந்திரமாக தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை.

முறையிடும் உரிமை

தன்னுடைய கருத்துகளையும், குறைகளையும் தக்க இடத்தில் எடுத்துரைக்க, எளிதில் அணுகக்கூடிய உரிமை.

குறைதீர்க்கும் உரிமை

தரமற்ற பொருட்கள் அல்லது திருப்தியற்ற சேவைகள் காரணமாக ஏற்படும் இழப்புகளுக்கு நியாயமாக நஷ்டஈடு பெறுவதற்கான உரிமை.

நுகர்வோர் கல்விக்கான உரிமை

விழிப்படைந்த நுகர்வோராக இருப்பதற்கு தேவையான அறிவையும், திறமையையும் பெறும் உரிமை.

தூய்மையான நலம் பயக்கும் சுற்றுச்சூழலுக்கான உரிமை

வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் தூய்மையான நலம் பயக்கும் சுற்றுச் சூழலுக்கான உரிமை.

அடிப்படை தேவைகளுக்கான உரிமை

உணவு, உடை, இருப்பிடம், உடல்நலப் பாதுகாப்பு, கழிவு நீர் அகற்றுதல் ஆகிய முக்கிய அடிப்படை பொருட்கள் மற்றும் சேவைகள் அனைத்தையும் எளிதில் அணுகக்கூடிய உரிமை.

நுகர்வோர் கடமைகள் யாவை ?

- விழிப்புணர்வோடு இருத்தல்
- ஈடுபாட்டுடன் இருத்தல்
- தேவைக்கு அதிகமான நுகர்வை தவிர்த்தல்
- தவறு செய்யும் உற்பத்தியாளர்கள் – வணிகர்கள் பற்றி புகார் செய்தல்
- பொருட்களையும், சேவைகளையும் முறையாக பயன்படுத்தல்
- சுற்றுச்சூழல் குறித்து பொறுப்புணர்ச்சி
- கூட்டு முயற்சி
- அங்காடிக்குச் செல்வதற்கு முன்பு தேவையை பட்டியலிட வேண்டும்.
- பொருட்களின் ரகங்களை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.
- விற்பனையாளர்களின் வற்புறுத்தலை எதிர்க்க வேண்டும்.

* ரசீதுகள், உத்திரவாதங்கள், தகவல் அறிக்கைகள் அனைத்தையும் பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

* பிரச்சினை என்று வந்த உடனேயே அதனை விற்பனையாளரின் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும்.

* உத்திரவாத அட்டையில் விற்பனையாளரின் முத்திரை மற்றும் கையொப்பத்தைப் பெற வேண்டும்.

* பொருட்களுக்காக வாழாமல், வாழ்க்கைக்குத் தேவையான பொருள் மட்டும் வாங்க வேண்டும்.

நுகர்வோர் உரிமையை பாதுகாக்க ஏதேனும் சட்டம் உள்ளதா ?

* ஆம், நுகர்வோர் உரிமைகளை பாதுகாத்துக் கொள்ள நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் / மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் சிறப்பு அம்சங்கள் யாவை ?

* எளிய வழக்காடு முறைகள்.
* வழக்கறிஞர் தேவையில்லை.
* நாமே வாதிடலாம்.
* பதிவுத் தபாலில் புகாரை அனுப்பலாம்.
* பதிவு செய்யப்பட்ட நுகர்வோர் சங்கங்கள், நுகர்வோர்கள் சார்பில் புகார்களை அளித்து வழக்கு தொடுக்கலாம்.
* வழக்குகள் பதிவு செய்து வழக்கு நடத்துவதில் குறைந்த செலவு.
* நஷ்டஈடு பெற சட்டத்தில் வழிவகை.

குறைதீர் மன்றங்களை அணுகும் முன் செய்ய வேண்டியவை யாவை ?

* எதிர் மனுதாரருக்கு புகாரினைப் பற்றிய விவரங்களை விளக்கமாக எழுதி எதிர்பார்க்கும் தீர்வையும் அதில் கூறி, அத்தாட்சிகள் இருப்பின் அவற்றின் நகலையும் அவற்றுடன் இணைத்து, ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவு அஞ்சலில் (RPAD) கடிதம் அனுப்ப வேண்டும்.

* பதிவு அஞ்சல் ரசீதையும், புகாரின் நகலையும் பத்திரமாக பாதுகாக்க வேண்டும்.

* குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் பதில் வரவில்லை என்றால் உங்கள் பகுதியில் உள்ள பதிவு செய்யப்பட்ட நுகர்வோர் அமைப்பின் உதவியை நாடலாம்.

* உங்கள் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுவின் தலைவரான மாவட்ட ஆட்சியாளரை புகாருடன் அணுகலாம். மாவட்ட ஆட்சியர் சம்பந்தப்பட்ட துறை அதிகாரி மூலமாகவோ அல்லது நேரடி கடிதம் மூலமாகவோ குறை தீர்க்க நடவடிக்கை எடுப்பார். சென்னையைப் பொறுத்தளவில் உணவு பொருள் வழங்கல் (ம) நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையரை அணுகலாம்.

* மேற்கண்ட வழிகளில் நிவர்த்தி கிடைக்கவில்லையெனில் மட்டுமே நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் வழக்கு தொடர்ந்து நஷ்டஈடு கோரலாம்.

சேவைகளைப் பயன்படுத்தும் போதும் பொருட்களை வாங்கும் போதும் எவ்வாறு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் ?

பொது விநியோக முறை...

* ரேஷன் கடைகளின் மூலம் பொது விநியோக திட்டம் செயல்பட்டு வருகின்றது. இந்த கடைகள் நல்ல தரமான, சரியான எடையுடன் பொருட்களை வழங்கிடுதல் வேண்டும். பொருட்களின் இருப்பு அளவு மற்றும் விலை பற்றிய தகவல்களை பலகையில் அறிவித்தல், பொருட்களின் மாதிரிகளை பார்வைக்கு வைத்தல் வேண்டும். மேற்குறிப்பிட்ட தகவல்கள் கொடுக்கப்படவில்லை என்றால் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்.

அழகுசாதனப் பொருட்கள் வாங்கும் போது நாம் எவற்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் ?

* 'இயற்கையானவை,' 'இரசாயனக்கலவை இல்லாதவை' 'எண்ணெய் இல்லாதவை' '100%' போன்ற வார்த்தைகள் ஒவ்வொன்றும் பொய்யானவை.

* கவர்ச்சியான விளம்பரங்களை / உத்திரவாதங்களை பார்த்து ஏமாந்து விடக்கூடாது.

✶ வண்ணச்சாயங்களும், இரசாயனக் கலவையே.

✶ தயாரிப்பு மற்றும் காலாவதியாகும் தேதியை கவனிக்க வேண்டும்.



சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கக் கூடிய பொருட்களை பயன்படுத்துவதை எவ்வாறு தவிர்க்க வேண்டும்?

✶ விழிப்புடைய சுற்றுச்சூழல் நண்பராக இருக்க வேண்டும்.

✶ முடிந்தவரை பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்க்க வேண்டும்.

✶ கடைக்கு செல்லும் பொழுது உங்களிடம் இருக்கும் துணி / சணல் பைகளை எடுத்துச் செல்ல வேண்டும்.

✶ பிளாஸ்டிக் பொம்மைகளை வாங்கித் தருவதை தவிர்த்தல்.

✶ மக்கும் தன்மையுடைய கழிவுகளான காய்கறி, பழத்தோல்கள், உணவு போன்றவற்றை பிரித்தெடுத்து உரமாக்கி, மக்காத தன்மையுடைய கழிவுகளான பிளாஸ்டிக், கண்ணாடி போன்றவற்றை அப்புறப்படுத்த வேண்டும்.

✶ உங்கள் வீட்டுக் கழிவுகளை குப்பை தொட்டியில் போடுங்கள்.

ஆடைகள்

✶ துணியின் நிறம் சாதாரண சலவைக்குட்பட்டதா? என அறிய வேண்டும்.

✶ கட்டாயமாக ரசீது வாங்க வேண்டும். வாங்கிய ரசீதை பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

✶ விலை உயர்ந்த பட்டு ஆடைகள் வாங்கும்போது 'சில்க் மார்க்' தர முத்திரை இருப்பதனை சரி பார்ப்பது அவசியம்.

தங்கம்

✶ தங்கத்தின் தரத்தை நிர்ணயிக்கும் 'Hall Mark' முத்திரை, விற்பவரின் முத்திரை.

✶ கல் பதித்த நகைகள் வாங்கும்போது, கற்களின் எடை குறித்த விவரங்கள் அடங்கிய ரசீது.

✶ நகை வாங்கியதற்கான ரசீது மற்றும் தரச் சான்றிதழ்.

போலியான விளம்பரங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள நுகர்வோர் எவ்வாறு விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும்?

✶ ஒரு பொருளை வாங்கும் போதும் அல்லது மாற்றிக் கொள்ளும் போதும் அறிவிக்கப்படும் பரிசு விளம்பரங்கள் குறித்து கவனமுடன் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

✶ பரிசு பொருட்களுக்காக, இலவச இணைப்புக்காக, தரமற்ற அல்லது தேவையற்ற பொருட்களை வாங்குதல் கூடாது.

✶ கவர்ச்சி விளம்பரங்களைக் கண்டு ஏமாறக் கூடாது.

உணவுப் பொருட்கள் வாங்கும்போது லேபிள்களில் கவனிக்க வேண்டியவை யாவை?

✶ பொருளின் விலை

✶ கலவைகள் அல்லது கூட்டுப் பொருட்களின் விபரம்

✶ தயாரித்த தேதி, ''இந்த தேதிக்கு முன் பயன்படுத்த வேண்டும்'' போன்ற விவரங்கள்

✶ எடை, காலாவதியாகும் தேதி

* தயாரிப்பாளரின் பெயர் மற்றும் முகவரி
* தரத்தை உத்திரவாதப்படுத்தும் முத்திரைகளான எப்.பி.ஓ.(FPO), அக்மார்க் (AGMARK)
* எப்படி பயன்படுத்த வேண்டும் மற்றும் எப்படி பாதுகாக்க வேண்டும் போன்ற தகவல்கள்

சிறந்த முறையில் விவசாயம் செய்து நல்ல விளைச்சலை பெற என்ன செய்ய வேண்டும் ?

* தரமான விதைகளை தேர்ந்தெடுக்கவும்.
* அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்களிடமிருந்து விதைகளை வாங்கவும்.
* போலி அல்லது வீரியம் இல்லாத விதைகளை எவரேனும் உங்களுக்கு விற்றால், உடன் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் அல்லது மாவட்ட ஆட்சியருக்கு புகார் கொடுக்கவும்.
* அளவுக்கு அதிகமான பூச்சிக்கொல்லி உபயோகத்தைத் தவிர்க்க வேண்டும்.
* இயற்கை விவசாய முறையை பயன்படுத்தலாம்.
* ஈரப்பதத்தையும், கரையும் உயிர்சத்துக் களையும் தக்க வைத்துக் கொள்ள உதவும் இயற்கை உரத்தை பயன்படுத்தலாம்.

மருந்துகளை வாங்கும் முன் கவனிக்க வேண்டியவை யாவை ?

* உற்பத்தி செய்யப்பட்ட தேதி, காலாவதியாகும் தேதி.
* மருந்தின் பெயரும், மருத்துவர் எழுதிக் கொடுத்த மருந்தையும் சரிபார்த்தல்.
* அதிகபட்சம் விற்கும் (MRP) விலை.
* வாங்கிய மருந்துகளுக்கு முறையான ரசீது.
* எப்படி சாப்பிட வேண்டும், எத்தனை முறை சாப்பிட வேண்டும். எப்படி பாதுகாக்க வேண்டும் போன்ற தகவல்கள்.

இன்றைய இளம் நுகர்வோரை சிறந்த, தெளிந்த நுகர்வோராக மாற்ற மத்திய அரசின் வழிகாட்டுதலின் பேரில், தமிழக அரசின் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் சில:

* பள்ளிகளில் / கல்லூரிகளில் நுகர்வோர் மன்றங்கள் அமைத்தல்.
* பெண்களுக்கான சுயஉதவிக் குழுக்களுக்கு நுகர்வோர் கல்வி பயிற்றுவிக்கும் முயற்சியில் ஈடுபடுதல்.
* கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் மூலம் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
* நுகர்வோரின் நலனுக்காக 'தமிழ்நாடு நுகர்வோர் கவசம்' என்கிற மாத இதழை வெளியிடுதல்.
* வானொலி, தொலைக்காட்சி, ஊடகங்கள் மூலமாக விழிப்புணர்வு கருத்துகள் வெளியிடுதல்
* தமிழக அரசிற்கு உறுதுணையாக பல தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் மக்களை சிறந்த நுகர்வோராக்க தங்கள் ஆதரவினை அளித்து இதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

வெளியீடு :
தமிழ்நாடு அரசு உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை–5.

* **ஆடம்பர நுகர்வைத் தவிர்ப்போம்!**
* **தரமான பொருட்களையும், தரமான சேவைகளையும் முறையாக பயன்படுத்துவோம்!!**
* **நுகர்வோர் நலனை பாதுகாக்க ஒன்றாக கைக்கோர்த்து குரல் கொடுப்போம்!!!**

சங்க காலப் பெண் புலவர்கள்

அவ்வையார்

தமிழ் இலக்கிய உலகில் மூத்த பெண்பாற்புலவர் அவ்வையார் பற்றி வரலாற்றுத் தகவல்கள் இல்லையென்றாலும், அவர் பாடிய பாடல்களும் வரலாற்றுப் பக்கங்களில் ஆங்காங்கே சிறிய அளவில் காணப்படுகிற குறிப்புகளும் அவ்வையார் என்ற பெண்பாற் புலவர் வாழ்ந்தார் என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

அவ்வையாரின் வரலாறு குறித்த கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், அப்படி ஒருவர் வாழ்ந்தார் என்பதனை அனைவரும் ஒப்புக் கொள்கின்றனர்.

'அவ்வையார்' என்பது ஒரு பொதுச் சொல். சங்க காலத்திலும், மூவேந்தர் ஆட்சிக் காலத்திலும் கவிஞராக இருந்த பெண்கள் அனைவரும் 'அவ்வையார்' என்றே அழைக்கப்பட்டனர் என்றும் ஒரு கருத்து உண்டு.

எப்படி இருந்தாலும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, தமிழ்நாட்டுப் பெண்கள் ஆண்களுக்கு நிகராகக் கல்வியிலும் இலக்கியப் புலமையிலும் சிறந்து விளங்கியுள்ளனர் என்பது தெரிகிறது.

சங்க இலக்கியப் பாடல்களில், 59 பாடல்களை அவ்வையார் பாடியதாகக் குறிப்பிடப்பட்டிருக் கின்றன. குறுந்தொகை, நற்றினை, அகநானூறு, புறநானூறு ஆகியவற்றில் அவ்வையாரின் பாடல்கள் காணப்படுகின்றன.

சங்ககால அவ்வையார் பாடல்கள், சங்க இலக்கியங்களில் காணப்படுவதைப்போல, பிற்கால அவ்வையார் பாடியதாக ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை (வாக்குண்டாம்) நல்வழி, விநாயகர் அகவல், அசதிக் கோவை, நான்மணிக் கோவை, அருந்தமிழ் மாலை, நான்மணிமாலை, பந்தன் அந்தாதி, கல்வி ஒழுக்கம், ஞானக்குறள், தரிசனப் பத்து போன்றவை குறிப்பிடப்படுகின்றன. இவை தவிரப் பல தனிப்பாடல்களும் உள்ளன.

அள்ளூர் நன்முல்லையார்:

பண்டைய பாண்டிய நாட்டில் உள்ள சிவகங்கை சீமையில் உள்ள அள்ளூர் என்ற சிற்றூரைச் சேர்ந்தவர் அள்ளூர் நன்முல்லையார். பிறந்த ஊரின் மீது கொண்ட பற்றின் காரணமாக, தனது பெயருக்கு முன்னால் ஊர்ப் பெயரையும் சேர்த்துக் கொண்டவர். இவர் பெண்கள் கணவனின் அன்பிற்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும், அவன் தவறு செய்யும்போது திருத்த வேண்டும், அதே நேரத்தில் உரிமையை இழக்கக் கூடாது என்றும் அள்ளூர் நன்முல்லையார் பாடியுள்ளார். பெண்ணுரிமை பற்றிப் பாடிய முதல் பெண் இவர் தான் என்று சொல்லலாம்.

ஆதிமந்தியார்

ஆதிமந்தி சோழ நாட்டை ஆண்ட கரிகால் சோழனின் மகள் என்று கூறப்படுகிறது. சோழனின் மகளான ஆதிமந்தியார், எதிரி நாடான சேர நாட்டு அரசன் ஆட்டனத்தியைக் காதல் திருமணம் செய்துகொள்கிறார்.

திருமணம் முடிந்ததும் காவிரிப் பெருக்குவிழாக் காண இருவரும் சென்றனர். நடனத்தில் சிறந்தவனான ஆட்டனத்தி, காவிரி நீரில் நடனம் ஆட விருப்பினான். ஆர்வமும் ஆசையும் தலைதூக்கத் தன் காதல் மனைவியிடம்கூடச் சொல்லாமல் காவிரி ஆற்றில் குதித்தான், கரை புரண்டுவரும் காவிரியில் நடனம் புரிந்தன அவனது கால்கள். ஆனால், வெள்ளத்தில் ஆட முடியாமல் கீழே விழுந்தான். ஆட்டனத்தியைக் காவிரி வெள்ளம் அடித்துச் சென்றது.

இந்தக் காட்சியைக் கரையில் இருந்து பார்த்துக் கொண்டு இருந்த ஆதிமந்தியார் தன் கணவரைக் காப்பாற்றுங்கள் என்று கதறினாள். ஆனால் ஆட்டனத்தியை யாரும் காப்பாற்ற முடியவில்லை. மணமாலை வாடும் முன்னே காதல் கணவனைக் காவிரி கொண்டு போய்விட்டது.

தன் குடும்பத்தையும் நாட்டையும் மறந்து ஆடற்கலையும் கவிதைக் கலையும் பயின்ற ஆதிமந்தியார், கணவனைத் தேடிக் காவிரிக் கரையில் சென்றபோது, அவனை நினைத்துப் பாடிய தன்னுணர்ச்சிப் பாடல்கள் குறுந்தொகையிலும் அகநானூற்றிலும் காணப்படுகின்றன.

கடைசியாக காவிரி கடலில் கலக்கும் இடத்தில் மருதி என்ற பெண்ணால், ஆட்டனத்தி காப்பாற்றப்பட்டு ஆதிமந்தியாரைச் சேர்ந்தான்.

காவிரி கொண்ட காதலனை மீட்ட ஆதிமந்தியார், சங்க காலத்திய காவியக் காதல் நாயகியாக இன்றைக்கும் போற்றப்படுகிறார்.

ஒக்கூர் மாசாத்தியார்

பழம்பெரும் பாண்டிய நாட்டில் உள்ள 'ஒக்கூர்' என்ற அழகிய கிராமத்தில் பிறந்தவர் மாசாத்தியார். பிறந்த ஊரின் பெருமை சேர்க்கத் தன் பெயருக்கு முன்னால் தன் ஊரின் பெயரையும் சேர்த்து ஒக்கூர் மாசாத்தியார் என்று இவர் அழைக்கப்படுகிறார்.

தமிழர் வரலாற்றில் தவிர்க்க முடியாத பெண் புலவர் ஒக்கூர் மாசாத்தியார். எதிரி நாட்டோடு போர் நடந்து கொண்டிருந்தபோது, முதல் நாளைக்கு முந்தைய போரில் தந்தையையும், முதல் நாள் போரில் கணவனையும் இழந்த அந்த சங்க காலத்து வீரத்தாய், போருக்கு வேறு ஆண் மகன் தன் குடும்பத்தில் இல்லாததால், அவருடைய சின்னஞ்சிறு மகன், பால்முகம் மாறாத பாலகனை அழைத்துத் தலைவாரி, பூச்சூடி கையில் வேலைக் கொடுத்து "போருக்குச் செல்" என்று அனுப்பிய வீரத்தாய்தான் ஒக்கூர் மாசாத்தியார்.

இந்த வீரத்தாய், சிறந்த புலவர் ஆவார். இவர் பாடியதாக அகநானூற்றில் ஏழு பாடல்களும் புறநானூற்றில் ஒரு பாடலும் உள்ளது.

காக்கைப்பாடினியார்

சேர நாட்டைச் சேர்ந்தவர் காக்கைப் பாடினியார். இவரது இயற்பெயர் நற்சோள்ளையார். இவர் பிறந்த ஊர் பற்றிய குறிப்புகள் இதுவரை கிடைக்கவில்லை. அகநானூற்றிலும் புறநானூற்றிலும் இவர் பாடியதாக 12 பாடல்கள் காணப்படுகின்றன. குறுந்தொகையில் காக்கை கரைந்தமையைச் சிறப்பாகப் பாடியதால் "காக்கைப்பாடினியார்" என்ற சிறப்புப் பெயரை இவர் பெற்றார் என்று கூறப்படுகிறது. சிறந்த இசைக் கலைஞரான இவரது பாடல்களால் கவரப்பட்ட சேர மன்னன், அவருக்கு நகையும் நிலங்களும் கொடுத்துத் தன் அவைப் புலவராக வைத்துக் கொண்டான்.

நக்கண்ணையார்

சங்க காலத்தில் வாழ்ந்த பெரும் புலவரான சோழநாட்டைச் சேர்ந்த பெருங்கோழி நாய்கன் பெருவணிகன் குடும்பத்தைச் சேர்ந்தவர் நக்கண்ணையார். இவர் பாடியதாக 8 பாடல்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. இவர் உறையூரைச் சேர்ந்த வீரை வெண்மான் வெளியன் தித்தன் என்பவரது மகன் போர்வை கோப்பெரு நற்கிள்ளியைக் காதலித்தார் என்றும் ஒரு குறிப்பு உள்ளது.

பூங்கண் உத்திரையார்

காவிரியின் வடகரையில் உள்ள 'பூங்கண்' என்ற சிற்றூரில் பிறந்த பெரும் புலவரான இவரது இயற்பெயர் 'உத்திரையார்' என்பதாகும். அழகிய ஒளி பொருந்திய கண்களைப் பெற்றதால் இவர் 'பூங்கண்' என அழைக்கப்பட்டார். சங்க இலக்கியத்தில் காணப்படும் இவரது பாடல்கள் உவமைச் சிறப்பு வாய்ந்ததாகும். இவரது பாடல் ஒன்று வெதிர மலையில் பெய்யும் மழை பற்றிக் குறிப்பிடுவதால் அம்மலையில் பிறந்தவர் என்ற ஒரு கருத்தும் உள்ளது.

வெண்ணிக் குயத்தியார்

பண்டைய சோழ நாட்டில் இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தில் உள்ள நீடாமங்கலத்திற்கு மேற்கே உள்ள வெண்ணி என்ற ஊரில் பிறந்த வீரமிக்கப் பெண் புலவர். இவர் குயவர் குலத்தில் பிறந்து புகழ் பெற்றதால், குயத்தியார் என்ற பெயரும் ஊர்ப் பெயரான வெண்ணியும் இணைந்து வெண்ணிக் குயத்தியார் என்றானது. இவரது இயற்பெயர் எதுவென்று இதுவரை தெரியவில்லை.

அக்காலத்திலேயே ஆண்களுக்கு நிகராகக் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கி அரசரையே இடித்துரைத்துத் திருத்தியவர் வெண்ணிக் குயத்தியார்.

இவர் காலத்தில் சேர மன்னன் நெடுஞ் சேரலாதனுக்கும் சோழ மன்னன் கரிகால் சோழனுக்கும் வெண்ணிப் பறந்தலையில் பெரும்போர் நடந்தது. இந்தப் போரில் கரிகால் சோழன் வெற்றி பெற்றான்.

கரிகாலன் வீசிய வேல், சேரனின் மார்பின் வழியாக ஊடுருவிச் சென்று பாய்ந்து முதுகு வழியாக வெளிவந்தது.

முதுகில் காயம்படுவது வீரனுக்கு அழகல்ல என்பதை உணர்ந்த சேரன், வடக்கிருந்து உயிர்விட முடிவு செய்தான். 'வடக்கிருத்தல்' என்பது உணவு எதுவும் உண்ணாமல் மரணத்தை ஏற்றுக் கொள்வது. மார்பில் ஏந்திய வேல்தான் முதுகைப் புண்ணாக்கியது என்ற போதும் அதையும் அவமானமாகக் கருதி உயிர்விடத் துணிந்தான் சேரன். ஆனால், சோழனோ வெற்றிக் களிப்பில் இருந்தானாம். அன்றைய புலவர்கள் கரிகால் சோழனின் போர் வெற்றியையும், அவனது வீரத்தையும் சேரனைத் தோற்கடித்ததையும் பாடினார்கள்.

குயத்தியாரோ கரிகால் சோழனின் வெற்றியைவிட, சேரனின் மான உணர்ச்சியையே பெரிது என்று கருதினார்.

கரிகால் சோழனின் அரண்மனைக்குச் சென்றார். அங்கு கரிகாலன் தன்னைப் புகழ்ந்து பாட வந்திருப்பதாகக் கருதி, வெண்ணிக் குயத்தியாரை மகிழ்ச்சி பொங்க வரவேற்றான்.

வெண்ணிக் குயத்தியார் பாடத் தொடங்கினார்.

"... ... நின்னினு நல்ல னன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புக ழுலக மெய்திப்
புறப்புண் ணாண வடக்கிருந்தோனே" (புறம் 66).

பொருள் : "வெண்ணிப் பறந்தலையில் புறப்புண் ஏற்பட்டதை எண்ணி, வடக்கிருந்து உயிர்விடத் துணிந்த சேரனே உன்னைவிட நல்லவன்" என்று பாடினார்.

வெண்ணிக் குயத்தியார் பாடியதாக ஒரே ஒரு எட்டடிப் பாடல்தான் கிடைத்துள்ளது. அந்தப் பாடலே அவரைப் பற்றியும் அவரது வீரத்தைப் பற்றியும் நமக்குப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

– 'தலைநிமிர்ந்த தமிழச்சிகள்'
நூலிலிருந்து...

* * *

சங்ககாலப் பெண்பாற் புலவர் பெருமக்கள் முப்பத்தி மூன்று பேர்

1. அள்ளூர் நன்முல்லையார்
2. ஆதி மந்தியார்
3. ஒக்கூர் மாசாத்தியார்
4. ஓரம் போகியார்
5. ஔவையார்
6. கச்சிப்பேட்டு நாகையார்
7. கழார்க்கீரன் எயிற்றியார்
8. காக்கைப் பாடினியார் நச்சோள்ளையார்
9. காவற்பெண்டு
10. காமக்கணி பசலையார்
11. குறமகள் இளவெயினியார்
12. குறமகள் குறிஎயினியார்.
13. குமிழி ஞாழலார் நப்பசலையார்
14. நக்கண்ணையார்
15. நன்னாகையார்
16. நெடும்பல்லியத்தை
17. பக்குடுக்கை நன்கணியார்
18. பூங்கண் உத்திரையார்
19. பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப் பெண்டு
20. பெரெயில் முறுவலார்
21. பேயார்
22. பேய்மகள் இளவெயினியார்
23. பொதும்பில் புல்லாளங் கண்ணியார்
24. பொன்முடியார்
25. மதுரை ஒலைக்கடையத்தார் நல்வெள்ளையார்
26. மாரிப்பித்தியார்
27. மாறலோகத்து நப்பசலையார்
28. முள்ளியூர்ப் பூதியார்
29. வருமுலையாரித்தி
30. வெறியாடிய காமக் கண்ணியார்
31. வெள்ளி வீதியார்
32. வெண்ணிக் குயத்தியார்
33. வெண்மணிப் பூதியார்

*



கங்கை கொண்ட சோழபுரம்

தமிழகத்தின் பாரம்பரியச் செழுமைகளைத் தன்னகத்தே கொண்டு தமிழகக் கோயிற் கலைகளின் உச்சமாக கம்பீரத்தோற்றத்துடன் பல நூற்றாண்டு களைக் கடந்து மிகப் பொலிவுடன் அமையப்பெற்ற பிரகதீஸ்வரர் ஆலயம் உள்ள தலம் கங்கைகொண்ட சோழபுரம். இத்தலம் தமிழகத்தின் அரியலூர் மாவட்டத்தில் உள்ளது.

அரியலூர் மாவட்டம் ஒரு புதிய மாவட்டம். பெரம்பலூர் மாவட்டத்திலிருந்து 2007 நவம்பர் 23 முதல் தனி மாவட்டமாக உருவாக்கப்பட்டது. இம்மாவட்டம் அரியலூர், செந்துறை மற்றும் உடையார்பாளையம் ஆகிய மூன்று வட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

தஞ்சைப் பெரிய கோயிலை நிர்மாணித்த இராஜராஜ சோழனின் மகன் இராஜேந்திர சோழன் பெரிய கோயிலைப் போன்றே கட்டிய கங்கைகொண்ட சோழபுரம் கோயில் இம்மாவட்டத்தின் பெருஞ்சிறப்பு. முன்னணி சிமெண்ட் தொழிற்சாலைகள் இங்குதான் அமைந்துள்ளன.

மாவட்டத்தின் இயற்கைப் பதிவுகள்

பரப்பளவு	:	1939.31 சதுர கி.மீ.
மக்கள் தொகை	:	6,94,524 (2001)
மழைப்பொழிவு	:	951.1 மி.மீ. (வருடம்)
தட்பவெப்பம்	:	உயரளவு 38° செ.
குறைந்த அளவு	:	24° செ.

கங்கைகொண்ட சோழபுரம்

கங்கை அரசர்களை வெற்றி கொண்ட சோழபுரம், கங்கைகொண்ட சோழபுரம். வடநாட்டுப் போரில் அடைந்த வெற்றியின் அடையாளம். இங்குள்ள பிரகதீஸ்வரர் ஆலயத்தைக் கட்டியவர் சோழ அரசர் 'முதலாம் இராஜேந்திரர். இக்கோயிலில் தஞ்சைப் பெரிய கோயிலைப் போன்று பெரிய நந்தி மட்டுமல்லாமல், நாட்டியமாடும் வினாயகர் உட்பட பல அழகு மிகு சிற்பங்கள் நிறைந்துள்ளன. சிங்கத்தலை கொண்ட கிணறு மற்றும் அரசர் இராஜேந்திரருக்கு பார்வதி பரமேஸ்வரரே முடிசூட்டும் அரிய சிற்பங்கள் இந்தக் கோயிலில் உள்ளன. சோழர்களின் பழமையான சாதனைகளில், பிரமாண்டங்களில் கங்கைகொண்ட சோழபுரத்திற்குத் தனிப்பெருமை உண்டு.

இக்கோயில் உலகப் பாரம்பரியத் தலங்களில் ஒன்றாக அறிவிக்கப்பட்ட மாபெரும் சிறப்பு பெற்ற ஒன்று. இத்தலத்தில் கட்டப் பெற்றுள்ள பிரகதீஸ்வரர் ஆலயம் மாமன்னர் இராஜராஜ சோழனின் புதல்வர் மன்னர் இராஜேந்திரன் ஆட்சிக் காலத்தில் (கி.பி.1012–44) கட்டப்பெற்ற ஒன்று. இத்தலத்தை தலைநகராகக் கொண்டு சோழ கங்கம் எனும் மிகப் பெரிய ஏரியை உருவாக்கி, பத்திற்கும் மேற்பட்ட கோயில்களைக் கட்டி சிறப்புற ஆட்சிபுரிந்த மன்னர் இராஜேந்திரன் ஆவார்.

முக்கிய விழாக்கள்

அன்னாபிஷேகம் : அக்டோபர்–நவம்பர்

கிராமியக் கலைவிழா : டிசம்பர் – ஜனவரி வரை தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறையும் மாவட்ட நிருவாகமும் இணைந்து இவ்விழாவினை நடத்துகிறது.

ஏலாக்குறிச்சி – அடைக்கலமாதா கோயில்

"தேம்பாவணி" எழுதிய வீரமாமுனிவரால் கட்டப்பட்ட தேவாலயம். ஜோசப் பெஸ்கி என்ற இயற்பெயர் கொண்ட இந்த கத்தோலிக்க திருச்சபை பாதிரியார், 1711 இல் ஏலாக்குறிச்சியில் இதை உருவாக்கினார். இங்குள்ள அடைக்கலமாதா சொரூபம், லண்டன் மாநகரில் இருந்து கொண்டு வரப்பட்டது. பெரம்பலூரில் இருந்து 65 கி.மீ. திருச்சியில் இருந்து 80 கி.மீ. சென்னையில் இருந்து 375 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது ஏலாக்குறிச்சி. இந்த மாதா கோயிலுக்கு சோழ மன்னன் நிலக் கொடை அளித்ததை அறிவிக்கும் கல்வெட்டு சாசனம் ஏலாக்குறிச்சியின் மற்றொரு சிறப்பு.

பத்திரிகைகள்

- ★ இந்தியாவின் முதல் செய்திப் பத்திரிகை 1780ஆம் ஆண்டு கல்கத்தாவில் இருந்து வெளியான 'பெங்கால் கெஜட்' என்ற வாரப்பத்திரிகை தான்.
- ★ ஆசியாவின் மிகப் பழமையான செய்தித்தாள் 'மும்பை சமாச்சர்'. 1.7.1822 முதல் வார இதழாக வெளிவந்து, பிறகு தினசரியாக மாறியது.
- ★ இந்திய மொழிகளில் பத்து இலட்சம் பிரதிகளைத் தாண்டிய முதல் நாளிதழ், 'மலையாள மனோரமா' நாளிதழே.
- ★ இந்தியாவின் முதல் மாநில மொழிப் பத்திரிகை வங்காள மொழியில் 1818ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'தி திக்தர்சன்' என்ற பத்திரிகைதான்.

ஜெயங்கொண்டம்

நெல்லிமண கிராமம் என்றால் யாருக்கும் புரியாது. ஜெயங்கொண்டம் என்றால் புரிந்துவிடும். இவ்வூரின் இயற்பெயர் இதுதான். இங்குள்ள சிவன் கோயிலின் ஸ்தல விருட்சம் நெல்லிமரம் என்பதால் ஊர்ப் பெயரில் நெல்லியும் சேர்ந்து கொண்டது. தனது தலைநகரை கங்கைகொண்ட சோழபுரத்திற்கு மாற்றுவதற்கு முன்னால், இராஜேந்திர சோழன் ஜெயங்கொண்டம் என்ற பெயரை இந்த ஊருக்கு வைத்தான். கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து 9 கி.மீ. தொலைவில் இருக்கும் ஜெயங்கொண்டம் எல்லோரும் கண்டிப்பாக போய்ப் பார்க்க வேண்டிய சோழர் காலக் கலை நகரம்.

திருமழபாடி

ஊருக்கொரு புராணக் கதையோ, வாய்மொழிக் கதையோ இருக்கிறது. அப்படியொரு கதை இந்த ஊருக்கும் உண்டு. இங்கு பிரபலமான புராணக்கதை ஒன்று உலவுகிறது. தாளவனம் என்று அழைக்கப்பட்ட இந்த ஊரில், மார்க்கண்டேய முனிவருக்காக மற்றொரு பிரபஞ்ச நடனத்தை வைகாசி மாதம், பௌர்ணமி அன்று அருளுவதாக நடராசர் வாக்கு தந்தாராம். ஏனெனில், சிதம்பரத்தில் நடராசர் ஆடிய ஆதி தாண்டவத்தை காணமுடியவில்லையாம். எனவே இந்த ஊர் திரு–மழ–பாடி என்று அழைக்கப்படுகிறது. இக்கோயிலின் திருக்குளத்தில் குளித்தால் தொழுநோய் தீரும்; பிள்ளை பாக்கியம் கிட்டும் என்று மக்கள் நம்புகிறார்கள்.

காரைவெட்டி பறவைகள் சரணாலயம்

பறவைகள் எங்கிருந்தால் என்ன ? பார்க்கப் பார்க்க அழகுதான். தஞ்சாவூருக்கு வடக்கே 35 கி.மீ. தொலைவில் உள்ளது காரைவெட்டி பறவைகள் சரணாலயம். இதன் மொத்தப் பரப்பு 454 ஹெக்டேர். காலிமர் பறவைகள் சரணாலயத்துக்கு அடுத்து இந்தச் சரணாலயம் தான் பெரும்பாலான நீர்ப்பறவைகளைக் கவரக் கூடியது என்ற புகழுக்குரியது. ஒவ்வொரு நவம்பர் மாதமும் பறவைகள் இங்கு வருகை தரும். அந்தக் காலங்களில் பறவைகள் நீரில் வண்ண ஒவியங்களாகத் தெரியும். நீர்வண்ண ஒவியங்கள்!

திருமானூர்

திருமான் ஊர் தலத்தில் ஒரு கலைமானுடன் நடராசர் நாட்டியம் ஆடியதாக உள்ளூரில் புராணக் கதை ஒன்றுள்ளது. அதனால் இந்தப் பெயர் வந்ததாக வரலாறு. இராஜராஜ சோழன் பெரம்பலூரிலிருந்து தஞ்சைக்குச் செல்லும் வழியில் 20 அடி உயரம் உள்ள ஒரு சிலையை விட்டுச் சென்றதாகச் சொல்லப்படுகிறது. வருடத்தில் சில நாட்கள் சூரியக் கதிர்கள் கோயிலின் கர்ப்பக் கிரகத்தின் உள்ளே விழும். சோழர்கால வரலாற்றின் காலச் சுவடுகள் பதிந்த ஊர் இது. ஒருமுறை பார்த்தால்தான் என்ன குறைந்துவிடப் போகிறது.

காமரசவல்லி

தஞ்சை மாவட்டத்தைப் போலவே சோழர் காலத்து பிரமாண்ட எழில் நிறைந்த கோயில்களைக் கொண்டுள்ளது அரியலூர். இராஜராஜ சோழனால் கட்டப்பட்ட இக்கோயில், அரியலூர் ரயில் நிலையத்திலிருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ளது. சோழர் காலத்தைச் சேர்ந்த ஏராளமான ஆதாரங்கள் இந்தக் கோயிலில் கண்டெடுக்கப்பட்டன. இங்கு அப்பர் சுவாமிகள் மேளத்துடன் சாக்கைய கூத்து ஆடிய நிலையில் காணப்படுகிறார்.



மாளிகை மேடு

இந்த மாளிகை மேடு கங்கைகொண்ட சோழபுரத்திற்கு அருகில் உள்ளது. தொல்லியல் துறையின் அகழ்வாய்வுகள் முதலாம் இராஜேந்திர சோழனின் பெருமையைப் பறைசாற்றுகின்றன. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம் என்பதால், தொல்லியல் துறை இந்த இடத்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. மாமன்னர்கள் கால் பதித்த மாளிகை மேட்டிலும் நம் கால் பதிய வேண்டாமா ?

மேலப்பழுவூர்

தமிழ்த் துறவிகளின் சரணாலயமாகத் திகழ்ந்துள்ள ஊர் இது. அரியலூர் – திருச்சிராப்பள்ளி சாலையில் அமைந்திருக்கிறது. மேலப்பழுவூருக்கு வரலாற்றில் முக்கிய இடமுண்டு. இந்தப் பகுதியில் தலைவராக ஆட்சிபுரிந்துள்ள பழுவேட்டரையரின் தலைமையகமாக விளங்கியுள்ளது. இங்குள்ள குடைவரைக் கோயிலான விஷ்ணு கோயில் மனத்தைக் கவரக் கூடியது. இக்கோயிலில் ஒவ்வொரு வாரமும் திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமையன்று பூஜைகள் நடக்கும்.

ஒரு டன் பால்



நீலத்திமிங்கலம் தான் உயிரினங்களிலேயே பெரியது. 150 டன் எடையும் 100 அடி நீளமும் இருக்கும். அதாவது யானையைப்போல் ஐந்து மடங்கு பெரியது. பிறந்தவுடனேயே 3,000 கிலோ எடை கொண்டதாக இருக்கும். ஒரு நாளில் 100 கிலோ எடை கூடும். வாரத்தில் ஓரடி வளரும். குட்டி ஒரு நாளில் குடிக்கும் தாய்ப்பால் எவ்வளவு தெரியுமா ? ஒரு டன்!

கள்ளன் குறிச்சி கோயில்

இவ்வூர் ஒரு சிறு கிராமம். ஆனால் பல மாவட்டங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்கும் பரிச்சயமான கிராமம். இங்குதான் கலியுக வரதராஜப் பெருமாள் கோயில் இருக்கிறது. அரியலூரிலிருந்து 5 கி.மீ. தொலைவில் கள்ளன் குறிச்சி உள்ளது.

கங்கைகொண்ட சோழபுரத்திற்கு எப்படிச் செல்வது ?

வானூர்தி – இத்தலத்திற்கு அருகில் உள்ள வானூர்தி நிலையம் திருச்சிராப்பள்ளி 102 கி.மீ. தொலைவில் உள்ளது.

இரயில் – அரியலூர் ரயில் நிலையம் 45 கி.மீ.. தொலைவில் உள்ளது. சிதம்பரம் 41 கி.மீ. தொலைவில் உள்ளது.

பேருந்து – கங்கைகொண்ட சோழபுரம் அருகில் உள்ள பெரிய பேருந்து நிலையம் ஜெயங்கொண்டம். 9 கி.மீ. தொலைவில் உள்ளது. திருச்சிராப்பள்ளி 102 கி.மீ. தொலைவிலும், சிதம்பரம் 41 கி.மீ. தொலைவிலும், அரியலூர் 45 கி.மீ. தொலைவிலும், தஞ்சாவூர் 75 கி.மீ. தொலைவிலும் உள்ளது.

சுற்றுலாத் தகவல் அளிப்போர் :

சுற்றுலா அலுவலர், சுற்றுலா அலுவலகம்,
மகாத்மா காந்தி சாலை, தஞ்சாவூர்–613 001,
தொலைபேசி : 04362–230984.

சுற்றுலா அலுவலர், சுற்றுலா அலுவலகம்,
1, வில்லியம்ஸ் சாலை,
திருச்சிராப்பள்ளி–620 001.
தொலைபேசி : 0431–2460136

✶ ✶ ✶

வேளாண்மையும் நவீனத் தொழில் நுட்ப முறைகளும்

ஜெர்மனி நாட்டில் இக்காலத்தில் காணப்படும் நிலை ஒன்றை நாடோடி ஒருவர் பின்வருமாறு வர்ணிக்கிறார். பழைய நிலச் சர்வே படம் ஒன்றை எடுத்துக் கொண்டு நாம் ஊர் சுற்றப் புறப்படுகிறோம்.

நாம் நம்முடைய சிறுவயதில் பார்த்தவைகளை நினைவுகூற முயல்கிறோம். நாம் இருக்கும் இடத்தைக் குறிக்கும் சர்வேப் படப்பகுதியைப் பார்த்தால், அதில் காண்பவைகளுக்கும் கண் முன்னே இருப்பவைகளுக்கும் எவ்விதமான தொடர்புமே இல்லாதது போல் தோன்றுகிறது. நாம் முன்னால் நடந்து சென்ற ஒற்றையடிப் பாதை நினைவுக்கு வருகிறது. அது வயல்களில் ஊடாக நெளிந்து நெளிந்து சென்றதும், அதன் இருபுறமும் பச்சைப் பசேல் என்ற புல்திட்டுத் திட்டாகவோ, நெடுகவோ பரந்திருந்ததையும் மனக் கண்ணில் காண்கிறோம். ஆனால் உண்மையில், அப்போது அதற்குப் பதிலாக நேர்கோடு வரைந்ததைப் போன்று நேராக இடப்பட்ட காங்கிரீட் சாலையைக் காண்கிறோம். சிறிதும் பெரிதுமான வரப்புக்கள் இடப்பட்டிருந்த சிறிய வயல்கள் அங்கே இல்லை, அவற்றுக்குப் பதிலாக, மிகப்பெரிய, சதுர வடிவமாக அமைந்துள்ள வயல்களைக் காண்கிறோம்.



முன்னால் உளுத்துப் போன மரக்கட்டைகளால் இடப்பட்ட மரப்பாலத்துக்குப் பதிலாக இப்பொழுது அகன்ற திண்ணிய பாலத்தைக் காண்கிறோம். அதன் அடியில் ஓடிய ஓடை, கரை இடிந்தும், மண்ணால் தூர்ந்தும் இருந்தது. அதற்குப் பதிலாக, இப்பொழுது நன்கு கரையிடப்பட்டதும், தூர் வாரியதால் நீர் நெளிந்தும் விரைந்தும் ஓடும் நீரோடையையோ, சிற்றாறையோ காண்கிறோம். முன்னாளில், கண்டபடி இங்குச் சிலவும் அங்குச்

சிலப்பதிகாரம் உணர்த்தும் பதினொரு ஆடல்கள்

கோ. சண்முகவேல்

அரங்கேற்று காதையின், ஆடலாசிரியன் அமைதி என்பது அமைப்பு, இயல்பு, இலக்கணம் என்னும் பொருள்படுவது. ஓர் ஆடலாசிரியர் அறிந்திருக்க வேண்டிய இலக்கியம், இசை, மெய்ப்பாடு, நடனக்கலை முதலியவற்றை அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகின்றார். இருவகைக்கூத்து, பலவகைப்பட்ட புறநடனங்கள் விலக்குறுப்பு, அல்லியம் முதல் கொடு கொட்டி ஈறாக உள்ள பதினொரு வகைக்கூத்துக்கள், வாச்சியக்கூறுபாடுகள், தாளங்கள் இதன்வழி வந்ததூக்குகள், அகக்கூத்து, புறக்கூத்து, பிண்டி, பிணையல் எழிற்கை, தொழிற்கை, அவிநய இயக்கங்கள், குரவை. வரிக்கூத்து தம்மில் விரவாதபடி செலுத்தும் முறைகள் அறிய முடிகிறது. சிலப்பதிகாரம் பதினொரு வகை ஆடல்களும் தமிழக மக்களின் வாழ்வோடு இயைந்த ஏதேனும் ஒரு கதையை மையமாகக்கொண்டு படைக்கப்பெற்ற செவ்விய செந்தமிழின் இசைக் கருவூலமாகும்.

சிலவுமாகச் சிற்சில குடிசைகள் ஒழுங்கின்றிக் கும்பல் கும்பலாக இருந்தன. இப்பொழுது அகலப்பரந்த வயல் பரப்புகளின் ஊடே சற்றே தொலைவில், ஒழுங்காக அமைந்தவையும், நன்றாகக் கட்டப்பட்டவையுமான, வீடுகள் சிலவும், அவற்றைச் சூழ்ந்த பண்ணை நிலங்களுமாக நன்கு அமைந்துள்ளதை காண இயலும். முன்னைப்போல் குறுகலான சிறிய தெருக்களில் அமைந்த வீடுகள் இப்போது காணப்படவில்லை. முன்னர் இருந்த நடை பாதைகளும், புல்வெளிகளும், கூரைமீது படர்ந்த கொடிகளும், இங்கும் அங்கும் காணப்பட்ட மேடு பள்ளங்களும், சிறிய நீர்த்தேக்கங்களும், பயனற்றும் கோணல் மாணலாகவும் வளர்ந்த மரங்களும், புதர்களும் வனப்பு மிக்க நாட்டுப்புறக் காட்சியை அளித்தன என்று மகிழ்ந்தோம், நாம் இப்போது அக்காட்சிகளைக் காண முடியாது. மனம் போனவாறு அமைந்த இயற்கை வனப்புக்குப் பதிலாக, ஒழுங்காக அமைந்த செயற்கையழகே அங்கே காணப்படுகிறது. இதற்குக் காரணம் என்ன ?

இக்காலத்து விவசாய முறைகளில் ஏற்பட்டிருக்கும் ஒரு புரட்சியே இதற்குக் காரணம். நெற்றி வேர்வை நிலத்தில் விழ உடல் நொந்து, மனம் நொந்து, வகைபறியாமல் பண்டைப் பழம்முறைகளையே கையாண்டு வந்து, முன்னேற முடியாமல் மண்ணுக்கு அடிமைகளாக இருந்த மக்கள் இந்நாளில் விடுதலை பெற்றுவிட்டனர். கணுக்கால் சேற்றிலோ, புழுதியிலோ, ஏர்கலப்பைப் பிடியைக் கையால் அழுத்தி, உடல் நோவ உழுத மக்கள், இப்பொழுது டிராக்டர்களின் மீதேறி அமர்ந்து, உல்லாசமாகச் சவாரி செய்கிறார்கள். பெரு நிலப் பரப்புக்களை எளிதாக உழுது பக்குவப்படுத்துகிறார்கள். அவர்களுடைய நிலை உயர்வதைப் போல் அவர்களுடைய பதவியும் செல்வமும் அறிவும் மனமும் உயர்கின்றன. அவர்களுடைய வகை அறிந்த முயற்சியால் நிலம் வளம் பெறுகிறது; நல்ல பயனை அளிக்கிறது; நாடு செழிக்கிறது, யாவரும் மனமகிழ வயிறு பட்டினி இன்றி வாழ, வாய்ப்புகள் ஏற்பட்டுவிட்டன.

ஜெர்மனி நாட்டிலே குடியானவர்கள் 18ஆம் நூற்றாண்டிலும், 19ஆம் நூற்றாண்டிலுமாக, விடுதலை பெற்றார்கள். இந்த விடுதலை இயக்கம் நன்கு தொடங்கி இப்போது நூறு ஆண்டுகள்போல் ஆகின்றன. சின்னஞ்சிறு நிலப் பகுதிகளுக்கு அடிமைப்பட்டு வாழ்ந்த குடியானவர்கள், அவ் அடிமை நிலையால் மனம் நொந்து, அதை வெறுத்து தங்கள் நிலங்களைப் பிறரிடம் ஒப்புவித்து விட்டு, நகர்களில் குடியேறினார்கள். பின்பு இயந்திரங்கள் வந்தன. மற்றொரு விவசாயப் புரட்சி ஏற்பட்டது. தலைமுறை தலைமுறையாக பரம்பரைக் கிராமத்தில் வந்து, துண்டு துண்டாகக் கத்தரிக்கப்பட்ட நிலத்தை இறுகப்பற்றி அதிகப்பயன் இல்லை என்று அங்கே தெரிந்து கொண்டு விட்டார்கள். அங்கே, இப்பொழுது தெரிந்து கொண்டிருக்கும் கருத்துப்படி 25 ஏக்கர் என்பது ஒவ்வொரு குடும்பத்துக்கும் சிற்றெல்லையாக இருக்க வேண்டியது. பேரெல்லை எவ்வளவு வேண்டுமானாலும் இருக்கலாம். 25 ஏக்கரையோ, 30 ஏக்கரையோ பேரெல்லையாகக் கொள்வது விவசாய முன்னேற்றத்துக்கோ, நாட்டின் செழிப்புக்கோ உகந்த முறை அன்று. ஆனால் இவ்வாறு ஏற்பாடு செய்வது சிரமம். சிரமத்தைப் பொருட்படுத்தாமல் நன்முயற்சி தொடங்கப்பட வேண்டும் என்பது தெளிவு. பிற நாடுகளில் நற்பயன்களை அளித்துவரும் விவசாய முறைகள் நம் நாட்டிலும் அளித்துவரும் என்று நினைப்பது நியாயம்தானே ? அவை ஒழுங்கான முறையிலும், அறிவோடும், நாட்டுநலம் கருதியும் பின்பற்றப்பட்டு வருமானால் – அல்லது சுயநலம் கருதிப் பிறரை வஞ்சிக்காமல் நடந்து கொண்டால் – அவை தனி மனிதனுக்கும், நாட்டுக்கும் நிச்சயமாக நற்பயன் அளிக்கும்.

இயந்திர முறை

இது ஜெர்மனியில் மெல்ல மெல்லத் தொடங்கப்பட்டது. ஆனால் காட்டுத் தீயைப்போல் விரைவில் பரவிவிட்டது. இதன் முதல்படி விவசாயிகள் அறிவுடைய மக்களாக ஆகி, புதிய முறைகளைக் கையாளுவதில் ஊக்கம் கொள்ளுவதேயாகும். சீராகத் தொடங்கிவிட்டால், மேன் மேலும் அறிவு பெருகும், செல்வமும் செழிக்கும் நாடு முன்னேற்றம் பெற்ற நாடாக ஆகிவிடும்.

இந்நாட்டிலும் இப்போது பல இடங்களில் இயந்திர முறைகள் பிறநாட்டு அறிஞர்களின் துணையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவை பெருகினால் நல்லது. அவ்வாறு நடைபெறுமாறு அனைவரும் முயலுவது நன்று.

– நன்றி : உலகத் தமிழராய்ச்சி நிறுவனம்
வெளியிட்ட பெ.நா. அப்புசுவாமியின்
அறிவியல் கட்டுரைகள் நூலிலிருந்து...

* * *

காத்திருத்தல்

– நிருஸின்ஹா ராஜ்புரோஹித்

இராஜஸ்தானி மொழிக்கதை – ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் : திலகவதி

ராம்காருக்கு நான் எத்தனையோ முறை போயிருக்கிறேன். ஆனால், இந்த முறை போவதென்பது மிகுந்த சங்கடம் தருவதாக இருந்தது. விவரித்துச் சொல்ல முடியாத சங்கடம். முன்பெல்லாம் ராம்காருக்குப் போக வாய்ப்புக் கிடைத்தால், பயணத்துக்குப் பல தினங்கள் முன்பிருந்தே, மனம் மகிழ்ச்சியில் மௌனமாய்த் திளைக்கும். அது ஒரு தொடர்ந்த உற்சாகமான மனநிலை. பஸ்ஸில் ஏறியதிலிருந்து அதன் வேகம் அதிகரிக்க, அதிகரிக்க என் ஆனந்தமும் அதிகரிக்கும். பஸ் ஒவ்வொரு முறை குதிக்கும் போதும் என் இதயமும் மகிழ்ச்சியால் எம்பிக் குதிக்கும்.

இந்தத் தடவை எனக்குக் கிடைத்த அனுபவம் அதற்கு நேர்மாறாக இருந்தது. ரயிலை விட்டு இறங்கி பஸ்ஸை நோக்கி நடக்கும்போது, என் பாதங்களில் ஏதோ கனமான பொருள் கட்டப்பட்டிருப்பது போலத் தோன்றியது. அதைப் போலவே கனக்கிற மனத்தோடு, பஸ்ஸில் என் இருக்கையில் ஒரு மாதிரியாகப் போய் உட்கார்ந்தேன். பயணத்தைத் தொடரும் எண்ணத்தைக் கைவிட்டு விட்டு, நான் திரும்பிப் போய் விடுவேன் என்று பயந்தது போல, பஸ் ஒரு குலுக்கலுடன் உடனே புறப்பட்டது.

பஸ் குலுங்கிக் கொண்டும் குதித்துக் கொண்டும் வேகமாய் ஓடிற்று. மணற்பாதையெங்கும் புழுதி மண்டலம். சிறிய குடிசைகள் பின்னோக்கி ஓடின. ராம்கார் வந்துவிட்டது. பஞ்ஜி சௌஹானின் கேணி முதலில் வரும். அப்புறம் இருபுறமும் செடிகள் அடர்ந்த குறுகலான பாதை. அதைக் கடந்ததும் ராம்காரின் புதர்கள் பார்வையில் படும். அப்புறம் புகையிலைக் குழாயில் புகையிலையைப் போட்டுக் கொள்கிற நேரத்துக்குள் ராம்கார் வந்துவிடும். பஸ் நிலையத்தில் நல்ல கூட்டம் இருக்கும். பயணம் போகிறவர்களும், போகிறவர்களை வழியனுப்புபவர்களுமாக நிறையவே கூட்டம் இருக்கும். போன வருஷம் நான் போனபோது, தாபு, கிஸானு இரண்டு பேருமே என்னை அழைத்துப் போக வந்திருந்தார்கள். "ஹைய்யா! மாமா வந்துட்டாரு! மாமா வந்துட்டாரு," என்று என்னைக் கண்டவுடன் கைகளைத் தட்டிக்கொண்டு சந்தோஷமாய்க் குதித்தான் கிஸானு. பாவாடையைத் தூக்கிக் கொண்டு, தன் அம்மாவிடம் அவள் அண்ணன் வந்திருக்கிற சந்தோஷச் செய்தியை சொல்ல வேண்டும் என்று தாபு ஓடினாள்.

புடைக்கும்போது முறத்தில் சிறிதும் பெரிதுமான தானிய மணிகள் துள்ளி விழுவது போல பயணிகள், வண்டி ஒவ்வொரு முறை குலுங்குகிற போதும், எழுவதும் விழுவதுமாக இருந்தார்கள். இறுதியான ஒரு பயங்கர குலுக்கல் என்னை உறக்கத்திலிருந்து எழுப்பியது. பஸ் ராம்காரை அடைந்து விட்டிருந்தது. நானும் கையில் பையுடன் இறங்கி நடக்க ஆரம்பித்தேன். கூட்டத்தில் இருந்து சற்று விலகி, ஒரு மேட்டில் ஒரு பையன் நின்றிருந்தான். கிஸானு மாதிரி இருக்கிறானே என்று நினைத்தேன். இல்லை அவன் ஒருபோதும் கிஸானுவாக இருக்க முடியாது. கலைந்த தலை, கைகளிலும், கால்களிலும் அப்பிக் கொண்டிருந்த அழுக்கு, உடம்பை மறைக்க ஒரு அழுக்குச் சட்டை, விரலைச் சப்பிக்கொண்டு வண்டியை மெய்மறந்து பார்த்துக் கொண்டு நின்றான். அவனுக்குப் பக்கத்தில் போய்ப் பார்த்து அவன் கிஸானுதான் என்று நான் தெரிந்து கொண்டேன். ஆச்சர்யமாய் இருந்தது எனக்கு. கிஸானு – என்று மெதுவாகக் கூப்பிட்டேன். ஆனால், அவன் என்னைப் பார்க்கவே இல்லை. அவனுடைய பார்வை வண்டியின் மீது பதிந்து போய் விட்டிருந்தது. "டேய்! மருமகனே" உரத்த குரலில் அழைத்தேன். இந்த முறை அவன் திரும்பி என்னைப் பார்த்தான். வெளேரென்ற பெரிய விழிகள். கண்ணீர்க்கறை படிந்த கன்னங்கள். ஒருகணம் உற்றுப் பார்த்தான். பின்னர் மறந்து போய்விட்ட எதையோ நினைத்துக் கொண்டவனைப் போல திடீரெனப் புன்னகை செய்தான். "வந்துட்டீங்களா மாமா! உங்களை அழைச்சிகிட்டுப் போறதுக்குத் தினமும் நான் இங்கே வருவேன்."

"அதனாலதான் நான் உன்னைப் பார்க்க வந்திருக்கேன் கண்ணு."

"எங்கம்மா எங்கே மாமா? அம்மா ஆஸ்பத்திரியிலே இருந்து வந்துடுவாங்க. நீங்க அவளோட வருவீங்கன்னு அப்பா சொல்லிக்கிட்டே இருக்காரு."

அவன் சுற்றுமுற்றும் பார்த்து மனம் தளர்ந்தான். அவனுக்குப் பதில் சொல்வது எனக்குக் கஷ்டமாய் இருந்தது. அந்தக் கள்ளம்கபடமறியாப் பிஞ்சிற்கு என்ன பதில் சொல்லுவேன்? அவன் கொண்டிருந்த நம்பிக்கையை நான் எப்படித் தகர்ப்பேன்? நான் அவன் வாழ்வின் நம்பிக்கை இழையை எவ்வாறு அறுப்பேன்? பாதாளத்தின் ஆழத்தில் அவனை இறக்கி விட்ட சரட்டை நான் எவ்வாறு கத்தரிப்பேன்? "உங்கம்மாவுக்கு இன்னும் உடம்பு நல்லா ஆகலைப்பா! உடம்பு முழுக்க முழுக்க நல்லா ஆகாத வரைக்கும் அவளை ஆஸ்பத்திரியிலே இருந்து அழைச்சிகிட்டு வர முடியாது." நான் அவனை என் கைகளில் எடுத்துக் கொண்டேன்.

"அம்மா எப்போ ஆஸ்பத்திரியில இருந்து வரும்? எவ்வளவு நாளாகும்? நான் தினம் அம்மாவுக்காக காத்திருக்கிறேன். நீங்க எல்லோரும் பொய் சொல்லி என்னை ஏமாத்தறீங்க." ஏமாற்றம் அடைந்தவனாக அவன் அழத் தொடங்கினான். அவனை நான் உடம்போடு சேர்த்து அணைத்துக் கொண்டேன். விம்மல்களால் அவன் உடம்பு குலுங்கிக் கொண்டிருந்தது. ஏதேதோ செய்து, மிக சிரமப்பட்டு அவனை அமைதியடையச் செய்தேன்.

"இத பாரு கண்ணு! நீ புத்திசாலிப் பையன் இல்லையா? உங்க அம்மாவுக்கு ரொம்ப நாளாவே உடம்பு சரியில்லை. அதுக்கு வைத்தியம் பண்ணிக்கலைன்னா அவளுக்கு எப்படிக் குணமாகும். நல்லா ஆயிட்ட உடனே நான் அவளை இங்கே அழைச்சிட்டு வருவேன். பாரு! உனக்கு பை நிறைய விளையாட்டுச் சாமான் கொடுத்தனுப்பியிருக்கா. இதிலிருந்து ஒண்ணுகூட தாபுக்கு நீ தரவேண்டியதில்லை."

அவன் கொஞ்சம் ஆறுதல் அடைந்தான் கண்களில் இருந்து கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவன் சொன்னான். "மாமா! என்னை அம்மா கிட்ட கூட்டிட்டுப் போங்க. நான் தொந்தரவு

பண்ணமாட்டேன். அம்மா இல்லாம எனக்கு எதுவுமே பிடிக்கலை. அப்பா என்னை மிரட்டிகிட்டே இருக்காரு. தாபு தினமும் அடிக்கிறா. அம்மா அப்படிச் செஞ்சதேயில்லை."

"பாட்டி வீட்டுக்குப் போயிடறையா கண்ணு? பாட்டி உன்னை ஆசையா வச்சுக்குவா, அங்கே யாரும் உன்னை அடிக்க மாட்டாங்க." அவனுக்கு அது பிடிக்கவில்லை. ஒரு கணம் தாமதித்துவிட்டு அவன் சொன்னான். "எனக்கு அம்மாகிட்டே தான் போகணும். பாட்டிகிட்ட வேண்டாம்." என் கைகளைப் பிடித்துக் கொண்டு அவன் மறுபடியும் சொன்னான். "மாமா! எங்கம்மா செத்துட்டாங்கன்னு பையனுங்க சொல்றாங்க. அவங்க பொய்தானே சொல்றாங்க? இல்லை, மாமா?" அது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. இருந்தாலும். "அந்தத் துடுக்குப் பயலுங்க பயங்கரமா பொய் சொல்றாங்க. சும்மா உன்ன கலாட்டா பண்றாங்க," என்று நான் சொன்னேன். அதற்குள் நாங்கள் வீடு போய் சேர்ந்தோம். நான் அவனைக் கீழே இறக்கி விட்டேன்.

"அடக்கடவுளே! இந்தக் கோலத்திலா இந்த வீடு இருக்கவேண்டும்! எப்பொழுதும் புத்தம் புதிதாகக் கழுவித் துடைத்து சுத்தம் செய்யப்பட்டு, தெய்வங்கள் வாழும் இடம்போல் இருந்த வீடு இப்போது பிசாசுகள் நடமாடும் இடம் போன்று காட்சியளித்தது. குப்பையும் அழுக்கும் குவிந்து கிடந்தது. வாசலில் இருந்து வேப்பமரத்தின் கீழ் கோழிகளின் எச்சம் குவிந்திருந்தது. துலக்காத பாத்திரங்கள், மூடப்படாத தண்ணீர்ப்பானை, மொய்க்கின்ற ஈக்கூட்டம் ஒரு விசித்திரமான அமைதியும், சோகத்தின் நிழலும் அந்த இடத்தைச் சூழ்ந்து கொண்டிருந்தது.

நான் தாபுவைக் கூப்பிட்டேன். பக்கத்தில் இருந்த ஏதோ ஒரு வீட்டிலிருந்து அவள் ஓடிவந்தாள். வழக்கம்போல இந்த முறை அவள் என் கால்களைக் கட்டிக்கொள்ளவில்லை. பத்துப் பன்னிரெண்டு வயதான அந்தப் பெண், கடந்த ஆறு மாதத்திற்குள் முதிர்ந்த மனுஷியாக ஆகிவிட்டது மாதிரி இருந்தது. வற்றிப் போன முகமும், அழுக்கான துணிகளும், கூடு கட்டிய தலை மயிருமாக அவள் இருந்தாள். நான் கையை நீட்டித் தடவிக் கொடுத்ததும் வாய்விட்டு அழத் தொடங்கினாள். என்னால் அவளைச் சமாதானப்படுத்த முடியவில்லை.

நான் உடனடியாக வீட்டைச் சுத்தம் செய்தேன். பின்னர் வேப்பமரத்துக்கு கீழே இருந்த கட்டிலில் ஒய்வாகப் படுத்துக் கொண்டேன். உடம்புக்கு ஒரு மாதிரியாக இருந்தது. அந்த வீட்டின் ஒவ்வொரு மூலைமுடுக்கும் என் சகோதரியை நினைவுபடுத்தின. அவள் சமையலறையில் சுறுசுறுப்பாகச் சமைத்துக் கொண்டிருப்பது போலவும், சற்று நேரத்தில் என்னைக் கூப்பிடுவாள் என்பது போலவும் தோன்றிக் கொண்டே இருந்தது. பாலைக் கறந்து கொண்டிருப்பதாகவும், கிஸானுவை டம்ளரை எடுத்துக் கொண்டு வரும்படி அழைப்பதாகவும் தோன்றியது. கொட்டிலில் தானியத்தை அரைத்துக் கொண்டு, சகோதரனை அழைத்துப் பாடுகிற நாடோடிப் பாடலைப் பாடிக் கொண்டிருப்பது போலவும் தோன்றியது. எனக்கு அந்தப் பாட்டு ரொம்பவும் பிடிக்கும். ஒவ்வொரு முறை நான் போகும்போதும் அந்தப் பாட்டை பாடச் சொல்லி வற்புறுத்தி கேட்பேன். அவள் தன் இனிமையான குரலில் உடனே பாடத் தொடங்குவாள். சங்கடம் செய்கிற இந்தப் பகல்வேளையிலும் கூட, அவள் என் முன்னால் உட்கார்ந்து கொண்டு, அந்தப் பாட்டைப் பாடுவது போலவே இருந்தது.

மேளம் முழங்குதம்மா! மேல் தோட்டம் நிறையுதம்மா!
நாதஸ்வரம் முழங்குதம்மா! நகரெல்லாம் நிறையுதம்மா!
அண்ணன் வந்தாங்க அழகான பட்டோட!
அழகான பட்டுனு அத்தை அளந்தாங்க!
அத்தை அளந்தாக்கா அம்பது முழமாச்சு
பாட்டி அளந்தாக்கா பாஞ்சாலி துணியாச்சு
எடுத்தா கைதனிலே எறகைப் போல் கனமாச்சு
இறக்கி வச்சாலோ எங்ககூட நெறைஞ்சாச்சி
அண்ணன் கொண்டு வந்த அழகான பட்டுத்துணி
ராத்திரியில உடுத்தாக்க ரத்தினமா தான் உதிரும்
வைகரையில உடுத்தாக்க வைரங்க தான் உதிரும்
எண்ணிப் பாத்தாக்க இருபத்தைஞ்சு முழமாகும்
மேளம் முழங்குதம்மா! மேல்தோட்டம் நெறையுதம்மா!

போன வருஷம் நான் வந்திருந்த போதும் இந்தப் பாட்டைக் கேட்டேன். திடீரென்று அவள் குரல் குழறியது. தொண்டை அடைத்துக் கொண்டது. கண்களில் நீர் நிரம்பியது. நான் அவள் கைகளைப் பற்றிக்கொண்டு ஏன் என்று கேட்டேன். 'ஒவ்வொரு முறையும் நான் வரும்போது அந்தப் பாட்டைப் பாடச்சொல்லிக் கேட்பதாகவும், உண்மையிலேயே அந்தப் பாட்டை பாட வேண்டிய சமயம் வரும்போது, அதைப் பாட தான் உயிரோடு இருப்பேனா' என்று சொல்லி அழுதாள்.

"ஏம்மா அப்படியெல்லாம் பேசற," என்று சொன்னேன்.

"என்னமோண்ணா அப்படித் தோணுது. அழிஞ்சி போற இந்த உடம்பை நம்பறதுக்கேயில்ல. இன்னைக்கு இருக்கும், நாளைக்கி இருக்காது. தவிர, எதுக்காவது நாம ஆசைப்பட்டோம்னா அது நமக்கு கெடைக்காது".

என் தொண்டைக்குள் முட்கள் வளர்வதைப் போல் நான் உணர்ந்தேன். மரத்தின் மேலே இருந்து அண்டங்காக்கைகள் கரையத் தொடங்கின. நான் கிஸானுவை நினைத்துக் கொண்டேன். அவன் எங்கே போய்விட்டான்? தாபு சமையலறையில் கறிகாய்களை நறுக்கிக் கொண்டிருந்தாள். கூப்பிட்டுக் கேட்டபோது, பக்கத்து அறையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கக் கூடும் என்று சொன்னாள். நான் அந்த அறைக்குள் நுழைந்தேன். கிழிந்த படுக்கை விரிப்புகளைத் தரையின் மீது விரித்து, அவன் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான். கள்ளம் கபடமற்ற அவன் முகத்தைப் பார்த்தபடி, நான் நீண்டநேரம் நின்று கொண்டே இருந்தேன். தாயின் மார்பில் இருந்து பால் குடிக்கும் குழந்தையைப் போல, தூக்கத்தில் அவனுடைய உதடுகள் அசைந்து ஒலி எழுப்பின.

"தினமும் இதே மாதிரிதான் மாமா அவன் தூங்குவான். கீழே விரிச்சிக்கிறதுக்கும், மேலே

போத்திக்கிறதுக்கும் அம்மாவோட துணி கிடைக்கலைன்னா அவன் தூங்கவே மாட்டான். ஒருதடவை அப்பா பக்கத்தில படுத்துகிட்டு, ராத்திரி முழுக்க தூங்காமலேயே இருந்தான். இந்தத் துணிங்கள்ள இருந்து அம்மாவோட வாசனை அடிக்கிது. அதனாலதான் உடனே தூக்கம் வருதுன்னு சொல்றான். அப்பா கூட அதுக்காகத்தான் இந்தத் துணிங்களை துவைக்காமயே வச்சிருக்காரு.

எனக்கு என்னுடைய கபில நிறத்துப் பசுவுடைய கன்றுக்குட்டியின் ஞாபகம் வந்தது. அது இருபது நாள் குட்டியாக இருந்தபோதே தாய்ப்பசு இறந்துவிட்டது. மூன்று நாட்களுக்கு அந்தக் கன்றுக்குட்டி பசுவைக் கட்டி இருந்த இடத்தையும், தொழுவத்தையும் முகர்ந்து முகர்ந்து பார்த்துக்கொண்டே இருந்தது. நான்காவது நாள் தாயை நினைத்துக் கதறியபடியே உயிர்விட்டது. இந்தச் சின்னப்பையன் கிஸானுவுக்கும் ஐந்து வயதுதான் ஆகிறது. இவனும் அந்தக் கன்றுக்குட்டியைப் போலவே கள்ளம் கபடம் அறியாதவன். இவனும் தாயை இழந்தவன். தாயின் உடம்பில் இருந்துவரும் மணத்தை நுகராமல் அவனுக்கு தூக்கம் பிடிக்காததில் ஆச்சர்யம் என்ன இருக்கிறது?

சற்று நேரத்தில் அவன் விழித்துக் கொண்டான். "நான் உன்ன குளிப்பாட்டி விடட்டுமா கண்ணு! உடம்புல எவ்ளோ அழுக்கு பாரு. சட்டை வேற ரொம்ப அழுக்கா இருக்கு. ஒனக்கு தெரியலை? நீ எவ்ளோ சுத்தமான, அழகான நல்ல பையனா இருந்த... என்னாச்சு உனக்கு?"

ஒரு வார்த்தை கூடப் பேசாமல் அவன் என்னை அமைதியாகப் பின்தொடர்ந்தான். ஆனால் நான் அவன் சட்டையைக் கழட்ட முயற்சித்தபோது திடீரென்று குணம் மாறிப்போனவனாய் கோபத்தோடு "தலை வழியா கழட்டாதீங்க. கை வழியா கழட்டுங்க" என்றான். அவனுக்கு பிடித்ததையே செய்தேன். வாளியினருகே அவனை உட்கார வைத்தேன். செம்பில் தண்ணீரை விட்டு, தலைமேல் ஊற்றப் போனேன். சட்டென்று அதைப் பறித்துக் கொண்டான். "முதல்ல கையிலேயும், கால்லயும் இருக்கற அழுக்கை தேய்ச்சா என்ன! ஏன் எடுத்தவுடனே தலைக்கு தண்ணி ஊத்தறிங்க? இவ்வளவு பெரிசா வளர்ந்திருக்கீங்க, எப்படி குளிப்பாட்டறதுன்னு கூட உங்களுக்கு தெரியலை. அம்மா முதல்ல என்னோட கையையும், காலையும் அழகா தேச்சி குளிப்பாட்டுவாங்க, அப்புறம் முகத்தை கழுவுவாங்க. அதுக்குப் பின்னாலதான் தலைமேல் தண்ணி ஊத்துவாங்க. இதையெல்லாம் தெரிஞ்சிக்காம, நீங்க எடுத்தவுடனே தலைக்கு தண்ணீர் ஊத்தறிங்க. இது போய் குளியலா... அந்தக் கேடு கெட்ட தாபு அப்படித்தான் குளிப்பாட்டுவா. அதனாலதான் எனக்குக் குளிக்கவே பிடிக்கறதில்ல.." அந்தத்துயரம் நிறைந்த வேளையிலும் என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

"சரி! அப்படியே ஆகட்டும். உங்கம்மா மாதிரியே நான் உன்ன குளிக்க வைக்கிறேன். திருப்தியா இப்ப...!" அவனுடைய கைகளிலும், கால்களிலும் தண்ணீரை விட்டு மெல்லத் தேய்த்து குளிப்பாட்டினேன். அவனுடைய கோபத்துக்கு பயந்து கொண்டே அவனைக் குளிக்க வைத்தேன். சொம்பினால் இடித்து விடுவானோ என்று பயமாய்க்கூட இருந்தது. ஆனால் அவன் அமைதியாய் இருந்தான். அவனுக்குப் பிடித்த விதத்தில் நடந்து கொண்டதும், பேச ஆரம்பித்தான். "அம்மா என்னை மடியில் உட்கார வைத்துக் கொண்டுதான் பால் குடிக்க வைப்பாள். முதலில் அதில் விரலை விட்டு பால் சூடாய் இருக்கிறதா என்று பார்ப்பாள். தித்திப்பு போதவில்லை என்றால் இன்னும் கொஞ்சம் சேர்ப்பாள். எங்கப்பா இருக்காரே, அவருக்கு எதிரே என்னை உட்காரச் சொல்லி 'குடி! குடி!' ன்னு சொல்லிட்டே இருப்பார். அந்தக் கேடு கெட்ட தாபுவும் அப்படித்தான்!

"பாலைக் குடிச்சா உனக்கென்னடா" அப்படிங்கறா. ராட்சஸி! அவ தலைமுடியை பிச்சி பிடுங்கிப் போடணும் போல இருக்குது, மாமா! இது எல்லாத்துக்கும் மேல பால்ல நெய்ய வேற கலந்துடுவா... அந்த நெய் மேல மெதக்கறப்ப எனக்கு வாந்தியா வரும்... ஒரு தடவை வாந்தியே எடுத்திட்டு இருப்பேன்! பாலைக் குடிக்கலைன்னா அப்பா என்னை அடிக்கறாரு. அம்மா வீட்டுக்குத் திரும்பி வர்ற வரையில நீங்க தயவுபண்ணி இங்கயே இருக்கணும் மாமா... இருப்பீங்களா?"

நான் அவனுக்கு ஆறுதல் சொன்னேன். "கண்ணு! உங்கம்மா கிட்ட தாய்ப்பால் குடிக்கிற பாப்பாவா நீ... வளர்ந்த பையனில்லையா? நாள் முழுக்க 'அம்மா அம்மா'ன்னு ஏன் ஏங்கற...! இதைக் கேட்டதும் அவன் சோர்வாகிப் போனான். "நான் அப்ப சின்னப் பையனில்லைன்னா, உங்களைப் போல பெரிய ஆளா? அம்மா இன்னமும் வந்து எனக்குப் பால் தந்துட்டுதானே இருக்கா!"

அவன் கைகளைக் கழுவி விடும்போது, அவனுக்கு இந்த விரல் சப்பும் வழக்கம் எனக்கு ஞாபகம் வந்தது. தொடர்ச்சியாக விரலை அவன் சூப்பியதால், அது ரத்தமேயில்லாமல் வெளுத்துப் போயிருந்தது. அவனிடம் இந்தப் பழக்கம் முன்பெல்லாம் கிடையாது.

"பால் குடுக்க அம்மா எத்தனை மணிக்கு வருவா கிஸானு ?" என்று அவனிடம் கேட்டேன்.

"எத்தனை மணிக்கா! எல்லா ராத்திரியும் வருவா. முற்றத்து வேப்பமரத்தில கொஞ்ச நேரம் நிப்பா. அப்புறம் மெதுவா வந்து என்னைத் தூக்கி கட்டியணைச்சி பால் தருவா."

"தினமுமா அம்மா வருவா ?"

"ம்... தினமும் தான்!"

"ஒருநாள் கூட விடாமயா வருவா ?"

"அப்பா கூட ஒருநாள் படுத்தேன்... அன்னைக்குத் தான் வரலை. மத்தபடி எல்லா நாளும் தவறாம வருவா!"

நான் அவனை குளிப்பாட்டி, சட்டை போட்டு விட்டேன். பின்னர், தலைசீவி, கண்ணுக்கு மையிட்டேன். அது அவனுக்கு அழகாக இருந்தது. நான் சொன்னேன், "பாரு கண்ணு! இதே போல சுத்தமா தினமும் இருக்கணும். சுத்தமா இருந்தாத்தான் அம்மாவுக்கு உன்னப் பிடிக்கும். இல்லாட்டா அவ உன்கிட்ட வரவே மாட்டா." அவன் அதை அக்கரையுடன் கேட்டுக் கொண்டான். பிறகு தலையை அசைத்து, "நான் இனிமே தினமும் குளிச்சிட்டு, புதுத்துணி போட்டுக்குவேன்."

சூரியன் அஸ்தமனமாகிக் கொண்டிருந்தது. முற்றத்தில் காய்ந்த வெப்பம் முழுதும், சமையலறை அடுப்பில் வந்து உட்கார்ந்து விட்டது போலிருந்தது. பறவைகள் மரங்களில் கிறீச்சிட்டன. கன்றுக்குட்டி தாய்ப்பசுவை ஏக்கத்தோடு உரத்து அழைத்தது. என் மைத்துனர் வீடு திரும்பும் நேரம் ஆகிவிட்டது.

என் தங்கையின் மறைவு, அவரை எவ்வளவு தூரம் பாதித்து இருந்தது என்பதை நான் உணர்ந்து இருந்தேன். குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற பொறுப்பு மட்டும் இல்லாதிருந்தால் அவர் குடும்ப வாழ்க்கையையே துறந்திருப்பார்.

அவரை வீட்டோடு கட்டிப் போடுகிற, அறுக்க முடியாத சங்கிலியாக அவர்கள் இருந்தார்கள். அவருக்கு விருப்பமில்லாவிட்டாலும், அவர்களுக்காகவே தினமும் கடைக்குப் போக வேண்டியிருந்தது. ஒவ்வொரு நாள் காலையிலும், மாலையிலும் சாப்பிட வேண்டியதாயும் இருந்தது. அவர் வந்தபோது இருட்டி விட்டிருந்தது. என்னை வரவேற்றுவிட்டு அவர் தன் வேலையில் ஈடுபட்டார். சூரியன் மறைந்த பிறகு அவர் பால் கறந்து முடிப்பதற்குள், நாங்கள் தாபு நல்லதாகவோ, கெட்டதாகவோ சமைத்த உணவை சாப்பிட்டுவிட்டு, என் சகோதரியைப் பற்றிப் பேசும்போது, அவர் கண்கள் நீரால் நிறைந்தன. "என்னுடைய சொந்தக் கவலையையும், வருத்தத்தையும் அது எவ்வளவு பெரிதாக இருந்தாலும் என்னால் தாங்கிக்க முடியும். ஆனால் குழந்தைகள் படும் கஷ்டத்தைப் பார்க்கவே முடியவில்லை. தாபுவை என்னால் சமாதானப்படுத்த முடிகிறது! நடந்ததை எடுத்துச் சொல்லி, அதைப் பெரிதுபடுத்தக்கூடாது என்பதை அவளுக்கு புரிய வைக்க முடிகிறது! இந்தப் பையனுக்கு எப்படிப் புரிய வைப்பதென்று எனக்குத் தெரியவில்லை. இவனைப் பொறுமையாக இருக்க வைப்பது எப்படி ? இரவும் பகலும் அவனுக்கு அமைதியே இல்லை. அவனை உயிரோடு வைத்திருக்கின்ற மெல்லிய நம்பிக்கை இழை அறுந்து போனால், அவன் நிச்சயம் இறந்துவிடுவான். அதைப்பற்றி எவ்விதமான சந்தேகமும் இல்லை. நான் அவளைத் தகனம் செய்யக் கொண்டுபோன நாள் முதல், அவன் தவறாமல் தினந்தோறும் பஸ் ஸ்டாண்டுக்குப் போய்விடுகிறான். அவனுடைய அம்மாவின் வருகைக்காக காத்திருப்பான். ஒருவேளை பஸ் காலதாமதமாக வந்தாலும் வரும். ஆனால் அவன்..."

பேசிக் கொண்டிருக்கும்போது, மறுபடியும் அவருக்குக் குரல் தழுதழுத்தது. எனது கண்ணிலும் கண்ணீர் நிரம்பியது.

நான் ராம்காரில் ஏழு நாட்கள் தங்கியிருந்தேன். எட்டாவது நாள் அங்கிருந்து புறப்பட்டபோது, கிஸானு தூங்கிக் கொண்டிருந்தான். அவனை எழுப்பி விட்டு சொல்லிப் போகலாம் என எண்ணினேன். ஆனால் அதிர்ச்சி போல ஓர் எண்ணம் வந்தது. மரத்தின் கீழே வந்து நிற்கும் தன்னுடைய அம்மாவைப் பற்றி அவன் கனவு கண்டு கொண்டிருப்பான். இந்நேரம் அவள் அவனுக்குப் பாலூட்டத் துவங்கியிருப்பாள். தனது கைகளில் அவனை எடுத்துக் கொண்டிருப்பாள்... நான் அவனது கன்னத்தில் மெதுவாக முத்தமிட்டு விட்டுப் புறப்பட்டேன்.

நன்றி : தற்கால இந்தியச் சிறுகதைகள், தொகுதி II

(சாகித்ய அகாதமி வெளியீடு)

* * *

விலங்குகள் நலம் பேணுவோம்!

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இந்த மண்ணுலகம் அனைத்து உயிர்களுக்கும் சொந்தமானது. அவற்றுள் பகுத்தறிவுள்ள மனிதரும் அடங்குவர். எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும் கூடப் பிற உயிர்களுக்குத் தீங்கு எண்ணாத மகான்கள் வாழ்ந்த உலகம் இது. பிற உயிர்களுக்கு நம்மால் இயன்ற நன்மைகள் செய்ய முடியாவிட்டாலும் தீமைகள் செய்யாமலிருப்பது நலமாகும்.

விலங்குகளின் நலனைக் கருத்தில் கொண்டு பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டது. மேலும் விலங்குகள்நல வாரியம் தோற்றுவிக்கப்பட்டு கால்நடைச் செல்வங்கள் பாதுகாக்கப்படுகின்றது. இதனைப் பற்றிய போதிய விழிப்புணர்வு மக்களிடையே ஏற்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

விலங்குகள்நல மேம்பாட்டு வாரியம்

விலங்குகள் நலனைப் பேணிக் காப்பாற்றவும் மிருகவதையைத் தடுத்து அவற்றைப் பாதுகாக்கவும் விலங்குகள்நல மேம்பாட்டு வாரியம் 1960ஆம் ஆண்டு இறுதியில் நிறுவப்பட்டது.

வாரியத்தின் உறுப்பினர்கள்

- ✶ இந்திய அரசின் தலைமை வனக் கண்காணிப்பாளர்.
- ✶ இந்திய அரசின் கால்நடைப் பராமரிப்புத் துறை ஆணையர்.
- ✶ இந்திய உள்துறை அமைச்சகப் பிரதிநிதி ஒருவர்.
- ✶ இந்தியக் கல்வித்துறை அமைச்சகப் பிரதிநிதி ஒருவர்.
- ✶ இந்திய வனவிலங்கு வாரியத்தின் பிரதிநிதி ஒருவர்.
- ✶ கால்நடை மருத்துவர் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர்.
- ✶ நவீன மற்றும் உள்நாட்டு மருத்துவர்களின் சங்கத்தின் இரண்டு பிரதிநிதிகள்.
- ✶ நகராட்சி உறுப்பினர்களின் பிரதிநிதி ஒருவர்.
- ✶ விலங்குகள் நலனில் அக்கறையுள்ள மூன்று அமைப்புகளின் ஒரு பிரதிநிதி.
- ✶ மிருகவதையைத் தடுப்பதில் அக்கறை உள்ள மூன்று அமைப்புகளின் ஒரு பிரதிநிதி.
- ✶ மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்ட மூன்று பிரதிநிதிகள்.
- ✶ மக்களவை உறுப்பினர்களின் நான்கு பிரதிநிதிகள்.
- ✶ மாநிலங்களவை உறுப்பினர்களின் இரண்டு பிரதிநிதிகள்.

விலங்குகள்நல மேம்பாட்டு வாரியத்தின் உறுப்பினர்கள் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை மாற்றி / திருத்தி அமைக்கப்படுவர்.

வாரியத்தின் செயல்பாடுகள்

- மிருகவதைத் தடுப்புச் சட்டத்தை முறையாகச் செயல்படுத்துதல்.
- மிருகவதையைத் தடுக்கவும், விலங்குகளை ஒரு இடத்திலிருந்து வேறு இடத்திற்குக் கொண்டு செல்லும் போது அவற்றிற்கு ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களையவும், மிருகவதைத் தடுப்புச் சட்டத்தைத் திருத்தி அமைக்கவும், மேம்படுத்தவும் பரிந்துரை செய்தல்.
- உழவு/வண்டி மாடுகளின் வேலைப்பளுவைக் குறைப்பதற்கு ஏற்றவாறு வண்டிகளை வடிவமைக்கப் பரிந்துரைத்தல்.
- இறைச்சிக் கூடத்தை வடிவமைக்கவும், முறையாகப் பராமரிக்கவும் ஆலோசனை வழங்குதல்.
- இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகளை இறைச்சிக்கூடத்தில் மனித நேயத்துடன் பராமரிக்க அறிவுறுத்துதல்.
- கருணைக்கொலை செய்வதற்கான சட்டத் திருத்தங்களைப் பரிந்துரைத்தல்.

- கேட்பாரற்ற விலங்குகளைப் பராமரித்து வரும் பல்வேறு நிறுவனங்கள், காப்பகங்கள் மற்றும் சரணாலயங்களுக்கு நிதியுதவி கிடைக்க வழிவகை செய்தல்.
- மிருகவதையைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளும் அனைத்து நிறுவனங்களிடமும் ஒருங்கிணைந்த இணக்கமுடன் செயல்படுதல்.
- ஆங்காங்கே விலங்குகள்நல மையங்களை உருவாக்கி வழிநடத்துதல்.
- கால்நடை மருத்துவமனைகளுக்கு நிதியுதவியை மேம்படுத்துதல்.
- கால்நடை மருந்துகளைக் கால்நடை மருத்துவமனைகளுக்குச் சரியான தருணத்தில் கிடைக்கச் செய்தல்.
- வகுப்புகள், புத்தகங்கள், சுவரொட்டி, திரைப்படங்கள், குறும்படங்கள் மற்றும் கண்காட்சி வாயிலாக விலங்குகளை மனிதநேயத்துடன் பராமரிக்கவும், பேணிப்பாதுகாக்கவும் மக்களிடையே விழிப்புணர்வை உண்டாக்குதல்.
- மிருகவதையைத் தடுப்பது மற்றும் விலங்குகள் நலன் சம்பந்தமான ஆலோசனைகளை அரசுக்கு வழங்குதல்.

பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டம், 1960 மற்றும் 1982.

உலகில் தாவரங்கள் மற்றும் மனிதர்களைத் தவிர்த்த உயிரினங்கள் அனைத்தும் பிராணிகள் எனக் கூறப்படுகின்றன. அத்தகைய பிராணிகளின் நலன் காக்க 1960ஆம் ஆண்டு பிராணிகள் மிருகவதைத் தடுப்புச் சட்டம் சுதந்திர இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சட்டம் இந்தியாவின் ஜம்மு & காஷ்மீர் மாநிலத்தைத் தவிர அனைத்து மாநிலங்களிலும் அமல்படுத்தப்பட்டு வருகின்றது.

பிராணிகள் வதை

கீழ்க்கண்ட ஏதேனும் ஒரு செயல் பிராணிகள் வதை என்று கூறப்படுகின்றது.

1. பிராணிகளை அடித்தல், உதைத்தல், அளவுக்கு அதிகமாகச் சுமையேற்றுதல், அளவுக்கதிகமான வேகத்தில் ஓட்டிச் செல்லுதல், அளவுக்கதிகமான வேகத்தில் வண்டி பூட்டி ஓட்டுதல்.
2. காயம்பட்ட / வேலை செய்வதற்கு தகுதியற்ற பிராணிகளை வேலை வாங்குதல்.
3. தெரிந்தோ, தெரியாமலோ தீங்கு விளைவிக்கக்கூடிய மருந்துகள் / பொருட்களைப் பிராணிகளுக்கு அளித்தல்.

4. பிராணிகள் அசைய முடியாத வகையில் சரியான விகிதமில்லாத (நீளம், அகலம் மற்றும் உயரம்) கூண்டுகளில் அடைத்து வைத்தல்.
5. பிராணிகளை அளவுக்கதிகமான நேரம் சங்கிலியால் கட்டி வைத்தல், அதிக எடை மற்றும் குறைந்த நீளமுள்ள சங்கிலியால் பிணைத்தல்.
6. பிராணிகளுக்கு எஜமான்கள் சரியான அளவில் உணவு மற்றும் தண்ணீர் வழங்காமலிருத்தல்.
7. நோயினால் தளர்ந்த அல்லது ஊனமுற்ற பிராணிகளை எஜமானர்கள் வேண்டுமென்றே தெருவில் அலையவிட்டோ / இறக்கவோ வைத்தல்.
8. பிராணிகளை ஊசிமூலம் நேரிடையாக இதயத்தில் மருந்தைச் செலுத்திக் கொல்லுதல்.
9. பிராணிகளைக் கட்டி வைத்துப் பிற உயிரினங்களுக்கு உணவாக வழிவகை செய்தல்.
10. பிராணிகளைச் சண்டையிடச் செய்து அதன்மூலம் இன்பமடைதல் அல்லது பணம் சம்பாதித்தல்.
11. பிராணிகளைத் துப்பாக்கி கொண்டு சுடுதல்.
12. பசு மாடுகளின் பிறப்புறுப்பு மற்றும் மடியில் காற்றை உள்ளே செலுத்துதல்.
13. மதத்தின் பெயரால் மிருகங்களைப் பலியிடுதல்.
14. மிருகங்களைக் கொடூரமாகக் கொலை செய்யாதது நிரூபிக்கப்படாத நிலையில் அம்மிருகத்தின் தோல் அல்லது தலையை வைத்திருத்தல்.

தண்டனை

* முதல் குற்றம் – ரூ.10 முதல் ரூ.50 வரை.
* இரண்டாவது குற்றம் – (முதல் குற்றத்திலிருந்து மூன்று வருடங்களுக்குள்) – ரூ.25 முதல் ரூ.100 வரை (அல்லது) மூன்று மாதம் சிறை (அல்லது) அபராதம் மற்றும் சிறை.
* மூன்றாவது குற்றம் ரூ.1,000 வரை அபராதம் அல்லது இரண்டாண்டு சிறை அல்லது அபராதம் மற்றும் சிறை.

வதைக்கப்பட்ட மிருகங்களின் நிலை

- ✶ பாதிக்கப்பட்ட மிருகங்களைக் காப்பகத்திற்கு அனுப்பி அவற்றுக்குச் சிகிச்சை அளிக்க நீதிபதிகள் உத்தரவிடலாம்.
- ✶ காப்பகத்திற்கு மிருகங்களை அனுப்ப ஆகும் செலவை நீதிமன்றமே ஏற்றுப் பின் அச்செலவை எஜமானரிடமிருந்து வசூலிக்கலாம்.
- ✶ காப்பகத்திலிருந்து பிராணிகளை மீட்டுச் செல்ல எஜமானர் குறித்த காலத்தில் வரவில்லை என்றாலோ மறுத்தாலோ அம்மிருகத்தை நீதிமன்றம் விற்கலாம்.

பிராணிகளின் வதை – விதிவிலக்கு

- ✶ கொம்பு நீக்கம் செய்தல்.
- ✶ விரை நீக்கம் செய்தல்.
- ✶ அடையாள எண் அச்சிடுதல்.
- ✶ சட்டத்திற்குட்பட்டுப் பிராணிகளைக் கருணைக் கொலை செய்தல்.
- ✶ சட்டத்திற்குட்பட்டுப் பிராணிகளை ஆராய்ச்சிக்காகப் பயன்படுத்துதல்.
- ✶ சட்டத்திற்குட்பட்டு மிருகங்களைக் காட்சிக்காகப் பயன்படுத்துதல்.
- ✶ இராணுவத்தில் மிருகங்களுக்குப் பயிற்சி அளித்தல்.
- ✶ உயிரியல் பூங்காவில் காட்சிக்காக மிருகங்களைப் பயன்படுத்துதல்.

ஆராய்ச்சிக்காக மிருகங்களைப் பயன்படுத்துதல்

- ✶ ஆராய்ச்சிக்காக மிருகங்கள் பயன்படுத்தப்படுவதை நெறிமுறைப்படுத்த ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பு ஆராய்ச்சியின் போது மிருகங்கள் பயன்படுத்தப்படும் போது கீழ்க்கண்ட விஷயங்களில் கவனம் செலுத்துகின்றது.
- ✶ மிருகங்களைப் பயன்படுத்திய ஆராய்ச்சி, ஆராய்ச்சி நிலையத்திற்குள் மேற்கொண்டால், அந்நிலைய முதல்வரும், ஆராய்ச்சி நிலையத்திற்கு வெளியில் மேற்கொண்டால், சம்பந்தப்பட்ட ஆராய்ச்சியாளரும் பொறுப்பாளி ஆவர்.
- ✶ ஆராய்ச்சியின் போது ஆய்வு மிருகங்களுக்கு (வலி நிவாரணி அல்லது மயக்க மருந்துகள் உபயோகித்து முடிந்த வரையில்) வலி ஏற்படாதவாறும் மனித நேயத்துடனும் நடத்தப்பட வேண்டும்.
- ✶ தவிர்க்க முடியாத நிலையில் மட்டுமே ஆய்வு மிருகங்களைப் பயன்படுத்தப்பட வேண்டும். அப்போதும் பெரிய மிருகங்களைத் தவிர்த்து, எலி, முயல் மற்றும் தவளை போன்ற சிறிய மிருகங்களைக் கொண்டே ஆராய்ச்சியை முடிக்க முயல வேண்டும்.
- ✶ ஆராய்ச்சிக்கு முன்பும் பின்பும் ஆய்வு மிருகங்கள் சீரான முறையில் கவனிக்கப்பட வேண்டும்.
- ✶ எந்த நிலையிலும், மிருகங்களைக் கொண்டு மேற்படுகின்ற ஆராய்ச்சியை மேற்பார்வையிடவும், தடை செய்யவும், அரசினால் ஏற்படுத்தப்பட்ட அமைப்பிற்கு அதிகாரம் உள்ளது.

காட்சிப் பொருள் (சர்க்கஸ்)

மக்களுக்கு மகிழ்ச்சி உண்டாக்கும் பொருட்டு, மிருகங்களைக் காட்சிப் பொருளாக உபயோகப்படுத்தவும், அதற்கு முறையான பயிற்சி அளிக்கவும் அரசிடம் முதலில் அனுமதி பெறப் பதிவு செய்ய வேண்டும். காட்சியின் போதோ, பயிற்சியின் போதோ மிருகங்களுக்குத் தேவையற்ற வலி உண்டாக்கினால் காட்சிக்கான அனுமதியை அரசு ரத்து செய்து தடை விதிக்கலாம்.

விலங்குகள் நல மேம்பாட்டு வாரியம் குறித்த விவரங்களுக்கு www.awbi.org <http://www.awbi.org> என்ற இணையதளத்தில் பார்த்து அறிந்து கொள்ளலாம்.

நன்றி : 'கால்நடைக் கதிர்'

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக வெளியீடு

பனிக்கட்டி பிரதேசம்

பூமியின் பரப்பில் பத்தில் ஒரு பங்கு எப்போதும் பனிக்கட்டியால் மூடப்பட்டுள்ளது. இவற்றில் பெரும் பகுதி தெற்கே அண்டார்டிகாவிலும் வடக்கே கிரீன்லாந்திலும் உள்ளன. இங்குள்ள பனிக்கட்டி உருகி நீரானால் கடல் மட்டம் 200 அடி உயரும். அப்போது லண்டன், நியூயார்க், டோக்கியோ போன்ற பெருநகரங்கள் மூழ்கிவிடும். பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் முடிவுக்கு வந்த பனியூழின்போது இப்போதுள்ளது போல் மூன்று மடங்கு பனிக்கட்டி இருந்தது. உலகில் சுத்த நீரில் 90 சதவிகிதத்தை அது கட்டியாகச் செய்திருந்தது. அப்போது கடல் மட்டம் இப்போதுள்ளதை விட 330 அடி குறைவாக இருந்தது. அமெரிக்கா, யூரேஷியா, அயர்லாந்து, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவையெல்லாம் தொடர்ந்த நிலப்பரப்பாக இருந்தன. அண்டார்டிகாவிலுள்ள லம்பர்ட் பனிப்பாறைதான் உலகிலேயே பெரியது. இது 40 கி.மீ.அளவுக்கு உள்ளது.

உலகச் செம்மொழிகள்

முனைவர் ஜி. ஜான் சாமுவேல்

சமுதாயத் தேவை

இடைக்காலம், மறுமலர்ச்சிக் காலம் ஆகிய காலகட்டங்களில் ஒவ்வொரு மொழிக் குழுவினரும் தத்தம்மொழி அல்லது இலக்கிய வரலாற்றில் இடம்பெற்ற செவ்வியல் காலம்பற்றி ஆர்வத்துடன் பேசுவதைக் காண்கின்றோம். பெரும்பாலும் இந்த ஆர்வம் மறுமலர்ச்சிக் காலங்களில் பொங்கி வழிவது இயல்பே. மறுமலர்ச்சிக் காலங்களில் ஏற்படுகின்ற பல்வேறு பண்பாட்டுத் தாக்குரவுகள், மோதல்கள் ஆகியவற்றின் விளைவாகக் கடந்துபோன பழைய பொற்காலமான செவ்வியல் காலங்களின்மீது ஆர்வமும் அவற்றை மீண்டும் கலை இலக்கியங்களில் கொண்டுவரும் முயற்சியும் (Classical Revival) பெரும்பாலான பழைமைவாய்ந்த மொழிகளிலெல்லாம் ஏற்பட்டுள்ளன.

பிற நாட்டுப் பண்பாட்டுத் தாக்கத்தால் தத்தம் இலக்கியப் பண்பாட்டுப் பாரம்பரியங்களின் தனித்தன்மைக்கு ஊறு ஏற்பட்டுவிடும் என்ற அச்ச உணர்வு தோன்றும்போதும், இத்தாக்கங்களின் விளைவாகத் தத்தம் இன அடையாளங்கள் (racial or ethnic identity) அழிந்துவிடுமோ என்று அஞ்சும்போதும், தத்தம் இன அடையாளத்தை நிலைநாட்ட வேண்டிய சமுதாய–அரசியல் தேவைகள் ஏற்படும்போதும் ஒவ்வொரு மொழிக் குழுவினரும் (Linguistic Community) தனித்தன்மையினை இழக்காத தம் பழங்காலப் பண்பாட்டுப் பாரம்பரியங்களைச் செவ்வியல் பண்பாடுகளாக நினைவுகூர்ந்து அவற்றிற்குப் புத்துயிர் நல்க முயலும் பொதுப்போக்கினை உலகெங்கிலும் காணலாம்.

ஒவ்வொரு மொழிக் குழுவினரின் வரலாற்றிலும் செவ்வியல் காலகட்டமே பொற்காலமாகக் காட்டப்பட்டுள்ளது. பிற நாடுகளின் அல்லது பிற இனப் பண்பாடுகளின் நெருக்கத்திற்கு ஆட்பட்டுத் தம் அடையாளத்தை நிலைநிறுத்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளான மறுமலர்ச்சிக் காலத் தமிழர்கள் பிற பண்பாட்டுத் தாக்குரவு அதிக அளவிற்கு இல்லாத தனித்தன்மை வாய்ந்த சங்க காலத்தைப் பொற்காலமாகவும் செவ்வியல் காலமாகவும் கண்டனர். இந்நிலையில் சங்கத் தமிழ் செவ்வியல் மொழி அல்லது செம்மொழியாகவும், சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களாகவும் தமிழர்களால் ஏற்றுப் பாராட்டப்பட்டன.

செவ்வியல் மொழி அல்லது செம்மொழி என்னும் தகுதிப்பாடு அம்மொழி பெற்றிருக்கும் இலக்கிய வளம், இலக்கியத் தனித்தன்மை போன்ற சிறப்பியல்புகளால் ஏற்படுவதேயன்றி, அம்மொழியின் தொன்மை, அதன் வளம் போன்றவற்றை மட்டும் அடித்தளமாகக் கொண்டு ஏற்படுவதல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

உலகச் செம்மொழிகள் என்று கி.பி. 18ஆம் நூற்றாண்டுவரை கிரேக்கமும், இலத்தீனும் மட்டுமே கருதப்பட்டு வந்தன. ஐரோப்பிய நாகரிகத்தின் ஆணிவேராகத் திகழ்ந்த கிரேக்க நாட்டிலும் உரோம நாட்டிலும் முகிழ்த்தெழுந்த இவ்விரு மொழிகளும் ஐரோப்பியப் பண்பாட்டு ஆதிக்கம் மேலோங்கியிருந்த காலகட்டங்களில் உலகச் செம்மொழிகள் என்னும் தகுதிப்பாட்டினைப் பெற்றன. இவ்விரு பண்பாடுகளின் தாக்குரவு பெற்ற கலைகள் அனைத்தும் செவ்வியல் கலைகள் (classical arts) ஆயின.

கிரேக்க மொழி

கிரேக்க மொழியைப் பொறுத்தவரையில் கி.மு.475 முதல் 448 வரையுள்ள காலத்தை கிரேக்கச் செவ்வியல் காலமென்றும், கி.மு. 448 முதல் 400 வரையுள்ள காலத்தை இடைச் செவ்வியல் காலமென்றும், வரையறுக்கும் மரபு உள்ளது. இக்கால கட்டத்தில் கிரேக்க இலக்கியங்கள் கிரேக்க தேசியக் கலாச்சாரக் கலையுணர்வின் வெளிப்பாடாகவும், பிற கலாச்சாரப் பாதிப்புகள் அதிகமின்றியும் வளர்ந்ததால் அது செவ்வியல் காலம் என்று சுட்டப்படுகின்றது. சிலர் பெரிக்கிளிஸ் மன்னர்களின் காலத்தைக் கிரேக்கச் செவ்வியல் காலமென்று குறிப்பிடுகின்றனர்.

இவர்களைப் பொறுத்தவரையில் ஏகிலஸ், சோபாகிளிஸ், சாக்கரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாடில் போன்றவர்களின் வளமான படைப்புகள் தோன்றிய



கிரேக்க மொழி

காலகட்டமே செவ்வியல் காலமாகச் சுட்டப்படுகின்றது.

இலியத், ஒடிசி என்னும் ஆதிக் காப்பியங்கள் கிரேக்க இலக்கிய வரலாற்றில் தொன்மைமிக்க படைப்புகளாக அமைந்துள்ளன. இக்காப்பியங்களைத் தொடர்ந்து சாபோ (Sappho) கொரினா (Corinna) என்னும் இரு பெண்பாற் கவிஞர்களின் தன்னுணர்வு சார்ந்த படைப்புகளும், அனகிரியோன் (Anacreon) போன்றோர்களின் படைப்புகளும் கிரேக்க நாட்டில் தோற்றம் பெற்றன. இக்கால கட்டத்தில் பிண்டார் போன்ற பெருங்கவிஞர்களின் குழுப்பாடல்கள் கிரேக்க இலக்கிய வரலாற்றில் மிகப் பெரிய திருப்பு மையங்களாக அமைந்தன. இவற்றைத் தொடர்ந்து ஏதேன்சு நகரைச் சார்ந்த ஏகிலஸ், யூரிபைட்ஸ், சோபோகிளிஸ் போன்றோரின் துன்பியல் நாடகங்கள் கிரேக்க மண்ணில் மலர்ந்தன. கி.மு.5ஆம் நூற்றாண்டில் துசிடைட்ஸ் (Thucydides), ஹிரோடோட்டஸ் (Herodotus) போன்றோர் அரிய வரலாற்று நூல்களைப் படைத்துக் கிரேக்க மொழிக்கு வளம் சேர்த்தனர். சாக்கரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாடில் போன்ற மிகப் பெரிய தத்துவ மேதைகளும், அறிஞர்களும் இவர்களைத் தொடர்ந்து கிரேக்க மண்ணில் உதித்தனர். கணித மேதையான பித்தகோரஸ் போன்ற மாமேதைகள் இக்காலகட்டத்தில் கிரேக்க இலக்கிய வீதிகளில் வலம் வந்தனர்; சிற்பம், கட்டடக் கலை போன்றன இக்காலத்தில் உச்ச நிலையினை அடைந்தன. கிறிஸ்துவுக்குப் பின்னர் கிறித்தவத் திருமறையின் புதிய ஏற்பாட்டுப் பகுதி கிரேக்க மொழியில் அழகுற எழுதப்பட்டது. அதற்கு முன்னர் பழைய ஏற்பாடு எபிரேய மொழி தெரியாத யூதர்களுக்காகக் கிரேக்க மொழியில் மொழிபெயர்த்து எழுதப்பட்டது. செம்மொழியான கிரேக்க மொழி அதிகம் மாற்றம் பெறாமல் இன்றும் பேசப்படும் உயிரோட்டமுள்ள மொழியாகத் திகழ்கின்றது. இந்நிலையில் தமிழைப் போன்று கிரேக்கமும் செம்மொழி, வாழும் மொழி என்னும் இரட்டைத் தகுதிப்பாடுகளைப் பெற்றுச் சிறப்பது குறிப்பிடத்தக்கது.

இலத்தீன் மொழி

கிரேக்கத்திற்கு அடுத்த நிலையில் இடம்பெறும் மற்றொரு செம்மொழியான இலத்தீன் மொழி தற்போது வழக்கிழந்த மொழியாகிவிட்டது. எனினும் இன்றைய பேச்சு வழக்கிலுள்ள ருமானியன், இத்தாலியன்,



இலத்தின் மொழி

பிரெஞ்சு, ஸ்பானிஸ், போர்த்துகீசியம் ஆகிய மொழிகளுக்கு இலத்தீன் மொழி ஆணிவேராக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து இலத்தீன் மொழி எழுச்சி பெற்றுள்ளதைக் காண்கின்றோம். ரோம நாட்டின் வளர்ச்சியும், கிரேக்கத்தை அது வீழ்த்திய நிகழ்ச்சியும், இலத்தீன் மொழியின் எழுச்சிக்குத் தோற்றுவாயாக அமைந்துள்ளன. கிரேக்கர்களை அடிமைகளாகச் சிறைப்படுத்தி ரோமுக்குக்

கொண்டுவந்து அவர்கள் வாயிலாக, உயர்குடியைச் சார்ந்த ரோம நாட்டு மக்களுக்குக் கல்வி தரப்பட்டபோது இலத்தீன் மொழியும் பெருமளவிற்கு விரிவடைந்து வளரத் தொடங்கியது எனலாம். தொடக்க நிலையில் கிரேக்க நூல்கள் இலத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. காலப்போக்கில் கவிதைகளும், நாடகங்களும் இலத்தீன் மொழியில் எழுதப்பட்டன.

கி.மு.70 முதல் கி.பி.20 வரையுள்ள காலகட்டம் ரோம நாட்டின் பொற்காலம் என வரையறுக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் தலைசிறந்த எழுத்தாளர்களும், தன்னிகரற்ற வீரர்களும், கவிஞர்களும், நாடக மேதைகளும், பேச்சாளர்களும் இந்நாட்டில் தோன்றினர். ஜூலியஸ் சீசர் வாழ்ந்த இக்காலத்தில் சிசரோ போன்ற மிகச் சிறந்த இலக்கியவாதிகளும், கவிஞர்களும் வாழ்ந்தனர். வர்ஜில், ஹாரஸ், பிராப்பர்டியஸ் (Propertius) திபுலஸ் (Tibullus), ஆவிட் (Ovid), லிவி (Livy) போன்ற உலகப் பெரும் எழுத்தாளர்களின் காலமிது. அறிவியலும் தத்துவமும், வரலாற்று நூல்களும் இக்கால கட்டத்தில் பெருமளவில் மலர்ந்து கிரேக்க நாட்டிற்கு இணையான அறிவுக் கருவூலங்களை ஓரளவு இலத்தீன் மொழியில் தோற்றுவித்தன. எனினும் கிரேக்கத்தோடு ஒப்பிடும் அளவுக்கு இலத்தீன் மொழியின் இலக்கிய வளம் உயர்ந்ததன்று என்பதே வரலாற்றுத் திறனாய்வாளர்களின் உண்மையான கணிப்பு ஆகும்.

ரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னரும் மேற்கு ஐரோப்பாவில் இலத்தீன் மொழி முக்கிய இடத்தைத் தொடர்ந்து வகித்தது. இதற்குக் காரணம் இது கிறித்தவத் திருச்சபையின் மொழியாகத் திகழ்ந்ததுவேயாகும். தூய ஜெரோம் கி.பி.5இல் கிறித்தவத் திருமறையை இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தார். இதைத் தொடர்ந்து ஏறத்தாழ 1,000 ஆண்டுகளாகத் தத்துவம், இறையியல், அறிவியல், வரலாறு ஆகியவற்றின் மூலமொழியாகவும் மேற்கு ஐரோப்பிய அறிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரின் பண்பாட்டு ஆராய்ச்சிப் பரிமாற்றக் கருவியாகவும் இலத்தீன் மொழி திகழ்ந்தது. கிரேக்கமும், இலத்தீனும் ஐரோப்பியப் பண்பாட்டின் ஆணிவேராகவும் அடித்தளமாகவும் அமைந்தன. இதனால் தாய்மொழி எதுவாக இருப்பினும், ஐரோப்பிய அறிஞர்களின் தகுதிப்பாட்டை அளக்கும் கருவியாகவும், அளவுகோலாகவும் கிரேக்க, இலத்தீன் மொழியறிவு அமைந்துவிட்டது.

ஆசியச் செம்மொழிகள்

செம்மொழிகள் எவை என்ற ஐரோப்பிய பண்பாட்டில் வரையறுக்கப்பட்டு அவற்றிற்குரிய தகுதிப்பாடுகள் வழங்கப்பட்டது போன்று மேற்கு ஆசியாவிலும்,

அ	ஆ	இ	ஈ	உ	ஊ
a	ā	i	ī	u	ū
எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
e	ē	ai	o	ō	au
க	ங	ச	ஞ	ட	ண
ka	ṅa	ca	ña	ṭa	ṇa
த	ந	ப	ம	ய	ர
ta	na	pa	ma	ya	ra
ல	வ	ழ	ள	ற	ன
la	va	ẓa	ḷa	ṛa	ṉa

தமிழ் மொழி

கிழக்கு ஆசியாவிலும், தெற்கு ஆசியாவிலும் இவை போன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றின் விளைவாக ஆசிய நாட்டின் பல மொழிகள் செம்மொழிகள் வரிசையில் இடம்பெறத் தொடங்கின. எனினும், இவை உலகச் செம்மொழிகள் என்ற பொதுநிலையில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இவற்றுள், தெற்காசியாவில் முகிழ்த்த இந்தோ–ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த சமற்கிருதம் மட்டுமே கி.பி.18ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் உலகச் செம்மொழிகளின் வரிசையில் இணையும் வாய்ப்பினைப் பெற்றுள்ளது.

எபிரேய மொழி

ஐரோப்பாவிற்குக் கிழக்கில் அமைந்த நடுகிழக்கு நாடுகள் (Middle East Countries) ஆசியச் செம்மொழிகளின் ஓர் உட்பிரிவின் பிறப்பிடமாக உருப்பெற்றன. இப்பகுதிகள் செமிட்டிக், அரபி, எபிரேயம் ஆகிய மொழிக் குடும்பங்களின் தொட்டிலாகவும் வளர்ப்புப் பண்ணையாகவும் திகழ்ந்தன. இவற்றுள் கி.மு.1200 முதல் பழைமை பெற்று விளங்கும் ஓர் உயரிய மொழி எபிரேய மொழியாகும். இம்மொழியில் எழுதப்பட்ட கிறித்தவத்

திருமறையின் பல புத்தகங்கள் காலத்தால் மிகவும் தொன்மையானவை. யூத சமயத்தோடு பின்னிப் பிணைந்து வளர்ந்த ஏராளமான கவிதைகளும் உரைநடை இலக்கியங்களும் 3,000 ஆண்டுகளுக்கு முன் எபிரேய மொழியில் வளர்ந்து செழித்தன. யூத



எபிரேய மொழி

சமுதாயம், சமயம் ஆகியன தொடர்பான சட்ட நூல்கள் இவற்றுள் முதன்மையானவை எனலாம். இம்மொழியின் வரலாறு கி.பி.12 வரை தொடர்ந்தது. தத்துவம், கணிதவியல் தொடர்பான எண்ணற்ற நூல்களை இக்காலகட்டத்தில் எபிரேய மொழி தோற்றுவித்தது. எனினும் எபிரேய மொழி பேச்சு மொழியாகத் தொடரவில்லை. அரமெய்க் மொழியே இப்பகுதியின் பேச்சு மொழியாகத் தொடர்ந்தது. இசுரேல் நாட்டு தேசிய மொழியாகத் தற்போது எபிரேயம் ஏற்றம் பெற்றுப் புதுப்பொலிவும் பெற்றுப் பேச்சு மொழியாகவும் வளர்ந்து சிறப்பது குறிப்பிடத்தக்கது.

அரபி மொழி

நடுகிழக்கு நாடுகளின் மற்றொரு செம்மொழியான அரபி மொழியின் தொடக்க நிலைப்படைப்புகள் வாய்மொழி இலக்கியங்களாகவே அமைந்தன. கி.பி.6 ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே இந்த வாய்மொழி இலக்கிய மரபுகள் மிகச் சிறப்பாக இம்மொழியில் வளர்ச்சி பெற்றுள்ளன. இசுலாமிய சமயத்தின் தோற்றம் அரபி மொழி ஒரு செம்மொழியாக மலரத் துணை நின்றது. முகமதுநபியின் உரைகள் கி.பி.632இல் திருக்குரானாக இம்மொழியில் எழுத்து வடிவம் பெற்றன.

காதலைப் பாடும் இலக்கியங்கள் இசுலாமிய சமயத்தாரின் கண்டனத்துக்குட்பட்ட போதிலும் கிறித்தவர்களால் பேணி வளர்க்கப்பட்ட கேசல் (ghazal) காதற் பாடல்கள் கி.பி.7 ஆம் நூற்றாண்டிற்குப் பின் அரபி மொழியில்



அரபி மொழி

வலுவடைந்தன. இதையொட்டி கி.பி.8 ஆம் நூற்றாண்டில் அரபி மொழியின் பொற்காலம் தொடங்கியது. பாக்தாத் நகரை மையமாகக் கொண்டு தொடங்கிய இப்புதிய இலக்கிய யுகம் ஏறத்தாழ 300 ஆண்டுகள் தொடர்ந்தது. இவற்றின் விளைவாகப் புதிய வகையான கவிதைக் குவியல்கள், புதுப்புது இலக்கிய உத்திகள், புதியன உணர்த்தும் முறைகள் ஆகிய இக்காலகட்டத்தில் மிகச் சிறப்பாக அரபி மொழியில் உதயமாயின. இக்காலத்தில் உரைநடை இலக்கியம் உச்சநிலையினை எய்தியது. கணிதம், வேதியியல், மருத்துவம் போன்ற துறைகளில் சிரிய மொழி (Syrian) வாயிலாகக் கிரேக்கத் தாக்கம் அரபி மொழியில் அழுத்தமாகப் பதிந்தது. கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் மொழியியல், சட்டம், புவியியல், வரலாறு போன்றன தொடர்பான அரிய படைப்புகள் இம்மொழியில் மிகப்பெரும் அளவில் எழுந்தன. அரபிச் செம்மொழி என்பது குரானை மட்டும் மையமாகக் கொண்டதல்ல என்பதும், அது பல துறைகளைத் தழுவி வளர்ந்த இம்மொழியின் முழுப் பரிமாணத்தையும் உள்ளடக்கியது என்பதும் குறிப்பிடத்தக்கன.

பார்சி மொழி

இசுலாமிய சமயத்தின் பரவுதலாலும் அரபியின் பாதிப்பாலும் வலுப்பெற்றுச் செம்மொழித் தகுதிப் பாட்டொடு வளர்ந்த மற்றொரு மொழி பர்சியன் அல்லது பார்சி மொழி என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இம்மொழியின் வளர்ச்சி நிலையினைக் கி.மு.6ஆம் நூற்றாண்டிலிருந்து அறிவதற்குத் தக்க சான்றுகள் பல உள்ளன. எனினும் கி.பி. 7ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே மிகப்பெரிய வளர்ச்சியினை இம்மொழியில் நாம் காணமுடிகின்றது. தொடக்கநிலையில் அரபி மொழியின் தாக்கம் பார்சி மொழியில் மிகுந்திருந்தது. காலப்போக்கில் பார்சியின் தாக்கம் அரபி மொழியில் பெருமளவிற்கு ஏற்பட்டது. கி.பி.10ஆம் நூற்றாண்டளவில் பார்சிய நாட்டின் வடகிழக்குப் பகுதியில் தனித்தன்மை வாய்ந்த பார்சி இலக்கியங்கள் உருவாகின. இவற்றைத் தொடர்ந்து இரு நூற்றாண்டுகளில் அரிய பல காப்பியங்களை இம்மொழி உலகிற்குத் தந்தது. தத்துவம், கணிதம், வரலாறு தொடர்பான அரிய கலைக்கருவூலங்களும் இக்காலகட்டத்தில் எழுந்தன. இத்தகைய வளமான வளர்ச்சியால் பார்சி மொழி செம்மொழிகளுள் ஒன்றாகக் கருதப்படும் நிலையினைப் படிப்படியாக எய்தியது.

சமற்கிருத மொழி

தெற்கு ஆசியாவில் சமற்கிருதமும், தமிழும், பாலியும் உயர்தனிச் செம்மொழிகளாக ஏற்றம் பெற்றன. சமற்கிருத மொழி பன்முகத் தகுதிப்பாடுகளைப் பெற்றுத் திகழ்ந்ததால் காலப்போக்கில் உலகச் செம்மொழிகளுள் ஒன்றாக ஏற்றம் பெற்றது. சமற்கிருத இலக்கிய வரலாற்றில் 3,500 ஆண்டுகளுக்கு முன்னரே வேதகால சமற்கிருதம் எழுச்சி பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

வேதகால சமற்கிருத இலக்கியங்கள் சமயம் சார்ந்தனவாக அமைந்தபோதிலும் அவற்றிற்குப் பின்னர்த் தோன்றிய சமற்கிருத இலக்கியப் படைப்புகள் பல்வேறு துறைகளையும் பல்வேறு வகைப்பாடுகளையும் தழுவி நின்று வளர்ந்தன என்பது சுட்டத்தக்கது. இம்மொழியில் பிறந்த மகாபாரதமும், வால்மீகியால் கலை வடிவம் பெற்ற இராமாயணமும், இந்து சமய உலகோடு மட்டும் நின்றுவிடாது கிழக்கிலும், மேற்கிலும் பரந்து பரவி பல்வேறு மொழிகளில் பெருந்தாக்குரவுகளை ஏற்படுத்தின. இப்பெருங்காப்பியங்கள் அல்லது இதிகாசங்களைத் தொடர்ந்து 36 வகைப் புராணங்களும், தந்திர நூல்களும், காவியங்களும் இம்மொழியில் எழுந்தன. பல்வேறு தன்னுணர்ச்சிப் பாடல்களும், நாடகங்களும் பெருமளவிற்குப் படைக்கப்பட்டன. பாணினியின் அஸ்டத்தியாதி ஒப்பற்ற மொழிநூல் படைப்பாகவும், அறிவியல் பூர்வமான மொழியாய்வு நூலாகவும், பேரிலக்கணமாகவும் மலர்ந்தது. காத்யாயனா, பதஞ்சலி, பர்தரஹரி போன்றோர் அரிய பல்துறை தழுவிய படைப்புகளைத் தந்து சமற்கிருத இலக்கியச் சோலையை வளப்படுத்தினர். காளிதாசரின் படைப்புகள் இம்மொழியின் தன்னேரற்ற இலக்கியக் கருவூலங்களாகத் திகழ்ந்தன. கிரேக்க இலக்கியத்திற்கு இணையாகக் கவிதையியலும், பாட்டியலும், அலங்கார நூல்களும் இம்மொழியில் பெருகின. கவுடில்யரின் அர்த்தசாஸ்திரம் போன்ற பல்துறை சார்ந்த படைப்புகள் இம்மொழியில் பெருக்கெடுத்தன. இவைபனைத்தும் இம்மொழிக்கு உலகப் புகழினை ஈட்டித் தந்தன.

சமற்கிருத மொழி

अ	आ	इ	ई	उ	ऊ
		ए	ऐ	ओ	औ
ऋ	ॠ	ऌ		अं	अः
क	ख	ग	घ	ङ	
च	छ	ज	झ	ञ	
ट	ठ	ड	ढ	ण	
त	थ	द	ध	न	
प	फ	ब	भ	म	
य	र	ल	व		
श	ष	स	ह		

பாலி மொழி

இந்திய நாட்டின் பழைமை வாய்ந்த மொழிகளுள் ஒன்றாகப் பாலி மொழி அமைகின்றது. கி.மு.3ஆம் நூற்றாண்டைய தேரவாத பௌத்தக் கோட்பாடுகள் இம்மொழியில் வாய்மொழியாக வழங்கப்பட்டு கி.மு.முதல் நூற்றாண்டளவில் அவை இம்மொழியில் வரிவடிவம் பெற்றுள்ளன. பாலி மொழியில் எழுந்துள்ள நூல்கள் பௌத்த சமயச் சார்புடையன. தம்மபதம்,

ஜாதகக் கதைகள், திரிபிடகம் ஆகியன இம்மொழியின் சிறப்பு வாய்ந்த நூல்களாகும். பாலி மொழி இலக்கியங்கள் சமயச் சார்புடையனவாக அமைந்தபோதிலும் பல்வேறு வகைப்பட்டன (variety) வாகப் பரந்து சிறப்பதாலும், தொடக்க காலம் முதல் இன்றளவும் உலகின் பெருஞ்சமயங்களுள் ஒன்றான பௌத்தத்தின் சிந்தனைகளைத் தாங்கி நிற்பதாலும், இலங்கைத் தீவில் நிகழும் சிங்களப் பண்பாட்டின் அடித்தளமாக அமைவதாலும், தாய்லாந்து, பர்மா போன்ற தென்கிழக்காசிய நாடுகளின் பண்பாட்டுப் பாரம்பரியங்களின் ஆணிவேராகப் பொலிவதாலும் இதனையும் உலகச் செம்மொழிகளுள் ஒன்றாக இணைக்க வேண்டும் என்ற கோரிக்கை நிலவுகின்றது. வேதகால இந்து சமயத்திற்கு எதிரிடையான, பௌத்த சிந்தனைகளைப் பேச்சுமொழியில் பரப்ப உகந்த மொழியாகப் பாலி மொழியினைப் பௌத்தர்கள் தொடக்க நிலையில் ஏற்றுப் போற்றினர். எனினும், பௌத்த நூல்களின் எழுச்சியால் பேச்சுமொழியான பாலி மொழி காலப்போக்கில் இலக்கிய மொழியாக மலர்ந்து செம்மொழித் தகுதிப்பாட்டினைத் தொட்டு நிற்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் மொழி

சமற்கிருதத்திற்கு இணையான வரலாற்றுத் தொன்மையினையும், இலக்கிய இலக்கணத் தனித்தன்மையினையும் பெற்றுச் சிறக்கும் தமிழ் மொழி இந்திய மொழிக் குடும்பங்களுள் மிகப்பெரிய மொழிக் குடும்பமாகத் திகழும் திராவிட மொழிக் குடும்பத்தின் தலைமை வாய்ந்த மொழியாக மலர்ந்துள்ளது. பாணினிக்கு இணையான அல்லது பாணினியின் படைப்பையும் மிஞ்சும் திறன்கொண்ட இலக்கணப் பண்பாட்டு நூலான தொல்காப்பியமும், கிரேக்கச் செம்மொழிக் கவிதைகளை விஞ்சும் சங்கப் படைப்புகளும், தன்னேரில்லாத தமிழ்மறையான திருக்குறளும், புரட்சிக் காப்பியங்களான சிலம்பும், மேகலையும் ஏனைய பிற இலக்கிய இலக்கணக் குவியல்களும் தமிழை உலகச் செம்மொழிகளுள் ஒன்றாக இணைத்து ஏராளமான வெளிநாட்டு அறிஞர்களைக் காணச் செய்துள்ளன.

கிரேக்க மொழியினைப் போன்று செம்மொழித் தகுதிப்பாட்டினையும், வாழும் மொழி என்ற ஏற்றத்தினையும் தமிழ் மொழி ஒருங்கே பெற்றுச் சிறக்கின்றது. "என்று பிறந்தவள் என்றறியா இயல்பினள் எங்கள் தாய்" என்று பாரதியாரைப் பாடவைத்த இந்த மொழி சித்தியமொழிகளோடும், செமிட்டிக் மொழிகளோடும், ஏலாமைட் மொழிகளோடும், உரல் அல்டெயிக் மொழிகளோடும், கிரேக்க, இலத்தீன் மொழிகளோடும் உறவு கொண்டுள்ள ஒரே இந்திய மொழி என்பதைப் பல்வேறு அறிஞர்களும் ஆய்ந்து காட்டியுள்ளனர். இம்மொழியின் வேர்களும், விழுதுகளும் பாரெங்கும் பரவி நிற்கும் பரந்து விரிந்த இப்பாங்கினை விரிவாய்வு செய்யும்போது உலக மொழிகளின் தாயாக விளங்கும் உயரிய சிறப்பை இது பெற்றிருப்பதை நிலைநாட்ட முடியும். இத்தகைய ஆய்வுகள் உலகச் செம்மொழிகளுள் ஒன்றாக இணையும் சிறப்பினைத் தமிழுக்கு நல்கும் என்பது உறுதி.

சீன மொழி

கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய மொழியான சீன மொழி சமற்கிருதத்தைப் போன்று மிகப் பழமையான மொழியாக அமைகின்றது. கி.மு.14 ஆம் நூற்றாண்டளவில் தோற்றம் பெற்ற இம்மொழி, வாழும்



சீன மொழி

மொழியாகவும் உலகின் பெரும்பாலோர் பேசும் மொழியாகவும் மலர்ந்துள்ளது வியப்புக்குரியது. இதன் தொடக்க இலக்கியங்கள் கி.மு.12 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாக நம்பப்படுகின்றது. இசையோடும் நடனத்தோடும் இணைந்த இம்மொழியின் தொடக்ககாலப் பாணர் மரபு கவிதைகள் (bardic poetry) சௌ மன்னர்களின் (Chou Dynasty) காலத்தைச் சார்ந்தவை.

கி.மு.6ஆம் நூற்றாண்டில் இம்மொழியில் தத்துவப் படைப்புகள் ஏராளமாகப் பெருக்கெடுத்தன. லாவோட்சுவின் (Lao-tsu) எழுத்துகளும், கன்பூசியசின் சிந்தனைகளும் இந்த வரிசையில் குறிப்பிடத் தகுந்தவை. இக்காலகட்டத்தையொட்டி சீன மொழியில் இசைப் பாடல்களும் (lyrical poetry) கதைபொதி பாடல்களும் (ballads) பெருமளவிற்குத் தோன்றின. எனினும் கி.பி.7ஆம் நூற்றாண்டு முதல் 10ஆம் நூற்றாண்டு வரையிலான காலமே சீன இலக்கியத்தின் பொற்காலமாகக் கருதப்படுகின்றது. இக்கால கட்டத்திற்குப் பின்னர் நாவல் இலக்கியப் படைப்புகளும், நாடக இலக்கியங்களும் கி.பி.13ஆம் நூற்றாண்டு வரை பெருமளவிற்குத் தோன்றின. இவற்றில் இந்திய பாரசீகப் பண்பாட்டுத் தாக்கங்களைப் பெருமளவிற்குக் காணமுடிகின்றது. சீன மொழி ஆசிய நாடுகளின் செம்மொழிகளுள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது.

ஜப்பானிய மொழி

சீன மொழியோடு தொடர்புடைய மற்றுமொரு பழைமை வாய்ந்த மொழியாக ஜப்பானிய மொழி அமைகின்றது. கி.பி.7ஆம் நூற்றாண்டு முதல்

ん (n)	わ (wa)	ら (ra)	や (ya)	ま (ma)	は (ha)	な (na)	た (ta)	さ (sa)	か (ka)	あ (a)
	ゐ (wi)	り (ri)		み (mi)	ひ (hi)	に (ni)	ち (chi)	し (shi)	き (ki)	い (i)
		る (ru)	ゆ (yu)	む (mu)	ふ (fu)	ぬ (nu)	つ (tsu)	す (su)	く (ku)	う (u)
	ゑ (we)	れ (re)		め (me)	へ (he)	ね (ne)	て (te)	せ (se)	け (ke)	え (e)
	を (wo)	ろ (ro)	よ (yo)	も (mo)	ほ (ho)	の (no)	と (to)	そ (so)	こ (ko)	お (o)

ஜப்பான் மொழி

எழுச்சிபெற்ற ஜப்பானிய மொழி இலக்கியச் சிறப்புமிக்க மொழியாக அமைந்தபோதிலும் இது உலகச் செம்மொழி வரிசையில் வைத்து நோக்கப்படவில்லை. அரபி மொழியைப் போன்று தொன்மைச் சிறப்பு இல்லாதபோதிலும் அரபி மொழிக்குத் தரப்பட்ட செம்மொழித் தகுதிப்பாடு ஜப்பானிய மொழிக்குத் தரப்படவில்லை. இதற்குக் காரணம் சீன மொழியின் ஆதிக்கத்திற்கு அதிக அளவில் இது இடங்கொடுத்ததேயாகும். ஜப்பானிய மொழியின் வடிவு அமைப்பு சீன மொழிக்கு மாறுபட்டபோதிலும் சீன மொழியின் வரிவடிவம் ஜப்பானிய மொழியில் பெருமளவிற்கு இடம்பெற்றது செம்மொழித் தகுதிப்பாட்டினை இம்மொழி பெறாமைக்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது எனலாம். கி.பி.9ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட ஜப்பானிய மொழி சீன மொழியின் ஆதிக்கத்தைப் பெருமளவிற்குத் தவிர்த்துள்ளது. இக்காலகட்டத்தில் இம்மொழி பன்முகப் படைப்புகளைத் தந்துள்ளது. ஜப்பானிய மொழியில் கி.பி.7ஆம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்ட மன்யோசு நூலின் கவிதைகள் சங்க அகப்பாடல்களைப் போன்றே அமைவது குறிப்பிடத்தக்கது. இலக்கியவளம் மிக்க ஜப்பானிய மொழியும் செம்மொழிகளுள் ஒன்றாகக் கருதும் தகுதிப்பாடுடையது என்பதில் எந்த ஐயமுமில்லை.

உலகச் செம்மொழித் தகுதிப்பாடு

மொத்த நிலையில் நோக்கும்போது கிரேக்கம், இலத்தீன், எபிரேயம், அரபி, பர்சியன், சமற்கிருதம், பாலி, தமிழ், சீனம், ஜப்பானியம் ஆகிய பத்து மொழிகள் செம்மொழித் தகுதிப்பாட்டிற்கு உரிய மொழிகளாக அமைந்துள்ளன. தொன்மை, பன்முகத் தன்மை, பிற பண்பாட்டுக் கூறுபாடுகளில் ஏற்படுத்தியுள்ள தாக்குரவு, தனித்தன்மை, இலக்கிய வளம் ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்டே செம்மொழி எனும் தகுதிப்பாடு கணிக்கப்படுகின்றது. இந்நிலையில் 6,000க்கு மேற்பட்ட மொழிகள் பேசப்படும் உலகில் ஏறத்தாழ பத்து மொழிகளே செம்மொழித் தகுதிப்பாட்டினைப் பெறுகின்றன. இவற்றுள்ளும் ஏறத்தாழ 1,600 மொழிகள் பேசப்படும் இந்தியத் திருநாட்டில் செம்மொழித் தகுதிப்பாட்டினைப் பெறும் மொழிகள் சமற்கிருதம், பாலி, தமிழ் ஆகிய மூன்று மொழிகளே என்பது குறிப்பிடத்தக்கது.

சமயச் சார்பு அதிக அளவிற்கு நிறைந்துள்ள மொழிகள் என்ற நிலையில் இலத்தீன் மொழி, அரபி மொழி, பார்சி மொழி, பாலி மொழி, எபிரேய மொழி ஆகியன காட்சி தருகின்றன. சமயச் சார்பு குறைந்த மொழிகளாகக் கிரேக்கமும், தமிழும், சீன மொழியும் திகழ்கின்றன. சமயமும், சமயச் சார்பின்மையும் விரவிய மொழிகளாக சமற்கிருதம், ஜப்பானியம் போன்ற மொழிகள் அமைகின்றன.

கால அடிப்படையில் நோக்கும்போது ஒவ்வொரு மொழியின் வரலாற்றிலும் செம்மொழிக் காலம் அல்லது

செவ்வியல் காலம் என்பது பலவாக வேறுபட்டு நிற்பதைக் காணமுடிகின்றது. அரபி, ஜப்பானியம், பார்சி போன்ற மொழிகளின் செவ்வியல் காலம் கி.பி.6ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரும், ஏனையவற்றின் செவ்வியல் காலம் கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரும் தொடங்குகின்றன. செம்மொழிகளை வாழும் மொழிகள் என்றும், வழக்கிழந்த மொழிகள் என்றும் இரு கூறுபடுத்தலாம். இவற்றுள் சமற்கிருதம், இலத்தீன் ஆகியன வழக்கிழந்த மொழிகள் என்னும் பிரிவில் அடங்குவன. எபிரேய மொழி வழக்கிழந்த மொழியாக அமைந்து இப்போது இசுரேல் நாட்டின் தேசிய மொழியாக, பேச்சு மொழியாக வியத்தகு நிலையில் புதுப்பிறவி எடுத்துள்ளது. வாழும் மொழிகள் அனைத்தும் குறிப்பிட்ட காலம் வரை செம்மொழிகளாகத் தொடர்ந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின் தற்கால மொழிகளாக மலர்கின்றன. இவையனைத்தும் இரட்டைத் தகுதிகளை (Dual status) பெறுகின்றன. தமிழைப் பொறுத்தமட்டில் கி.பி.6ஆம் நூற்றாண்டு வரை செம்மொழி காலகட்டமாகவும், கி.பி.6ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட காலம் தற்காலம் என்ற நிலையிலும் இரட்டைத் தகுதிப்பாட்டைப் பெற்று நிற்பதைக் காணலாம்.

உலகச் செம்மொழிகள் என்ற கண்ணோட்டத்தில் நோக்குமிடத்தில் முன்னர்ச் சுட்டியவாறு கி.பி.18ஆம் நூற்றாண்டுவரை ஐரோப்பியப் பண்பாட்டின் ஆணிவேராகத் திகழ்ந்த கிரேக்கம், இலத்தீன் ஆகிய இருமொழிகள் மட்டுமே இப்பிரிவில் பேசப்பட்டன. ஆசிய மொழிகளுள் ஒன்றுகூட இப்பிரிவில் இடம் பெறாதது ஐரோப்பிய மேலாண்மையின் விளைவாக இருக்கலாம் என்பதில் ஐயமில்லை. பிற ஆசிய மொழிகளின் உயர்தனி இலக்கியச் சிறப்புகள் ஐரோப்பியர்களுக்கு கி.பி.18ஆம் நூற்றாண்டுவரை அதிகமாகத் தெரியாமல் இருந்திருக்கலாம். ஆனால், கிறித்தவத் திருமறையின் பழைய ஏற்பாடு எழுதப்பட்ட எபிரேய மொழியின் உயர்தனிச் சிறப்பு அவர்களுக்கு நன்றாகவே தெரிந்திருந்தது என்பதில் ஐயமில்லை. கி.பி.1604இல் ஜேம்சு அரசனால் திருமறையின் பழைய ஏற்பாட்டின் உயர்தனிச் சிறப்பு வாய்ந்த மொழிபெயர்ப்பு ஆங்கில மொழியில் மேற்கொள்ளப் பட்டது. இக்காலகட்டம் முதல் ஆங்கிலம் உள்ளிட்ட அனைத்து ஐரோப்பிய மொழிகளும் கிறித்தவத் திருமறையின் பாதிப்புக்கு உட்பட்டன. தாவீது மன்னனின் திருப்பாடலும் (Psalms), பேரரசன் சாலமனின் உன்னதப்பாட்டும் (Song of Songs) இசையா தீர்க்கரின் புத்தகமும், யோபுவின் புத்தகமும் (Book of Job) ஏனைய பிற நூல்களும் ஐரோப்பிய மொழிகளில் பெருந்தாக்கத்தினை ஏற்படுத்தின. இதற்கு முன்னரே தூய ஜெரோம் அவர்களால் கி.பி.4ஆம் நூற்றாண்டில் கிறித்தவத் திருமறை இலத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. தம் படைப்புகளுக்குக் கிரேக்க, இலத்தீன் இலக்கியங்களை மூலவூற்றாகக் கொண்ட ஐரோப்பிய படைப்பாளர்கள் இலத்தீன் மூலமாகக் கி.பி.4ஆம் நூற்றாண்டிலும் ஆங்கிலம் வாயிலாகக் கி.பி.17ஆம் நூற்றாண்டிலும் தங்களுக்கு மிகச் சிறப்பாக அறிமுகமான எபிரேய இலக்கியப் பெருமைகளை அறிந்திருந்தும் எபிரேய மொழியை உலகச் செம்மொழி வரிசையில் இணைத்துக் கொள்ளவில்லை.

18ஆம் நூற்றாண்டில் கல்கத்தாவில் சர் வில்லியம் ஜோன்சு ஆசியக் கல்விச் சங்கத்தை அமைத்து அதன் மூலமாக சமற்கிருத இலக்கியங்களை செருமன், ஆங்கிலம் போன்ற ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்க தகுந்த வாய்ப்புகளை ஏற்படுத்தியபோது சமற்கிருத இலக்கியங்கள் மொழி என்னும் தடையினை உடைத்தெறிந்து ஐரோப்பா முழுவதும் மொழிபெயர்ப்பு வாயிலாகப் பாய்ந்து பரவின. இதன் விளைவாக ஐரோப்பிய எழுத்தாளர்களின் பார்வை கிரேக்கத்தையும், இலத்தீனையும், எபிரேயத்தையும் விட்டு சமற்கிருத இலக்கியங்கள் பக்கம் திரும்பின. தெற்கு ஆசிய நாடான இந்தியாவில் வளர்ந்த போதிலும் சமற்கிருதம் இந்தோ–ஐரோப்பிய மொழியே என்பதை சர் வில்லியம் ஜோன்சு நிறுவிக் காட்டினார். இந்தப் பின்னணியில் உலகச் செம்மொழி வரிசையில் மற்றுமொரு மொழியாக சமற்கிருதம் கி.பி.19ஆம் நூற்றாண்டு முதல் ஏற்றுக் கொள்ளப்பட்டது. உலகெங்கிலும் வழங்கும் பத்து மொழிகள் செம்மொழித் தகுதியுடையனவாக அமைந்த போதிலும் இன்றைய நிலையில் கிரேக்கம், இலத்தீன், சமற்கிருதம் ஆகிய ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மூன்று மொழிகள் மட்டுமே உலகச் செம்மொழிகளாக அமைந்துள்ளன.

இந்தோ—ஐரோப்பிய மொழிகளுள் பழைமை வாய்ந்த மொழிகளான கிரேக்கம், இலத்தீன், சமற்கிருதம் ஆகிய மூன்று மொழிகளுக்கு மட்டுமே உலகச் செம்மொழி என்னும் அங்கீகாரம் நல்கப்பட்டு இலக்கிய, இலக்கண வளம்மிகுந்த தமிழ், சீனம், எபிரேயம் போன்ற ஆசிய மொழிகள் இப்பகுப்பில் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. மேற்கூறிய மூன்று மொழிகள் மட்டும்தாம் உலகச் செம்மொழிகள் என்று பறைசாற்றும் மரபுச் சிந்தனை கால வளர்ச்சியும், மொழி ஆய்வு வளர்ச்சியும் வியத்தகு முறையில் ஏற்பட்ட இக்காலகட்டத்தில் முழுநிலையில் மறுபரிசீலனைக்குரியது. இம்மூன்று மொழிகளை இந்தோ—ஐரோப்பிய அல்லது இந்தோ—ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த செம்மொழிகள் என்று குறிப்பிடலாமே தவிர உலகச் செம்மொழிகள் இவை மட்டும்தாம் என்று முடிவு செய்துவிட முடியாது. பழைமைமிக்க ஆசிய மொழிகளுள் ஒன்றுகூட இப்பிரிவில் இடம் பெறாதது கூர்ந்து நோக்கத்தக்கது.

தமிழ் மொழிக்குத் தேசிய நிலையில் செம்மொழித் தகுதி 2004ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. உலக அளவில் ஆசிய மொழிகள் அல்லது இந்திய மொழிகள் பற்றி ஆய்வு செய்யும் அறிஞர்களில் பெரும்பாலோர் தமிழை உலகச் செம்மொழிகளுள் ஒன்றாகவே குறிப்பிடுகின்றனர். எனினும் உலக அரங்கில் நாம் இந்தத் தகுதிப்பாட்டினை இதுவரை பெறமுடியவில்லை.

கி.பி.18, 19 ஆகிய நூற்றாண்டுகளில் சமற்கிருத இலக்கியங்களை மொழிபெயர்த்து ஐரோப்பாவில் பரப்ப கல்கத்தாவின் ஆசியக் கல்விச் சங்கம் நிறுவன அடிப்படையில் துணை நின்றது. தமிழிலக்கியங்களை மொழிபெயர்த்த கிறித்தவ அருள் தொண்டர்களின் முயற்சிகளுக்குத் துணைநிற்க அப்படியொரு அமைப்பு தமிழகத்தில் இல்லாதுபோனது ஒரு பெருங்குறையாக அமைந்துவிட்டது.

தொன்மைச் சிறப்பாலும், பன்முகப்பட்ட இலக்கிய வகைகளைப் பெற்றிருக்கும் பெரும்பேற்றாலும், தனித்தன்மை மிக்க இலக்கியப் பண்பாட்டுக் கூறுகளைக் கொண்ட தனிச் சிறப்பாலும் உயர்ந்து சிறக்கும் தமிழ் மொழி உலகச் செம்மொழிகளுள் ஒன்று என்று ஒட்டுமொத்தமாகக் கருதப்படும் தகுதிப்பாட்டினை இன்னமும் பெறாமலிருப்பதற்கு மற்றொரு காரணமாக அமைவது தரமான தமிழ் புலமையினை உலக அளவிற்கு எடுத்துச் சொல்லாமல் இருப்பதுவும், பிறநாட்டு அறிஞர்களோடு இணைந்து உலகளாவிய நிலையில் தமிழாய்வில் ஈடுபட நாம் தயங்குவதுமாகும்.

தமிழ்மொழியின் வேர்களும், விழுதுகளும் உலக மொழிகளில் இருப்பதை மேல்நாட்டு அறிஞர்கள் பலரும், ஆசிய நாட்டு அறிஞர்களும் தொடர்ந்து எடுத்தியம்பி வருகின்றனர். இத்துறையில் பல ஆய்வுகள் பிற நாட்டறிஞர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆய்வு நீரோட்டத்தில் தமிழறிஞர்கள் இணைந்து செயற்பட்டு உலக மொழிகளுக்கெல்லாம் தமிழ் மொழி அடித்தளமாக அமைந்துள்ள பாங்கினை ஆராய்ச்சிபூர்வமாக நிலைநாட்ட முன்வர வேண்டும். இச்செயல் தமிழ்மொழியின் உலகளாவிய தகுதிப்பாட்டை நல்ல அடித்தளத்துடன் உறுதியாக நிலைநிறுத்தத் துணைபுரியும்.

இந்தியா, இலங்கை, சிங்கப்பூர் ஆகிய மூன்று நாடுகளில் ஆட்சிமொழியாகும் சிறப்புப் பெற்ற ஒரே இந்திய மொழி தமிழ் மொழிதான் என்பதை நாம் மறந்துவிடமுடியாது. யூத இனத்திற்கு அடுத்த நிலையில் உலகெங்கும் அதிக அளவில் பரந்து வாழ்கின்ற ஒரே இனம் தமிழ் இனம் என்பதையும் உலகின் 58 நாடுகளில் தமிழர்கள் வாழ்கின்றனர் என்கின்ற உண்மை நிலையினையும் நாம் மறந்துவிட முடியாது. சமற்கிருதத்திற்கு அடுத்த நிலையில் பிறநாட்டு அறிஞர்களால் உலகெங்கிலும் ஆய்வு நிகழ்த்தப்படுகின்ற ஒரே மொழி தமிழ் மொழிதான் என்பதையும் யாரும் மறுத்துவிட முடியாது. மேற்கூறிய வாய்ப்புகளையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு, நாம் அனைவரும் தொடர்ந்து இணைந்து முயன்றால் உலகச் செம்மொழிகளின் வரிசையில் தமிழ்மொழி விரைவில் இடம்பெறும் என்பது உறுதி.

சிலம்பம்

சிலம்பம், வாள்வீச்சு, மல்யுத்தம், சுருள் போன்றவை போர்க்கலைகளாக இருந்து காலப்போக்கில் பொழுதுபோக்குக் கலைகளாக மாறிவிட்டன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, ஒவ்வொரு ஊரிலும் ஓரிருவரேனும் சிலம்பக் கலையில் சிறந்து விளங்குவதைக் காணமுடியும். தற்காப்புக்காகவும், மனக்கட்டுப்பாட்டினை வளர்க்கவும், உடல்நலத்தையும் திறனையும் ஒருசேரக் கட்டிக்காக்கவும், எதிர்பாராத இடர்பாடுகளைச் சமாளிக்கும் சமயோசித அறிவினைக் கூர்மைப்படுத்திக்கொள்ளவும் வாய்ப்பாகத் தோன்றியதோர் அருமையான கலை இதுவெனலாம். இக்கலை தொன்மைக்கும் தொடர்ச்சிக்கும் சான்றாகித் தமிழர்தம் வன்மைக்கும் வகுத்த 'வாய்க்கால் வளம்'! எனலாம்.

வினை விளையாடல்: சிலம்ப விளையாட்டு, சிலம்பாட்டம், கம்பு சுத்துதல், சிலம்பம் ஆடுதல், சிலம்பம் என்று பலவாறு சுட்டப்படும். சிலம்பாட்டம், தனிநிலையிலும் இதர நாட்டுப்புறக் கலைகளோடு சேர்த்தும் நடத்தப்படுகின்றது. 'சிலம்பம் என்றால் கழிவீசுதல் முதலிய படைக்கலப் பயிற்சி,' எனப் பண்டைய நூலான பதார்த்த குண சிந்தாமணி விளக்கம் தருகின்றது. கைச்சிலம்பத்திலிருந்து பிரித்தறிவதற்காகக் கழிவிளையாட்டு என்றும் கிராமப்புர மக்கள் இதனை அழைப்பர்.

முனைப்பின் முதுகெலும்பு: சிலம்பம் ஆடுவதற்குரிய கோலினை (கம்பு, கழி) மெலிதான கல்மூங்கிலின் பாகத்தைத் தேவையான நீளத்திற்கு வெட்டி மாசுமருவினை அகற்றிக் கையில் பிடித்துக்கொள்ள ஏதுவாக தயார் செய்கின்றனர். சில ஊர்களில் பிரம்பும், தென்தமிழ்நாட்டுப் பகுதிகளில் காட்டுத்துவரைக் கம்பும் பயன்பாட்டில் உண்டெனத் தெரிகின்றது. அரைப்பிடி, முக்கால்பிடி, முழுப்பிடி என்று சிலம்பக் கோலைக் கையில் பிடித்திருக்கும் நிலைகள் பெயர் பெற்றுள்ளன. சிலம்பம் கடினமான கலை! அதனை ஆடும் கலைஞர்கள் அணிவதோ எளிமையான உடை!



முன்னாட்களில் கீழ்ப்பாய்ச்சி அல்லது லங்கோடு! இந்நாட்களில் அரைக்கால் சட்டையும் முண்டா பனியனும்! பகட்டுக்காகச் சிலர் கையைச் சுற்றி முடிக் கயிறு அல்லது தாயத்து அணிவதும் இயல்பு.

சிலம்பக்கலை நிகழ்வில் ஆசான் வணக்கம் அருமையான பண்பாடு. 'சாதி சமய வேறுபாடுகளைக் கடந்து நிகழ்வது. கீழ்ப்பாலொருவன் கற்பின் மேற்பாலொருவனும் அவன்கட்படுமே,' என்னும் சங்கப் பாடலின் சரியான வெளிப்பாடு! சமூகத்தைப் படம் பிடிப்பதும் பண்படுத்துவதும் மகிழ்ச்சியில் ஆழ்த்துவதும் கலைகளின் பணியென்றால், அவற்றை வளர்த்தெடுக்கும் கலைஞர்களைப் பாராட்டுவதும், வளர்த்தெடுப்பதும், பாதுகாப்பதும் சமூகத்தின் கடமையன்றோ?

– **'தமிழகத்தின் மரபுக்கலைகள்' நூலிலிருந்து**

வெறிநோய் தடுப்போம் மனிதரைக் காப்போம்

டாக்டர். பெரு.மதியழகன்
பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்,
சென்னை அரசு கால்நடை மருத்துவக் கல்லூரி

உலகில் எத்தனையோ வகையான நோய்கள் மனிதகுலத்திற்கு பாதிப்பை உண்டாக்குகின்றன. ஆனால் நோயின் பெயரைக் கேட்டாலே அச்சத்தை உண்டாக்கக் கூடிய அளவுக்கு மிகவும் கொடூரமான நோய் ரேபிஸ் (Rabies) எனப்படும் வெறிநோய். இது விலங்குகள் மூலம் மனிதர்களுக்குப் பரவும் ஒரு நச்சுயிரியால் ஏற்படும் நோயாகும்.

இந்த நோயுற்ற மனிதர்கள் இதுவரை யாரும் பிழைத்ததில்லை. வெறிநோயின் கொடுமையை சகிக்க முடியாத நிலையில் இந்நோயுற்ற மனிதர்களை நஞ்சு கொடுத்தும், கழுத்தை நெரித்தும், துப்பாக்கியால் சுட்டும், மூச்சுத் திணறச் செய்தும் கொன்று வந்தனர்.

வெறிநோய் வரலாற்றுத் திருப்பம்

பிரான்சு நாட்டில் 1810ஆம் ஆண்டு ஒரு சட்டம் இயற்றப்பட்டது. வெறிநோயினைக் குறித்து பல ஆராய்ச்சியாளர்கள் தமது உயிரையும் துச்சமென மதித்து துணிந்து அந்த வெறிநோய் நச்சுயிரிகளைக் கொண்டு ஆய்வு செய்தனர். முதன்முதலில் 1804ஆம் ஆண்டில் ஜெர்மனியைச் சேர்ந்த மருத்துவர் ஜென்னர் என்பவர் வெறிநோய் உமிழ்நீரின் மூலம் பாதிக்கப்பட்ட விலங்கிலிருந்து மற்ற விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் பரவுகிறது என்பதைக் கண்டறிந்தார்.

அடுத்து 1826ஆம் ஆண்டு வெறிநோயினால் பாதிக்கப்பட்ட விலங்கு மற்ற உயிரினங்களைக் கடிக்கும் போது அதன் உமிழ்நீரிலுள்ள நச்சுயிரி கடிபட்ட இடத்திலுள்ள நரம்பு மூலம் முதுகுத்தண்டு வழியாக மூளையை அடைந்து வெறிநோயை ஏற்படுத்துகின்றது என்று கண்டுபிடித்தார். ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு 1879ஆம் ஆண்டு விக்டர் கால்டியார் என்ற பிரான்சு நாட்டுக் கால்நடை மருத்துவப் பேராசிரியர் வெறிநோய் உண்டாக்கும் நச்சுயிரியை பாதிக்கப்பட்ட நாயிலிருந்து எடுத்து முயலுக்குச் செலுத்தி இந்நோயை ஏற்படுத்தி, பிறகு நோயுற்ற முயலின் மூளையை எடுத்து அதிலிருந்து ஆடுகளுக்கு வெறிநோய் வராமல் தடுக்கும் முறையைக் கண்டுபிடித்தார். வெறிநோய் தடுப்பில் வரலாற்றுத் திருப்பம் விக்டர் கால்டியரால் ஏற்படுத்தப் பட்டது. உலக கால்நடை மருத்துவ ஆண்டாக போற்றப்படும் இவ்வேளையில் மானசீகமாக அவருக்கு நமது நன்றியையும் வணக்கத்தையும் செலுத்துவோம்.



விக்டர் கால்டியரின் இந்த ஆய்வு முடிவுதான் பிரான்சு நாட்டு லூயி பாஸ்ட்டர் 1885ஆம் ஆண்டு வெறிநோய்க்கு ஒரு தடுப்பு மருந்தினைக் கண்டுபிடித்து ஜோசப் மெல்ஸ்ட்டர் என்ற சிறுவனுக்குச் செலுத்தி வெறிநோயிலிருந்து அவனைக் காப்பாற்றி உலகப் புகழ் பெற்றார். அதன்பின்னர் தான் இந்நோய்த் தடுப்பு மருந்துக்கு 'பாஸ்ட்டர் வெறிநோய் தடுப்பு மருந்து' என்றே வழங்கப்பட்டு வருகிறது.

வெறிநாய் – வெறிநோய்

வெறிநாய் கடிப்பதன் மூலமே மனிதர்களுக்கும் மற்ற பாலூட்டிகளான பூனை, குரங்கு, கீரி, நரி, ஓநாய் மற்றும் ஆடு, மாடுகளுக்கும் பரவுகிறது. உலகின் வட மற்றும் தென் துருவப் பகுதிகளில் இந்நோய் பெரும்பாலும் ஓநாய் மூலமாகவே பரவுகிறது. மெக்சிகோ, அயர்லாந்து மற்றும் வட ரஷ்யப் பகுதிகளில் நரி மூலம் மிகுதியும் பரவுகிறது. ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளில் வாம்பையர் வகை வவ்வால்கள் மூலமும் பரவுகின்றது. பொதுவாக நகரச் சூழலில் நாய், பூனை கடிப்பதின் மூலம் மனிதர்களுக்கு பரவுகிறது.

நம்நாட்டில் தெரு நாய்கள் மூலமே பெரிதும் பரவுகிறது. உலகின் வெறிநோய் இறப்பில் 96 விழுக்காடு இந்நோய் பரவ தெரு நாய்களின் பங்கே

அதிகம். இந்தியாவில் வெறிநோயால் ஆண்டுதோறும் 20,000 பேர் மடிந்துபோகிறார்கள்.

நாய் கடித்தபின் என்ன நடக்கிறது ?

நாயின் உமிழ்நீரில் உள்ள ரேபிடோ நச்சுயிரி கடிபட்ட இடத்திலிருந்து அருகில் உள்ள நரம்புகள் வழியாக தண்டுவடத்தைச் சேர்ந்து, அங்கிருந்து மூளையை அடைகிறது. உடலில் கடிபட்ட இடத்திற்கும், மூளைக்கும் உள்ள தூரத்தைப் பொருத்தே வெறி நோயின் அடைக்காலம் (Incubation Period) வேறுபடும். காலில் கடித்தால் அடைக்காலம் அதிகமாகவும், முகத்தில் கடிபட்டால் உடனே நோயின் பாதிப்பு தோன்றவும் ஏதுவாகிறது. பலருக்கு கடிபட்டதிலிருந்து ஒரு மாதத்திற்குள்ளும், சிலருக்கு மூன்று மாதத்திற்கு மேலும் ஆவதற்கு காரணம் இதுவே.

வெறிநோயின் அறிகுறிகள்

1. **நாய்களில்:** வெறிநோயால் பாதிக்கப்பட்ட நாயின் பாங்கியல்புகளில் மாறுதல்கள் காணப்படும். சில நாய்கள் வலியதாக்கும்; நட்புரிமை மறந்து எரிச்சலடையும்; இருட்டான இடங்களில் ஒதுங்கும், உடல் வெப்பம் மிகும்; கண்மணி விரியும்; வாயிலிருந்து உமிழ்நீர் மிகுதியும் வழியும். இதையடுத்து சில நாய்கள் சீற்றம் மிகுந்தோ (Furious form) அல்லது ஊமைத்தனமாகவோ இருக்கும்.

சீற்றம்மிகு நிலையாயின் ஓரிடத்தில் இருக்காமல் தவிப்புடன் இருக்கும்; சுய நினைவிழக்கும், வித்தியாசமாக ஊளையிடும்; விலங்குகள்; மனிதர்கள் மற்றும் கிடைத்ததைக் கடிக்கும். இதனால் வாய் மற்றும் நாக்கு காயப்பட்டு இரத்தம் கசியும். திசையறியாது ஓடும். மேலும் வெறி அதிகரித்து கல், மண், கட்டை மற்றும் அகப்பட்டதை விழுங்கிவிடும். இதையடுத்து முடக்குவாதம் கண்டு இறந்துவிடும்.

ஊமைத்தனம் நிலையில் உள்ள வெறிநோய்களில் அறிகுறிகள் காணப்படுவதில்லை. அமைதியாக காணப்படும். கூர்ந்து கவனிக்கும். நாம் அதை சீண்டினால் கடிக்கும். பின்னங்கால்களில் முடக்குவாதம் கண்டு பிறகு தொண்டை, தாடை பாதிக்கப்பட்டு தொங்கும் தாடை ஏற்படும். நாக்கு தொங்கிவிடும். உமிழ்நீர் வழிந்து கொண்டிருக்கும். இதையறியாத நாயின் உரிமையாளர் நாயின் தொண்டையில் ஏதோ எலும்புத்துண்டு அடைத்துள்ளதோ என எடுக்க முற்பட்டு வெறிநோய்க்கு ஆட்படுவர். ஊமைத்தன வெறிநோயில் நாய் உணவை உண்ணாமலே மெலிந்து நீரினை நக்கி அருந்த முடியாமல் பிறகு இறந்துவிடும்.

2. **பூனைகளில்:** மூர்க்கத்தனமாக மனிதர்களின் முகத்தை நோக்கி பாய்ந்து பிறாண்டும்; கடிக்கும். வெறிகண்ட பூனைகள் அடிக்கடி கத்தும்; உமிழ்நீர் வழியும்; இருப்பிடத்தைவிட்டு வெளியேறிவிடும். பயமின்றி திரியும்; ஒரு வாரத்தில் இறந்துவிடும்.

3. **மாடுகளில்:** பொதுவாக மேய்ச்சலுக்குச் செல்லும் மாடுகளை வெறிநோய் கண்ட நாய் மற்றும் வனவிலங்குகள் கடிப்பதால் வெறிநோய் ஏற்படும். நோயுற்ற மாடுகள் கொம்புகளால் முட்டும்; மற்ற மாடுகளுடன் சண்டையிடும்; தரையினைக் கிளறியும் கொம்புகளை முறித்துக் கொள்ளும். உமிழ்நீர் வழியும்; பின்னங்கால்கள் செயலிழக்கும். பிறகு உடல் முழுவதும் வாதம்கண்டு இறந்துவிடும். வெறிநாய்கள் கன்றுகளை எளிதில் கடித்துவிடும். பாதிக்கப்பட்ட கன்றுகளில் பாதிப்பு அதிகமாகி பசியின்றி காணப்படும். அடித்தொண்டையில் கத்தும். அடிக்கடி சிறுநீர் கழியும், உமிழ்நீர் வழியும், வாதமுற்று இறந்துவிடும். கன்றுகளைப் போலவே ஆடுகளிலும் அறிகுறிகள் தென்படும்.

4. **மனிதர்களில் :** வெறிநோய் கண்ட நாய் மற்றும் பூனை மூலமே மனிதர்களுக்கு அதிகம் பரவுகிறது. மனிதர்களில் வெறிநோயின் தன்மையும், அறிகுறிகளும் விலங்குகளில் இருந்து மாறுபட்டு காணப்படும். இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தண்ணீரைக் கண்டவுடன் அஞ்சி நடுங்குவர், இதை நீர்வெறுப்பு நோய் (Hydrophobia) என்பர். வெறிநோயுற்ற மனிதர்களுக்கு முதலில் உடல்வலி, கடிபட்ட இடத்தில் எரிச்சல், தொண்டையில் வலி, பசியின்மை தோன்றும். பிறகு பய உணர்ச்சிகள், மருளமருளப் பார்த்தல், வெளிச்சம், காற்று இவற்றை உணர்ந்ததும், எளிதில் பயப்படுவர். மிரட்சியுடன் காணப்படுவர். மூளை செயல் இழப்பதால் சுயநிலை தளர்ந்து, பேச்சில் உளறல், வலிப்பு, வாயில் நுறைத்த உமிழ்நீர் வழிதல் காணப்படும். தாடை, தொண்டை, விலா, கை, கால் தசைகள் செயலிழந்துவிடும். குரல் பாதிக்கப்பட்டு ஊளையிட்டவாறே கத்துவர். எந்த சிகிச்சையும் பயனின்றி இறந்துவிடுவர்.

வருமுன் காப்போம்.

1. வெறிநோய் பாதிக்கப்பட்ட பதிவுகள் பற்றிய குறிப்புகள் தெரிவிப்பது என்னவெனில் மனிதரில் பெரியவர்களைவிட குழந்தைகளே அதிகம் நாய்கடிக்கு ஆளாகிறார்கள். எனவே குழந்தைகளை நாய், பூனையுடன் இருக்கும் நிலையை தவிர்க்க வேண்டும்.



2. வீட்டிலும், காவலுக்குத் தோட்டத்திலும் வளர்க்கும் நாய்களுக்கு தவறாமல் தடுப்பூசி போடுவதுடன் எல்லா சூழ்நிலைகளுக்கும் அதை பழக்க வேண்டும். நாய்கள் பிறரால் அச்சுறுத்தப்படவோ அல்லது தூண்டப்படவோ நேரிடும் சூழல்களைத் தவிர்க்கவும்.

3. வளர்ப்பு நாய்களுக்கு பயிற்சிகள் அளித்து கட்டுப்பாட்டில் வைக்கவும். உணர்ச்சிக் கொந்தளிப்பாக்கும் விளையாட்டுகளை தவிர்க்கவும். அன்றாட நடைப்பயிற்சியும் அளித்து ஆரோக்கியமாக இருக்க வழிகாண்க. உங்களின் செல்ல நாய் வெளியில் சுற்றித் திரிய அனுமதிக்காதீர்கள்.

4. நாய் வளர்க்கும் வழிமுறைகளை ஆய்ந்து பேணி வளர்ப்பதும், உரிய பதிவுகள் செய்வதும், கால்நடை மருத்துவரை அணுகி நோய் தடுப்புகளை உரிய நேரத்தில் மேற்கொள்வதும் அவசியம்.

5. நாயிடமிருந்து கடிபடுவதை தவிர்க்கும் வகையில் நாயின் இயல்புகளை கால்நடை மருத்துவரிடமிருந்தும், படித்தும், அறிந்ததை வீட்டில் அனைவருக்கும் குறிப்பாக குழந்தைகளுக்கும் உணர்த்த வேண்டும். தெரு நாய் மற்றும் புதிய நாய்களிடம் குழந்தைகளை விழிப்பாக இருக்க அறிவுறுத்த வேண்டும்.

6. ஓடுவதால் நாய் துரத்தி கடிக்கும், அப்படிச் செய்வதைத் தவிர்க்கவும். அவை வந்து முகர்ந்து பார்த்துச் செல்லும் வரை நிற்கவும். குட்டிகளை கவனிக்கும் நாய், உணவு உண்ணும் நாய் மற்றும் தூங்கும் நாய்களை சீண்ட வேண்டாம்.

7. நாய் அதன் எல்லைக்குள் நுழையும் புதியவர்களை தாக்கும். எனவே எச்சரிக்கை தேவை. பேச்சுக் கொடுப்பதாயின் அமைதியாக பேசவும். அதன் கண்களைப் பார்த்து பேசுவதை தவிர்க்கவும்.

8. உணவுப் பொருள்களை வெளியில் கொட்டி வைக்காதீர்கள். அது தெரு நாய்களை ஈர்க்கும்.

9. வனவிலங்குகளிடம் நெருங்கி அணுகுவதையும், தொடுவதையோ செய்ய வேண்டாம். வௌவால் அடைபடும் குடியிருப்பு மற்றும் அலுவலகங்களில் இடம்பெறாதீர்கள்.

வெறிநாயால் கடிபட்டுவிட்டால் ?

1. கவலை வேண்டாம். அதேசமயம் அலட்சியமும் வேண்டாம். கடிபட்ட இடத்தை சோப்பு போட்டு கழுவவும்.

2. உடனே மருத்துவரை அணுகவும். வெறிநோய் பாதிப்பு ஏற்படாமல் இருக்க வெறிநோய் தடுப்பு மருந்தை போட்டுக் கொள்ளவும்.

3. கடித்த நாயை கூண்டில் அடைத்து வைக்க உரியவர்களுக்கு தகவல் தெரிவிக்கவும். மாநகராட்சி, நகராட்சிகளில் உள்ளாட்சி அதிகாரிகளுக்கு தெரிவிக்கலாம். பாதிக்கப்பட்ட நாய்கள் 10 நாட்களில் இறந்துவிடும்.

4. உங்கள் நாய் மற்றவரைக் கடித்துவிட்டால், உங்கள் முகவரியையும், உங்கள் நாய்க்கு தடுப்பூசி போட்ட விபரங்களையும் கடிபட்டவருக்குத் தெரிவிக்கவும். உங்கள் நாயின் தன்மையை கவனித்து வெறிநோய் அறிகுறி உண்டெனின் உடன் நடவடிக்கை எடுக்கவும். ஏனெனில் உங்கள் வீட்டில் உள்ளவர்க்கோ, மற்றவர்களுக்கோ மேலும் பாதிப்புகள் ஏற்படக்கூடாது. எனவே உடனே உங்கள் கால்நடை மருத்துவரை தொடர்பு கொள்ளுங்கள்.

5. மாறாக உங்கள் செல்ல நாயை வேறு வெறிநாய் கடித்துவிட்டாலும் உடனே கால்நடை மருத்துவரை அணுகி சிகிச்சை அளிக்க வேண்டும்.

வெறிநோய் ஒரு மிகக் கொடிய நோயாக இருப்பதால் நாய் வளர்ப்பவர்கள் உரிய நோய்த்தடுப்பு செய்ய வேண்டும். தெருநாய்களை மாநகராட்சியும், உள்ளாட்சி அமைப்புகளும் தடுப்பூசி போடுதல் உள்ளிட்ட நடவடிக்கை எடுப்பதன் மூலம் இந்நோயை தடுக்க முடியும். வெறிநோயுற்ற நாயிடம் கடிபட நேர்ந்தால் உடனே மருத்துவரை அணுகி சிகிச்சை பெற்றால் முற்றிலும் இந்த வெறிநோயின் பாதிப்பின்றி விடுபடலாம். இத்தோடு தெருநாய்கள் பெருகுவதை கட்டுப்படுத்த அவற்றை பிடித்து இனப்பெருக்கத் தடை அறுவை சிகிச்சை அளித்து புளூகிராஸ் மற்றும் தொண்டு நிறுவன கால்நடை காப்பகங்களில் ஒப்படைக்கவும். இவ்வாறு வெறிநோய் பெருகுவதையும், தெருநாய் பெருகுவதையும் தடுத்து மனிதரை பாதிப்பின்றி காத்திடலாம். ★

பழைய கற்கால கருவிகள்

தமிழகத்தின் வரலாறு 50,000–10,000 ஆண்டுகளுக்கு முன்னர் நிலவிய பழைய கற்காலத்திலிருந்து தொடங்குகிறது. திருவள்ளூர் மாவட்டம், பூண்டிக்கு அருகிலுள்ள கொற்றலை ஆற்றுப் பள்ளத்தாக்குப் பகுதியில் 112 பழைய கற்கால இடங்களும், அல்லிக்குழி

மலைத்தொடரில் பழைய கற்கால மக்கள் வாழ்ந்த 16 குகைகளும் உள்ளன. இப்பகுதியில் உள்ள பரிக்குளம் என்னும் ஊரில் 2006ஆம் ஆண்டில் தொல்லியல் துறை அகழாய்வு மேற்கொண்டது.

குடியம் குகை

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டத்தில் உள்ள அல்லிக்குழி மலைத்தொடரில் குடியம் என்னும் ஊருக்கருகில் கடல் மட்டத்திலிருந்து 122 மீட்டர் உயரத்தில் பழைய கற்கால மக்கள் வாழ்ந்த 16 குகைகள் உள்ளன. பழைய கற்காலம் முதல் இக்காலம் வரை இக்குகை மக்கள் பயன்பாட்டில் உள்ளதை அறியும் போது தமிழர்கள் தொடர்ந்து இங்கு இருந்துள்ளனர் எனத் தெரிகின்றது.

புதிய கற்காலம்

ஓரிடத்தில் நிலையாகத் தங்கி வாழ்க்கை நடத்தத் தலைப்பட்ட மனிதன் கால்நடைகளை வளர்த்தலுடன், வேளாண்மை செய்யவும் தலைப்பட்டான். இக்கால மக்கள் பயன்படுத்திய ஆயுதங்கள் புதிய கற்காலக் கல்லாயுதங்கள் எனப்பட்டன. இதன் காலம் கி.மு.4000 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் கருதப்படுகிறது. பெரும்பாலும் தருமபுரி, வேலூர், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் அதிகம் இவை கிடைக்கின்றன.

தொல்பழங்கால வரலாற்றில் புதிய கற்காலத்திலிருந்து வளர்ச்சியடைந்த காலம் பெருங்கற்காலம் என்று அழைக்கப்பட்டது. இதை ஆங்கிலத்தில் மெகாலித்திக் என்று அழைக்கின்றனர். மெகா என்றால் பெரிய, லித்திக் என்றால் கல் என்று பொருள். பெரிய கற்களைக் கொண்டு நினைவுச் சின்னங்கள் உருவாக்கியதால் பெருங்கற்காலம் என்று அழைக்கப்பட்டது. இவை இறந்தவர்களை அடக்கம் செய்வதற்காக எடுக்கப்பட்ட நினைவுச் சின்னங்களாகும். இதற்கு இரும்புக் காலம் என்று மற்றொரு பெயரும் உண்டு. இக்காலச் சின்னங்கள் உலகிலுள்ள பல நாடுகளில் காணப்படுகின்றன. தமிழகத்தில் பரவலாக இச்சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள் இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தரை அல்லது லேட்டரைட் பாறைக்குக் கீழே தோண்டி அல்லது குடைந்து அமைக்கப்படும் கல்லறைகள், தரை அல்லது பாறைக்கு மேலே அமைக்கப்படும் நினைவுச் சின்னங்கள். இப்பெரும் பிரிவுகளில் பல உட்பிரிவுகள் பிரிக்கப்பட்டுள்ளன. 1.கற்குகை, 2.கல்வட்டம், 3. குத்துக்கல், 4.தாழி, 5.ஈமப்பேழை, 6.கல்திட்டை, 7.குடைவரை, 8.தொப்பிக்கல், 9.குடைக்கல். இவை அப்பகுதியிலுள்ள இயற்கை அமைப்பையும், சுற்றுச்சூழ்நிலைக்கு ஏற்பவும் மாறுபடும். பெருங்கற்கால நினைவுச் சின்னங்களை பாண்டவர் வீடு, பாண்டவர் குட்டை, வாலியர் இருப்பு, பாண்டவர் கோயில்,

செத்தக்காடு, தாழி, மதமதக்காசால் போன்ற பல பெயர்களில் அழைக்கின்றனர்.

ஆதிச்சநல்லூர் அகழாய்வுத் தொல்பொருட்கள்

தென்னிந்தியாவின் உலோக காலமான பெருங்கற்காலத்தில் புழங்கு பொருட்களுள், இரும்பாலான அரும்பொருள்கள் பெரும்பான்மையாக அமைவதால் இக்கால கட்டம் இரும்புக் காலம் எனப் பாமரர் வழக்கில் சுட்டப்படுகிறது. பழந்தமிழரின் சங்ககாலத்தை

இது படம் பிடித்துக் காட்டுகிறது. தமிழ்நாட்டில் இனங்கண்டறியப்பட்டுள்ள சங்ககாலத் தொல்லியல் வாழிடங்களுள் திருநெல்வேலி மாவட்டம், திருவைகுண்டம் வட்டத்தில்

இடம்பெறும் ஆதிச்சநல்லூர் முதன்மையான இடத்தை வகிக்கிறது. சிந்து சமவெளி நாகரிகக் கால வாழிடங்களில் அகழ்வாராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுவதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்னரே (1876) தென் தமிழ்நாட்டின் ஆதிச்சநல்லூரில் அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அங்கிருந்து ஈமத்தாழிகள், ஈமப்பானைகள், இரும்புக் கருவிகள், வெண்கல கலைப் பொருட்கள், பொன் நெற்றிப்பட்டங்கள் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கிலான தொல்லியல் அரும்பொருள்கள் கண்டெடுக்கப்பட்டன.

சங்ககால ஆதிச்சநல்லூரில் அகழ்ந்தெடுக்கப்பட்ட அரும்பொருட்களுள் முதன்மையானவை சுடுமண்ணாலான ஈமத்தாழிகள், பொன்னாலான வேலைப் பாடமைந்த நெற்றிப்பட்டங்கள், இரும்பாலான வேளாண் கருவிகள், வீட்டுப் பயன்பாட்டுப் பொருட்கள், பலவகைப் போர்க்கருவிகள், வெண்கலத்தாலான தாய்த் தெய்வச் சிறு உரு, கவின் கலைப்பொருட்கள், அணிகலன்கள் உள்ளிட்டவை ஆகும். சங்ககாலத் தமிழரின் உலோகவியல் தொழில்நுட்பம், மண்பாண்டக் கலை, நெசவு, போர் மரபியல் ஆகியன ஆதிச்சநல்லூரில் அகழ்ந்தெடுக்கப்பட்ட அரும்பொருள்கள் வாயிலாக நமக்குத் தெரிய வருகின்றன. குறிப்பாக, கரிப்பொருள் சேர்த்து இரும்பை வலுவாக்குதல், ஆர்சனிக் கலந்து வெண்கலத்தை உறுதிப்படுத்துதல், மெருகூட்டி மண்பாண்டங்கள் வனைதல், மண்பாண்டங்களின் மீது வெள்வரிக் கோடுகளால் அழகுபடுத்துதல், தாள் திண்மையிலான உலோகப் பொருள்கள் மீது ஒழுங்கு வரிசையில் துளைகளிட்டு அழகுபடுத்துதல் உள்ளிட்ட சங்ககாலத் தமிழரின் தொழில்நுட்ப அறிவுத் திறன்கள் ஆதிச்சநல்லூர் அரும்பொருள்கள் வாயிலாக வெளிப்படக் காணலாம்.

கல்லணை

தமிழர்களின் அறிவுத்திறனை, குறிப்பாக நீரைச் சேமித்து வேளாண்மைக்குப் பயன்படுத்தியச் செய்தி சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது. சங்ககாலச் சோழமன்னன் கரிகாலன் காவிரி ஆற்றின் குறுக்கே கல்லால் அணை செய்தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சோழர் கால குடவோலை தேர்தல் முறை

குடவோலைத் தேர்தல் முறை பற்றி அகநானூறு 77ஆம் பாட்டில் குறிக்கப் பெறுகின்றது. உத்திரமேரூர், காஞ்சிபுரம் மாவட்டம், கி.பி.10ஆம் நூற்றாண்டு சோழர் காலத்தில் முதலாம் பராந்தகச் சோழன் கல்வெட்டில், குடவோலைத் தேர்தல் முறை பற்றி விரிவாகக் கூறப்பெற்றுள்ளது. தேர்தல் வயது வரம்பு எழுபது வரை குறிப்பிடப்பட்டுள்ளது. கையூட்டு வாங்கியமை போன்ற குற்றங்களைச் செய்தவர்கள், குற்றம் புரிந்துள்ளவர்களின் உறவினர்களும் தேர்தலில் நிற்க தடை செய்யப் பெற்றுள்ளனர். தேர்தலில் நிற்பவர்கள் சொத்து உள்ளவர்களாகவும், கல்வியறிவு மிக்கவர்களாகவும் இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றது. இந்தத் தேர்தல் முறை திருநெல்வேலி மாவட்டம் மானூரிலும் மற்ற பிரம்மதேயங்களிலும் நடைபெற்றிருக்க வேண்டும். இந்தத் தேர்தல் கிராமத்தில் உள்ள சபை வாரிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க நடைபெற்றது.

பெருங்கற்காலம் அல்லது இரும்புக்கால ஈமச் சின்னங்கள்

ஈமப்பேழை, இருகூர், பெருங்கற்காலம்

பண்டைய தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டில் ஈமக்குழிகளில் இறந்தவர்களைப் புதைப்பதற்கு ஈமப்பேழைகளைப் பயன்படுத்தி உள்ளனர்.

அகழாய்வுத் தொல்பொருட்கள்

கலவட்டம

வரலாற்றுக் காலத்தில் சிறப்புற்றிருந்த பல இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இவற்றில் சங்க இலக்கியங்கள் கூறுகின்ற நகரங்களான உறையூர், பூம்புகார், கொற்கை, அரிக்கமேடு, அழகன்குளம், கொடுமணல் போன்றவை குறிப்பிடத்தக்கவை. கடற்கரை நகரங்களான பூம்புகார், கொற்கை, அரிக்கமேடு, அழகன்குளம், வசவசமுத்திரம் போன்றன வெளிநாட்டினருடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்ததை அறிய முடிகின்றது. ரோம் நாட்டின் மட்கலன்கள், காசுகள், சீன நாட்டின் மட்கல ஓடுகள், காசுகள் போன்றவை கடல் வாணிகத் தொடர்பை வெளிப்படுத்து கின்றன. இத்துறைமுகங்களின் வழியாக சந்தனம், அகில், மிளகு, முத்து, அரிய கல்மணிகள் போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன. அரிக்கமேடு, அழகன்குளம் ஆகிய அகழாய்வில் ரோம் நாட்டைச் சேர்ந்த அரிட்டைன், ஆம்போரா சாடிகள், ரௌலட்டட் வகை மட்கலன்கள் அதிக அளவில் கிடைத்துள்ளன. ஆம்போரா சாடிகள் மதுவகைகளைக் கொண்டுவருவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

வரலாற்றுக் கால தொடக்க நிலையில் சங்க இலக்கியங்களில் தமிழகம் வெளிநாடுகளுடன் கொண்டிருந்த வாணிகத் தொடர்புகள் பற்றிய செய்திகள் வரலாற்றுக் காலத்திய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கிடைத்த பொருட்கள் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது.

கற்சிற்பங்கள்

இராஜஸ்தானில் உள்ள காளிபெங்கன் என்ற ஊரில் நடைபெற்ற அகழாய்வில் சிந்துவெளித் தொல்பொருட்கள் கிடைத்துள்ளன.

சீனநாட்டு சாடி, கொற்கை

தமிழகத்திற்கும், சீனாவிற்கும் இடையிலான தொடர்பினை வெளிப்படுத்தும் வகையில் சீனநாட்டுப் பானை ஓடுகளும், சீனக் காசுகளும், தமிழகம் முழுவதும் கிடைக்கின்றன.

காசுகள்

இலச்சினை பொறித்த காசுகள், சங்ககாலக் காசுகள், ரோமானிய, சோழர், பாண்டியர் மற்றும் விஜயநகர அரசர்களின் காசுகள் கிடைத்துள்ளன.

கரூர் அமராவதி

அமராவதி ஆற்றில் கிடைத்த அரிய தங்கத்தால் ஆன விரலணிகள் எழுத்துடன் மற்றும் உருவங்களுடன் கூடியவை கிடைத்துள்ளன.

செப்புத் திருமேனிகள்

தென்னிந்தியா, குறிப்பாக தமிழ்நாடு கோயில்களுக்குப் புகழ் பெற்றது. இக்கோயில்களில் மாதந்தோறும் திருவிழாக்கள் நடத்தப்படும். அக்காலங்களில் செப்புத் திருமேனிகள் நன்கு அலங்கரிக்கப்பட்டு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்படும். தென்னகத்தைப் போன்று மற்ற இடங்களில் செப்புத் திருமேனிகள் வார்ப்புக் கலை உன்னத நிலையை அடையவில்லை.

உலகிலேயே வார்ப்புக் கலையில் மிக உன்னத நிலை வகிப்பது தென்னாடு. இங்குள்ள செப்புச் சிலைகளின் அழகு கண்டு உலகமே வியக்கிறது. கிறித்தவ சகாப்தத்தின் தொடக்கத்திலேயே வார்ப்புக் கலையை பற்றிய மிக உயர்ந்த நூல்கள் தென்னகத்தே தோன்றியுள்ளன. இன்றளவும் வார்ப்புக் கலையைத் தொழிலாகக் கொண்ட ஸ்தபதிகள் ஆகமங்களைக் கொண்டே சிலைகளைச் செய்து வருகின்றனர்.

கல் திட்டைகள்



சிலைகள் செய்யப்படும்போது முதலில் மெழுகினால் உருவத்தை அமைத்து, அதன்மேல் வண்டல் மண் பூசி நெருப்பிலிட, மெழுகு உருகி மறைந்து விடுகிறது. இவ்விதம் தோன்றிய வார்ப்பில் செப்புக் குழம்பு ஊற்றப்படுகிறது. இது குளிர்ந்தவுடன் மண் வார்ப்பை உடைத்து படிமம் எடுக்கப்படுகிறது. இதன் பின்னர் ஸ்தபதியின் கைத்திறனுக்கு ஏற்பச் சிலைக்கு உயிர் ஊட்டப்பட்டு அழகுபடுத்தப்படுகிறது.

உலகப் புகழ் பெற்ற செப்புத் திருமேனிகள் தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களிலும், சென்னை அரசு அருங்காட்சியகத்திலும், தஞ்சையில் உள்ள கலைக்கூடத்திலும் உள்ளன.

– தொல்லியல் துறை வெளியிட்ட நூலிலிருந்து.



R.N.I. No.21446/70 Regn.No.TN/ARD/48/09-11
& WPP No. TN/PMG(CCR)518/09-11

தமிழ்முரசு

கரம் இணைப்போம் — எய்ட்ஸை ஒழிப்போம் — வாழ்வை காப்போம்

எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பாதிக்கப்பட்டவர்களை அன்போடு அரவணையுங்கள்

ஒன்று சேர்ந்து விளையாடுவது

கை குலுக்குவது மற்றும் கட்டி அணைப்பது போன்ற சாதாரண பழக்க வழக்கத்தினால் எய்ட்ஸ் பரவாது.

எச்.ஐ.வி. தொற்று உள்ள ஒரு நபரின் இருமல் மற்றும் தும்மலின் மூலம் மற்றவருக்குப் பரவாது.

எச்.ஐ.வி. உள்ள நபர் பயன்படுத்திய கழிவறையைப் பயன்படுத்துவது அல்லது பொருட்களை மாற்றிக் கொள்வதால் பரவாது.

கொசுக்கடி மூலம் எய்ட்ஸ் பரவாது.

எச்.ஐ.வி. / எய்ட்ஸ் எவ்வாறு பரவுகிறது?

பாதுகாப்பற்ற முறையில் பலருடன் உடலுறவு கொண்டால் எச்.ஐ.வி. தொற்றுள்ள ஒரு நபரிடமிருந்து மற்றவருக்கு பரவும்.


பரிசோதிக்கப்படாத எச்.ஐ.வி. கிருமி உள்ள இரத்தம் மூலம் மற்றவருக்குப் பரவும்.

எச்.ஐ.வி. தொற்றுள்ள கர்ப்பிணிப் பெண்ணிடமிருந்து கருவில் இருக்கும் குழந்தைக்குப் பரவ வாய்ப்பு உள்ளது.

கிருமி தொற்றுள்ள சுத்தம் செய்யப்பட்டாத பிளேடுகளை, ஊசிகளை பகிர்ந்துகொள்வதால் பரவும்.

ஒரு துளி இரத்தம் போதுமே உங்கள் உடல் நலனை அறிய
திருமணம், குழந்தைப்பேறு, இரத்ததானம் ஆகியவைகளுக்கு முன் இரத்தத்தில் எச்.ஐ.வி உள்ளதா என பரிசோதனை செய்யுங்கள்

மேலும் விவரங்கள் / ஆலோசனைகளுக்கு அருகிலுள்ள அரசு மற்றும் மாநகராட்சி மருத்துவமனைகளின் ஒருங்கிணைந்த ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்களை (ICTC) அணுகவும்

எச்.ஐ.வி. / எய்ட்ஸை எவ்வாறு தடுக்கலாம்?

திருமணத்திற்கு முன் உடலுறவை தவிர்த்தல்.
திருமணத்திற்கு பின் தாம்பத்தியத்தில் ஒழுக்கமாயிருத்தல்.

பாதுகாப்பான உடலுறவிற்கு ஆணுறையைப் பயன்படுத்துதல்.

பரிசோதிக்கப்பட்ட இரத்தத்தையே பயன்படுத்துதல். இரத்த தானம் செய்யப்படுவதற்கு முன் பெறப்படும் இரத்தம் எய்ட்ஸ் (எச்.ஐ.வி.) கிருமியால் பாதிக்கப்படாதது என பரிசோதித்து உறுதி செய்தல் வேண்டும்.

எச்.ஐ.வி. பாதிக்கப்பட்ட தாயிடமிருந்து பிறக்கும் குழந்தையை எச்.ஐ.வி.கிருமி தாக்காமல் பிரசவத்தின் முன் தரும் மருந்து மூலம் தடுக்கலாம். பிரசவத்திற்கு முன்னால் உரிய சிகிச்சை மேற்கொண்டால் தாயிடமிருந்து எச்.ஐ.வி. குழந்தைக்கு பரவாமல் தடுக்கலாம்.

இரத்தம் மற்றும் மனித உடற்கசிவுகள் தொடர்பாக பயன்படுத்தப்படும் ஊசிகள்,பிளேடுகள் மற்றும் பிற உபகரணங்களை ஒரு முறை மட்டும் பயன்படுத்தி அழித்து விட வேண்டும். இந்த உபகரணங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்

சென்னை மாநகராட்சி எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சங்கம்

82, திரு.வி.க. சாலை, மைலாப்பூர், சென்னை - 4.
இலவச தொலைபேசி : 1913

CAPACS

வெளியீட்டு ஆணை எண்.959/வரைகலை/விளம்பரம்/ 2010